
13410
கொழும்புத் தமிழ்ச் சங்க
வரை நிலைச் சபை,
பதிவு இல. 73
10. 5 1950
அறக்கட்டளை நிலையம்
சுவீட்டு இல. 14805
7 6. 1968

## திருமந்திரம

# சிறப்பு நிகழ்ச்சி மலர்



841.316
திருமு
SLIPR


09-11-1992

SHELTER OF SILENCE

MOUNASHRAM

# பொருளடக்கம்


| | |
|---|---|
| வாழ்த்துரை | 01 |
| முன்னுரை | 02 |
| திருமூலரும் குருவும் | 12 |
| திருமந்திரத்தில் நல்லொழுக்கம் | 17 |
| திருமந்திரத்தில் அறவாழ்க்கை | 24 |
| திருமந்திரத்தில் யோகப்பழக்கம் | 46 |
| திருமந்திரத்தில் குருநெறி நிற்றல் | 62 |
| திருமந்திரத்தில் அகப்புற உணர்வு | 84 |
| திருமந்திரத்தில் அருள் நுகர்வு | 97 |
| திருமந்திரத்தில் பேராப்பெருவாழ்வு | 106 |



# வாழ்த்துரை - திருமூலர் பெருமான்

'யாவர்க்கு மாம் இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம் பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம் பிறர்க் கின்னுரை தானே'

யாவர்க்குமாக, எல்லா ஜீவராசிகளுக்குமாக, இறைவனுக்கு ஒரு பசுமையான இலையை சாத்துங்கள்.

அது சாத்தியமாகாவிடில்,

யாவர்க்குமாக, எல்லா ஜீவராசிகளுக்குமாக; கண்முன்னே தோன்றுகின்ற, தென்படுகின்ற பசுவிற்கு ஒருபிடி 'புல்லு' வழங்குங்கள்.

அது சாத்தியமாகாவிடில்,

யாவர்க்குமாக, எல்லா ஜீவராசிகளுக்குமாக, நாம் உண்ணும்பொழுது ஒரு கைப்பிடியளவு பரிமாறி அருந்துங்கள்.

இதுவும் சாத்தியமாகாவிடில்,

யாவர்க்குமாக, எல்லா ஜீவராசிகளுக்குமாக; இனிமையான வார்த்தைகளைப் பேசுங்கள். பிறருடன் அன்பான வார்த்தைகளைப் பேசுங்கள். அன்பு செய்யுங்கள்! அன்பு செய்யுங்கள்!

திருமூலர் பெருமான் திருவடி வாழ்க.

----------

# முன்னுரை

## திருமூலரும் திருமந்திரமும்

மூன்று மலைகள் கீழைத்தேய நாட்டில் இருந்து சிறப்பு மிகுந்த ஆத்மீகச் செல்வங்களை என்றும் வாரி வழங்கிய வண்ணமே உள்ளன. அவையாவன;

1. மகேந்திரமலை - மேருமலை (மறைவாக உள்ளது.)
2. விந்தயமலை - (பாரதமாதாவின் மத்தியில் உள்ளது.)
3. இமயமலை - (பாரதமாதாவின் வடபாகம் உள்ளது.)

மேருமலையில் இருந்தே ஆகமங்கள் புறப்படுகின்றன. அவை விந்திய மலைக்கு ஊடாகச் சென்று, இமயமலையின் ஒரு சிகரமாகிய கைலாயமலையில் ஒன்று சேருகின்றன. அங்கே கல்லால நீழலின் கீழ் மௌனநிலையில் அமர்ந்திருக்கும் ஞானகுருவாகிய தெட்சணாமூர்த்தியின் சின்முத்திரையில் இருந்து ஆகமங்கள் வெளிப்படுகின்றன. அந்த அற்புதமான காட்சியை நேரடியாக சுந்தரநாத முனிவர் கண்டு களித்துக்கொண்டு இருக்கின்றார். இம் முனிவருடன் மற்றும் எழுவர் பங்கு கொண்டுள்ளனர்.

அப்பொழுது அங்கே, கைலாயமலையின்ன ஒருவர் வலம் வந்துகொண்டு இருக்கின்றார். அவர் தான் தென்னாட்டினைச் சேர்ந்த மாலாங்க தேவர் ஆவர். மாலாங்கர்; யோக நித்திரையில் இருக்கும் எட்டு நாதர்களையும் கல்லால மர நீழலின் கீழ் காணுகின்றார். மாலாங்கர்; எட்டு நாதர்களில் ஒருவராகிய சுந்தரநாத முனிவரை மிகவும் நுட்பமாக அணுகுகின்றார்.

முனிசிரேஉஷ்டரே! நீங்கள் எல்லோரும் யாவர்? என மாலாங்கர் வினவுகின்றார். அப்பொழுது சுந்தரநாத முனிவர்;

திருநந்திதேவரின் அருளினாலே நாதாந்த முடிபை நாம் எல்லோரும் கண்டு அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம். அதனால் எமக்கு நாதர் எனும் தீட்சா நாமம் வழங்கப்பட்டுள்ளது. நாதாந்த முடிவின் சுந்தரத்தை அனுபவித்துக்கொண்டிருப்பதால் எனக்கு சுந்தரநாதர் என்று நாமம் வழங்கப்பட்டுள்ளது.

திருநந்திதேவரின் அருளாலே முதலை - மூலத்தை - மூலாதாரத்தை- மூலனை நாம் எல்லோரும் நாடினோம்.

காலமுடிபை உணர்பவர் - காலாதீதர் என்றும்
நாதமுடிபை உணர்பவர் - நாதர் என்றும்
மூலமுதலை உணர்பவர் - மூலர் என்றும்
சித்த முடிபை உணர்பவர் - சித்தர் என்றும்
வேத முடிபை உணர்பவர் - வேதியர் என்றும்
யோகமுடிபை உணர்பவர் - யோகியர் என்றும்
போகமுடிபை உணர்பவர் - போகர் என்றும்

வழங்கப்படும்.

'நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றோம்
நந்தி அருளாலே மூலனை நாடினோம்......'

மாலாங்கர் தனது நாட்டு நிலைமை பற்றிக் கூறுகின்றார். எம் நாட்டில் உள்ள பசுக்கள் - ஆனிரைக் கூட்டங்கள் - ஆன்மகோடிகள் மேய்ப் பாரின்றித் தவிக்கின்றன. முனிசிரேஉந்டரே! தாங்கள் தான் எங்களுக்கு மூலத்தை உணர்த்த - அதனை நோக்கி வழிகாட்ட முடியும். தாங்கள் மூலத்தை - மூலாதாரத்தை - முதலை - மூலனை நாடியதால்; மூலரே!, திருமூலரே!, திருமூலநாதரே! எம் நாட்டுக்கு எழுந்தருளுங்கள். எமது குறைகளை எல்லாம் நீக்கிவிடுங்கள், என்று பகர்ந்து மாலாங்கர் சுந்தரநாத முனிவரை அழைக்கின்றார்.

திருமூலர் திருநந்திதேவரின் - தெட்சணாமூர்த்தியின் முழு அருளை, ஆதரவை, அன்பைப் பரிபூரணமாகப் பெற்று;

'...நந்தி அருளாவ தென்செய்யும் நாட்டினில்.....' எனப் பலவாறு எண்ணிக்கொண்டு மாலாங்கருடன் கைலாயமலையில் இருந்து தென்னாட் டிற்குப் புறப்படுகின்றார். பேரம்பலமாகிய கைலாயத்தில் இருந்து சிற்றம் பலமாகிய தென்னாட்டை நோக்கிப் புறப்படுகின்றார். திருமூலர் பெருமான் முதலாவது படிக்கே இறங்கி வருகின்றார். மற்றைய எல்லோரும் கீழ் இருந்து மேல் நோக்கிச் செல்கின்றார்கள். திருமூலரோ! உலக நன்மை கருதி கீழ் நோக்கி வருகின்றார்; பேரம்பலத்திலிருந்து சிற்றம்பலத்திற்கு, கைலாயத்தில் இருந்து சிதம்பரத்திற்கு.

'....நந்தி வழிகாட்ட நானிருந் தேனே'

என்றவாறு திருவாவடுதுறையில் - யோகநிட்டையில் அமர்ந்துவிட்டார்.

திருமூலர் தனது வரவின் காரணத்தைக் கூறுகின்றார்.

"மாலாங்கனே இங்கு யான் வந்த காரணம்...."
.....சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே"

மாலாங்கர் தான் என்னை இங்கு அழைத்து வந்தார். அவர் எனது சீடர்களுள் முதல்வராவர். சிறப்பு மிகுந்த அங்கமாக விளங்கும் வேதத்தை— அதாவது ஆகமத்தைச் செப்ப வந்தேன்.

இப்பொழுது திருவாவடுதுறையிலே பாடம் ஆரம்பிக்கப்படுகின்றது. அங்கே திருமூலர் வீற்றிருக்கின்றார். அவரைச் சூழ எழுவர் அமர்ந்துள்ளனர். அவர்கள் முறையே, மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், கந்துருக்கி, காலாங்கி, கஞ்சமலையன் ஆவர்.

திருமூலர் கடவுளை வாழ்த்துகின்றார்.

<u>ஒன்று</u> அவனாகவே உள்ளது. அதுவாக உள்ளது. அது எங்கும் என்றும் ஒன்றாகத் தானாய் உள்ளது.

<u>இரண்டு</u> அவனின் சிறந்த அருளாக உள்ளது. அதன் அருட் கடாட்சமாக வெளிப்படுகின்றது. அதன் அருட் சக்தியாகத் தொழிற்படுகின்றது.

<u>மூன்று</u> நிற்கின்றான் — நிற்கின்றது. மண்ணிலே, வானிலே, விண்ணிலே புலப் படுகின்றது.

<u>நான்கு</u> உணர்கின்ற நிலை — உணர்த்தப்படுகின்ற நிலை: அறம், பொருள், இன்பம், வீடு பேறாக; சரியை, கிரியை, யோகம், ஞானமாக; பிரமச்சரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசமாக.

<u>ஐந்து</u> வெல்லுகின்ற நிலை; ஐந்து புலன்களை, ஐந்து பூதங்களை, ஐந்து கருவிகளை, தன்மாத்திரைகளைக் கடந்து போகின்ற நிலை.

<u>ஆறு</u> விரிகின்ற நிலை; ஆறு ஆதாரங்களூடாக, ஆறு அத்துவாக்களூடாக, ஆறு அந்தங்களூடாக மலர்கின்ற நிலை.

<u>ஏழு</u> செல்கின்ற நிலை; ஏழு அண்டங்கள், ஏழு கடல்கள் கடந்த நிலை.

<u>எட்டு</u> யாவற்றையும் உணர்ந்து அமருகின்ற நிலை. எட்ட முடியாத நிலை. இது அகர நிலை — இது சிவநிலை — சிவமாக வெளிப்படுகின்ற, புலப்படுகின்ற நிலை.

'ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்....'

சீடர்களில் ஒருவரிடம் இருந்து ஓர் கேள்வி எழுகின்றது! முனிசிரேஷ்டரே, நீங்கள் இப்படியான ஒரு பாதையைக், கோலத்தை ஏன் தெரிவு செய்தீர்கள்?

என்னுடைய தாயாரும் தந்தையாரும் 49 பிறவிகளுக்கும் ஆவணம் எழுதிவைத்து விட்டார்கள். அதுவும் அன்றே – குழந்தை வரம் வேண்டிய அன்றே சிவனுக்கு உரியவன் – சிவதொண்டு செய்பவன் என உயில் எழுதி வைத்துவிட்டார்கள். நானும் அதற்கு இசைந்தவாறு, ஏற்றவாறு வாழ்ந்து வருகின்றேன்.

'என்தாயொடு என்னப்பன் ஏழேழ் பிறவிக்கும்
அன்றே சிவனுக்கு எழுதிய ஆவணம்......'

அப்படியானால் தவசிரேஷ்டரே! வினை என்று ஒன்று உண்டா? பிறப்பு உண்டா? இறப்பு உண்டா? எனக் கேள்வி எழுப்பப்படுகின்றது. அப்பொழுது திருமூலர் உபதேசம் செய்கின்றார்.

<u>ஒன்று</u> விண்ணிலை – தெளிவுநிலை–சமாதிநிலை, நாதாந்த முடிபில் ஏற்படுகின்ற நிலை, அதாவது, நாதமும் பிந்துவும் இணைந்திருக்கின்ற நிலை. மனமற்ற–நினைவற்ற–செயலற்ற நிலை.

<u>இரண்டு</u> இழிகின்ற நிலை – தெளிவுநிலையில் இருந்து விலகுகின்ற நிலை, நாதமும் பிந்துவும் பிரிந்து போகின்ற நிலை. மனமுள்ள, நினைவுள்ள, செயலுள்ள நிலை. அதாவது, விண்ணில் இருந்து விடுபடுகின்ற நிலை.

<u>மூன்று</u> வினையாகும் நிலை – வினை என்பது விண்ணில் இருந்து இழிகின்றதால் ஏற்படுவதாகும். எத்தன்மையதாய் இழிவு ஏற்படுகின்றதோ, அத்தன்மைக்கு ஏற்ப வினை இருக்கும்.

<u>நான்கு</u> மெய்கொள்கின்ற நிலை– எப்படி, எப்படி விண்ணில் இருந்து இழிவதால் வினை உண்டாகின்றதோ, அந்த வினைக்கு ஏற்ப மெய் கொள்ளப்படுகின்றது. உடம்பு எடுக்கப்படுகின்றது. ஆகவே, பிறப்பு உண்டு.

ஐந்து தாள் காவலாகும் நிலை — குளிர்ச்சி பொருந்திய திருவருள் பொதிந்த பாதம் திருவடி தலையாக — முதலாகக் — காவலாக உள்ளே வைக்கப்படுகின்றது.

ஆறு உள்ளே உருக்குகின்ற நிலை — ஐந்தத் திருத்தாள், திருவடி உள்ளே இருந்து எம்மை உருக்குகின்றது. முன்பு விண்ணில் இருந்து இழிந்ததனால் ஏற்பட்ட, சேர்க்கப்பட்ட வினை எல்லாம் போகும் வண்ணம் எம்மைத் தெளிவு நிலைக்கு மாற்று கின்றது.

ஏழு காட்டுகின்ற நிலை — ஒப்புவமை எதுவும் கூறமுடியாத ஆனந்தக் கண்ணினை உள்ளே காட்டுகின்ற நிலை.

எட்டு அழுகின்ற நிலை — இவ்வாறு நிகழும்பொழுது களிம்பு அழுக் கப்படுகின்றது. விண்ணில் இருந்த இழிந்த மையால் உண்டான வினை முற்றாக விலக் கப்படுகின்றது. அதனாலே இறப்பு ஏற் படுகின்றது. ஆதிநிலை, முதல்நிலை, தெளிவுநிலை, சமாதிநிலை, மனமற்ற, நினைவற்ற, செயலற்ற நிலை கைகூறுகின் றது.

வினை உண்டு, பிறப்பு உண்டு, இறப்பு உண்டு என்று விளம்பி அற்புத மாகச் சந்தேகங்களையெல்லாம் நிவர்த்தி செய்து வருகின்றார் திருமூலர் பெருமான்.

'விண்ணின்று இழிந்து வினைக்கு ஈடாய் மெய்கொண்டு...'

குருநாதா! இந்த உலகம் ஏன் குழப்பம் நிறைந்ததாகக் காணப்படு கின்றது?

நடுவுநிலையில் இருந்து தவறிவிட்டது. நீதியினை இழந்துவிட்டது. பக்கம் சாரும் இயல்பு அதிகரித்துவிட்டது. அதனாலே உலகம் சமநிலையை இழந்துவிட்டது, குழம்பிவிட்டது, சரிந்துவிட்டது.

'நடுவுநில்லாது இவ்வுலகம் சரிந்தது.....'

முனிபுங்கவரே! அப்படியானால் இந்த உலகம் எல்லாம் அழிந்து விடுமா?

இந்த உலகம் மட்டுமல்ல, அண்டம், அண்டசராசரம் ஒருபோதும் அழியப்போவதில்லை. ஆனால், ஒடுங்கி, சுருங்கி உறக்கநிலையில் இருக்கும். அவ்வாறே இந்த உடல் சிதைந்தாலும் உள்ளே உள்ள பிராணன் நிலைபேறாக இருக்கும். மீண்டும் மறுபடி மறுபடி வெளிப்படும்.

'அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை
பிண்டம் சுருங்கில் பிராணன் நிலைபெறும்...'

குருநாதரே! எங்களுக்கு வித்தையென்றால் என்ன? ஞானம் என்றால் என்ன? தெளிவுபடுத்துங்கள்.

வித்தைகளுள் மிகவும் சிறந்தது பஞ்சதசாட்சரி. ஞானத்தில் மிகவும் சிறந்தது சிவஞானம் – பஞ்சாட்சரம். முதலில் பஞ்சதசாட்சரியை எடுத்துக் கொள்வோம்.

பஞ்சதசாட்சரி 15 எழுத்துக்களை உடையது. இது சத்தியைப் பெண்ணாக உருவகிக்கின்றது. சத்தியின் உச்சி; சத்தியின் கழுத்து, சத்தியின் திருவடி என்று மூன்று நிலைகளாகக் கூறப்படுகின்றன.

முதலில் : உச்சியை ககராதி என்போம். அதில், க ஏ ஈ ல ஹ்ரீம் எனும் 5 எழுத்துக்கள் உண்டு. உச்சி பொன்னிறம்.

இரண்டாவது: கழுத்தை அகராதி என்போம். அதில், ஹ ஸ க ஹ ல ஹ்ரீம் எனும் 6 எழுத்துக்கள் உண்டு. கழுத்து செம்மை நிறம்.

மூன்றாவது: திருவடியினை சகராதி என்போம். அதில் ஸ க ல ஹ்ரீம் எனும் 4 எழுத்துக்கள் உண்டு. திருவடி தூய வெண்மை நிறம்

'ககராதி ஓர் ஐந்தும் காமிய பொன்மை.
அகராதி ஓராறு இரத்தமே போலும்
சகராதி ஓர் நான்குந் தான் சுத்த வெண்மை.
ககராதி மூவித்தை காமிய முத்தியே.'

இப்பதினைந்து எழுத்துக்களையும் பொருளுணர்ந்து இருதய கமலத்தில் பதித்து நாம் மெய்யுணர வேண்டும். இந்த வித்தை சிவஞானத்திற்கு எம்மை அழைத்துச் செல்கின்றது. ஆகவே, இதனைத் தெளிந்து கொள்ளுங்கள். உணர்ந்து கொள்ளுங்கள். பஞ்சதசாட்சரிதான் சத்தி மூல மந்திரம். இது காதிவித்தை, நுண்வித்தை, தகரவித்தை என்றும் வழங்கப்படும்.

## பதினைந்து எழுத்து.

க ................. சிவன்
ஏ ................. சத்தி
ஈ ................. காமன்
ல ................. பூமி
உற்ரீம் .............. சத்திமூல எழுத்து
உற ................. ஞாயிறு
ஸ ................. திங்கள்
க ................. காமன்
உற ................. ஆகாயம்
ல ................. இந்திரன்
உற்ரீம் .............. சத்திமூல எழுத்து
ஸ ................. பரை
க ................. காமன்
ல ................. திருமால்
உற்ரீம் .............. சத்திமூல எழுத்து

பஞ்சாட்சரம் – திருவைந்தெழுத்து 18 வகைப்படும். அவையாவன:
1. தூலம் 2. சூட்சுமம் 3. அதிசூட்சுமம் 4. சூட்சுமாசூட்சுமம் 5. காரணம் 6. மகாகாரணம் 7. ஒருதலை மாணிக்கம் 8. இருதலை மாணிக்கம் 9. எட்டு எழுத்து 10. ஏழு எழுத்து 11. ஆறு எழுத்து 12. ஐந்து எழுத்து 13. நாலு எழுத்து 14. மூன்று எழுத்து 15. இரண்டு எழுத்து 16. ஓரெழுத்து 17. பன்னிரண்டு கலைப்பிரசாதம் 18. பதினாறு கலைப்பிரசாதம்.

இவை ஓதும் முறையும் உணரும் முறையும், உணர்த்தும் முறையும், நிறுத்தும் முறையும், நிற்கும் வகையும் அவர் அவர்களின் பரிபக்குவத்திற்கு ஏற்பத் தெளியப்படும்.

| பஞ்சாட்சரம் | பஞ்சதசாட்சரம் |
| --- | --- |
| சிவமூல மந்திரம் | சத்திமூல மந்திரம் |
| திருவைந்தெழுத்து | பதினைந்தெழுத்து |
| சிவம் | சத்தி |
| ஞானம் | வித்தை |
| முழுமுதல் | துணைநிலை |
| பரம்பொருள் | பிரபஞ்சம் |
| உண்மை | சுத்தசத்தி |

இவை இரண்டும் மகா வாக்கியங்கள் எனப்படும்.

| பஞ்சதசாட்சரம் | பஞ்சாட்சரம் | மகாவாக்கியம் | பொருள் |
|---|---|---|---|
| க காரமானது | சி காரத்தையும் | தத் பதத்தையும் | பதி, சிவத்தை பிரமத்தை உணர்த்தும். |
| உற காரமானது | ய காரத்தையும் | துவம் பதத்தையும் | பசுவை, ஆன்மாவை உணர்த்தும். |
| ஸ காரமானது | வ காரத்தையும் | அசி பதத்தையும் | பரையை, அருளை உணர்த்தும். |
| கஉறஸ | சியவ | தத்துவம் அசி | |

வித்தை ஞானத்திற்கு வழிகாட்டுகின்றது. ஞானம் உண்மையுடன், சிவத்துடன், பரம்பொருளுடன் எம்மை ஐக்கியப்படுத்துகின்றது.

குருநாதா! தவம் என்றால் என்ன?

எல்லாமே ஒடுக்கம் அடைந்து அவை ஒன்றிலேயே நிலைபெறவடைய வேண்டும். இருநிலையால் ஏற்படுகின்ற – இருவினையால் ஏற்படுகின்ற நடுக்கம் இல்லாது போகின்றது. இரவு பகல் இல்லாத நிலை ஏற்படுகின்றது. இங்கே எந்தவிதமான எதிர்பார்ப்போ ஆதாயமோ இல்லை. பற்றுக்கள் எல்லாம் விடுபடுகின்ற நிலை, அதுவே தவம்.

'ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்
நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை
இடும்பையும் இல்லை இராப்பகல் இல்லை
படும் பயன் இல்லை பற்று விட்டோர்க்கே.'

ஞானகுருவே! தாங்கள் தவம் மேற்கொள்வதற்குக் கைலாயமலையை– இமயமலைச்சாரலைத் தெரிவு செய்தீர்கள். யாது காரணம் குருதேவா?

முன்னோர்கள் சிவபூமியென நான்கு இடங்களைத் தெரிவு செய்தார்கள். அவை தவம் மேற்கொள்ள – சிவதவம் மேற்கொள்ளச் சிறந்தனவாகும். இந்நான்கும் பூமியின் மத்திய கோட்டில் – ஒரே கோட்டில் – உள்ள இடங்களாகும். அவையாவன;

மேருமலை
இமயமலையில் உள்ள கைலாயம்
சிதம்பரம்
இலங்கை

இந்நான்கும் சிவபூமிகள் எனப்படும்.

'மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூரும் இவ் வானின் இலங்கைக் குறியுறும்
சாரும் திலைவனம் தன் மாமலயத்தூடு
ஏறும் சுழுமுனை இவை சிவபூமியே.'

'இடை பிங்கலையின் இமவானோடு இலங்கை
நடுநின்ற மேரு நடுவாஞ் சுழுனை
கடவுந் திலைவனங் கைகண்ட மூலம்
படர்வொன்றி யென்னும் பரமாம் பரமே.

குருநாதா! தாங்கள் எங்களுக்கு உபதேசம் செய்யத் ... தமிழைத் தெரிவு செய்தீர்களே! என்ன காரணம் சுவாமி?

செந்தமிழ் ஆதியானது. வழிபாடு செய்வதற்கு மிகவும் தெளிவானது. இதனைத் தெளிந்து கொள்ளுங்கள் என்று நந்தியெம்பெருமான் எனக்கு மிகவும் நயப்பட உரைத்துவிட்டான்.

'..... செந்தமிழ் ஆதி தெளிந்து வழிபடு
நந்தி இதனை நவம் உரைத்தானே.'

திருமூலர் மூவாயிரம் பாடல்களுக்கு மேல் பாடியுள்ளார். இதனை நாம் எல்லோரும் காலை எழுந்து கருத்து உணர்ந்து ஓதுவோம். ஞானத் தலைவனை நண்ணுவோம்.

*************

1 **திருமந்திரத்தின் பிழிந்த உரை - ஆகமம் - அன்பு - சிவம்.**

11 **திருமந்திரத்தின் பொருள் அடக்கம்:**

மழை, செல்வம், ஆட்சி, கல்வி, கேள்வி, ஒழுக்கம், கருவுறல், உடலோம்பல், காலநிலை, வானியல், கோள்நெறி, ஆயுள்வரை, மருத்துவமுறை, பொருட்கலவை, மூச்சொழுங்கு, மனவொருமை, விந்து வெற்றி, நாடிநலம், அறிவொளி, ஒலிஇயக்கம், உணர்வுமாட்சி, அமுதஊறல், அறிதுயில், அருள்வீடு.

111 **திருமந்திரத்தின் ஒன்பது தந்திரமும் குறிப்பது:**

* நல்லொழுக்கம்
* அறவாழ்க்கை
* யோகப்பழக்கம்
* மந்திர நுட்பம்
* சமய ஒழுக்கம்
* குருநெறி நிற்றல்
* அகப்புற உணர்வு
* அருள் நுகர்வு
* பேராப் பெருவாழ்வு.

1 **திருமந்திரம் கூறும் சமய உண்மைகள்:**

* முப்பொருள் உண்மை
* மூவகை உயிர்
* மும்மலம்
* முப்பத்தாறு தத்துவம்
* நால்வகை நெறி
* திருநீறு
* இருள் வீழ்ச்சி
* திருவைந்தெழுத்து
* திருக்கூத்து
* சிவலோகம்

சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி ஷிஓம்ஷர்

# திருமூலரும் குருவும்

திருமூலருக்கு 'குருவே சிவம்' என நந்தியெம்பெருமான் கூறுகின்றார். திருநந்தி தேவர் தான், குரு - சிவம் - தெட்சணாமூர்த்தி ஆவர். 'சிவம்' தான் குரு எம்பதை திருமூலர் உணர்த்துகின்றார். 'சிவம்' தான் குருவாக வும் தலைவனாகவும் நிற்கும் எம்பதைக் குறிப்பாக ஓர்ந்து கொள்ளச் சொல் கிறார். 'சிவம்' தான் குருவாகி உரை, உணர்வு அற்றதோர் தலைவனென, கோவெனத் திருமூலர் வெளிப்படுத்துகின்றார். (1581)

குரு - சிவம் - அதன் சொரூபம் உரையற்றது, ஆனந்தமானது; மௌனமானது. இதனைக் கரைகாண முடியாத சத்தியாகிய ஆதியின் உதவியுடன் காணுவோமானால், உணர்வோமானால்; அகாரமாகிய சிவம் மருவுகின்றது, மறைகின்றது, மௌனமாகின்றது. உகாரமாகிய சத்தி அகாரமாகிய சிவத்தை எமது இல்லத்திலேயே வெளிப்படுத்துகின்றது. அது உள் ஒளியாக வெளிப்படு கின்றது, புலப்படுகின்றது, உணரப்படுகின்றது. (2844)

உரையற்றது ஒன்று இருப்பதாகத் திருநந்திதேவர் திருமூலருக்கு மொழி கின்றார். 'உரையற்றது ஒன்றை'ப் பற்றி அவர் கூறவில்லை. அப்படிக் கூறுவதாயின்; 'அது உரையற்றது, கரையற்றது, திரையற்றது, புரையற்றது' என்று மட்டும் கூறலாம். மேலும் அதனைக் கூறுவோமானால், அது மடமை, பேதமை, அறியாமை என்கின்றார் திருமூலர். (2648/2955)

குருநெறி - சிவம் ஆகின்ற நெறி, அது திருநெறி, பெருநெறி, ஒரே நெறியாக உள்ளது. அது ஒன்றாக, ஏகமாக எங்கும் உள்ளது. அதனை இடைவிடாது, எப்பொழுதும் ஓதுவதால் உணர்ந்து கொள்ளுங்கள் என்று திருமூலர் கூறுகின்றார். (54)

குருவினுடைய - சிவத்தினுடைய அருவ, உருவ, அருவுருவத் திருமேனியைக் காணாத கண்ணால் காணும் பொழுது தெளிவு ஏற்படுகின்றது. குருவினது திருநாமத்தை - அந்தப் பொன்னான மந்திரத்தைப் பேசாது பேசும்பொழுது உள்ளே தெளிவு ஏற்படுகின்றது. குருவினது திருவார்த்தையை - சப்தத்தைக் கேட்கமுடியாத காதால் கேட்கும்போது தெளிவு ஏற்படுகின்றது. குருவினது உருவத்தைக் கற்பனையற்ற, மனமற்ற, நினைவற்ற நிலையில் சிந்திப்பதால் - சதா நினைதலால் ஆத்மார்த்தமான பரிபூரணமான தெளிவு ஏற்படுகின்றது. (139)

இந்தப் பெருநெறியிலே, குருநெறியிலே, திருநெறியிலே பிரணவத்தினை ஓர்ந்து, ஆய்ந்து அது நாலாவதைத் தேர்ந்து ஓதி; அதன் கிரியை வழியிலே — சாதனை வழியிலே செல்லும் பொழுது அதன் சொரூபத்தை ஒவ்வொரு அணுக்களிலும், அணுக்களுக்குள்ளே உள்ள துகள்களிலும் பார்க்கலாம், உணரலாம் எனத் திருமூலர் கூறுகின்றார். (227)

இந்தத் திருநெறியிலே, குருநெறியிலே; சித்தத்தைக் கைவிட்டுச், சித்தையும் கைவிட்டு அதன் திருவருளாகிய ஞானபாதத்தைச் சார்ந்து, சேர்ந்து கருமநியமாதிகள் எல்லாவற்றையும் முழுமையாகக் கைவிட்டு நீங்கள் எல்லோரும் வாருங்கள். அப்பொழுது காணும்; துரிய நிலையைத், துரியா துரிய நிலையை, சமாதி நிலையைப், பரிபூரணத்துவமான தெளிவுநிலையை, தூய்மையான மறையை, மறைபொருளை உணரலாம்; அடையலாம் எனத் திருமூலர் கூறி எம்மையெல்லாம் கூவி அழைக்கின்றார். (232)

முழுமையான பணிவுடன், சரணாகதி நிலையில், சோதனை வேதனைகளை எல்லாம் நீக்கி அதனை முழுமையாக வழிபாடு செய்யுங்கள். (721)

சைவத்திற்குப் பெருமை தரக்கூடிய தனித் தலைவனாக — நாயகனாக விளங்கும் திருநந்திதேவர்; நாம் எல்லோரும் உய்யும் வகையிலே — வீடுபேறு அடையும் வகையிலே வகுத்து வைத்துள்ள ஏகமாகிய குருநெறியைத் திருமூலர் கூறுகின்றார். அது தெய்வநெறி என்றும், தெய்வச் சிவநெறி என்றும், சன்மார்க்க நெறி என்றும், காதன்மை நெறி என்றும், அன்புநெறி என்றும் இயம்பப்படுகின்றது. (1478)

குருநெறியை — குருபக்தியைத் திருமூலர் கூறும்பொழுது;

முதலாவது :— உண்மையை, சத்தியத்தை, சிவத்தைப், பரம்பொருளை நேரடியாகத் தெரிசிக்கின்ற நிலை — நேரடியாகக் காணுகின்ற நிலை. இதுவே மாசறு காட்சியாகும்.

இரண்டாவது :— உண்மையை, சத்தியத்தை, சிவத்தை, பரம்பொருளை நேரடியாகப் பூசிக்கின்ற நிலை — வழிபடுகின்ற நிலை.

மூன்றாவது :— உண்மையை, சத்தியத்தை, சிவத்தை, பரம்பொருளை, மன நினைப்புகள் எல்லாமே அற்றுப்போக நினைக்கின்ற, சிந்தனை செய்கின்ற நிலை.

நான்காவது :- உண்மையை, சத்தியத்தை, சிவத்தை, பரம்பொருளை ஆத்மார்த்தமாக உணர்கின்ற நிலை. மெய் உணர்கின்ற நிலை - பரிசிக்கின்ற நிலை. ஆத்மார்த்தமாகத் தீண்டுகின்ற நிலை.

ஐந்தாவது :- உண்மையை, சத்தியத்தை, சிவத்தை, பரம்பொருளை மெய்யுணர்ந்த நிலையிலே புகழ்ந்து பாடுகின்ற நிலை. ஏத்துகின்ற நிலை.

ஆறாவது :- உண்மையினுடைய, சத்தியத்தினுடைய, சிவத்தினுடைய, பரம்பொருளினுடைய திருவருட்கமலமாகிய ஞானத் திருவடியை இதயத்திலே, சிரசிலே சூடுகின்ற நிலை.

இவ்வாறாக ஆறு நிலைப்பாட்டினை - குருபத்தி செய்கின்ற முறையைத் திருமூலர் தெளிவுபடுத்துகின்றார். (1479)

இந்தத் திருநெறியை ஞானச்சமயம் என்றும், ஞானவிசேடம் என்றும், ஞானநிர்வாணம் என்றும் திருமூலர் கூறுகின்றார். ஞானத்தால் பெரிய குரு பாதத்தை அபிடேகம் செய்யுங்கள் என்று கூறுகின்றார். (1476)

இருவினை முற்றுமுழுதாக நீங்கும்பொழுது, வியாபகமான மனம் நடுவு நிலைமையை அடைகின்றபொழுது, உண்மையினுடைய, சத்தியத்தினுடைய, சிவத்தினுடைய, பரம்பொருளினுடைய இன் அருளாகிய சத்தியே குருவாக வெளிப்படுத்தலைத் திருமூலர் வெளிப்படுத்துகின்றார். சத்தியே குருவாக வந்து பலவிதமான குணங்களை எல்லாம் நீக்கும்பொழுது; உள்ளே தானாகவே ஞானமாகிய ஆன்ம மலர் மலர்கின்றது. அப்பொழுது மூன்று மலங்களும் தீர்ந்து போகின்றன. முப்புரங்களாகிய மும்மலங்களும் எரிந்து போகின்றன. அதனால் எல்லாமே சிவமாகின்றது. (1527)

ஆன்மா பக்தியாலே பரவிப் பணிந்து பாதாரவிந்தங்களைத் திருவடித் தாமரையினைச் சுத்தமான உரையாகிய மௌனத்தால் நாடும்பொழுது; மாயா மயக்கங்கள் உண்டா இல்லையா என்று சோதிக்கப்படுகின்றது. அதன் பின்னர் ஆன்மாவுக்கு சத்தியத்தைப் பரம்பொருளை உணர்த்த, காட்ட சித்தத்தின் ஊடாக இறைவனே சிவமாக, குருவாக வெளிப்படுகின்றான். இது தான் முழுதும் உண்மையானது. (1573)

'அது' பாசத்தை, அஞ்ஞானத்தை, மயக்கத்தை, கலக்கத்தை முற்று முழுதாகச் சேர்த்துக் கட்டி அதனைப் பறித்து எடுத்து அகற்றி; நேசித்த, விரும்பிய காயத்தை உடம்பை விடுவித்து விடுகின்றது. அப்பொழுது 'அதில்' இருந்து - அம்பலத்தில் இருந்து - வெறுவெளியில் இருந்த் ஆசு அற்ற சற்குரு வெளிப்பட்டு உண்மையைச் சத்தியத்தைப் - பரம்பொருளை உணர்த்துகின்றது. (1574)

எல்லா உலகங்களுக்கு அப்பாலாகவும் இப்பாலாகவும் நல்லோர்களுடைய உள்ளத்திலே உட்கார்ந்து மிகுந்த, நிறைந்த, அருளை; நல்குவதற்காக, வழங்குவதற்காக; எல்லோரும் உய்வடையும் பொருட்டு சொல்லார்ந்த — நற்குரு — மௌனகுரு — 'சுத்த சிவம்' ஆக வெளிப்படுகின்றது. (1576)

இங்கே ஓர் உபாயம் நிகழ்கின்றது. 'சுத்த சிவம்' குருவாக வந்து பசுவையும் பாசத்தையும் முற்றுமுழுதாக மாற்றித்; தெளிவான தெளிவின்பால் சேர்த்து யாவற்றையும் அன்புடனே மௌனத்தாலே நல்குகின்றது. (1577)

'சுத்த சிவம்' குருவாக வந்து தூய்மை செய்து, அருள் செய்து; சத்தியத்தைப், பரம்பொருளைத், தன்னை உணர்த்துகின்றது. அப்பொழுது ஆன்மகோடிகள் எல்லாம் சிவகுருவினுடைய பாதாரவிந்தங்களுடன் ஐக்கியமாகிப் பணிந்துகொண்டு இருக்கின்றன எனத் திருமூலர் கூறுகின்றார். (1578)

இசைவாகத் — தானாக அன்பு மலர்ந்து எழுகின்ற போதுதான் அந்த அன்பான உள்ளத்திலே குரு — சிவம் தானாகவே உவந்து விரும்பி வந்து அதன் திருவருளாகிய கமலபாதங்களை எம் இதயத்திலே பதித்து வெளிப்படுத்தி எம்மை எல்லாம் ஆட்கொள்ளுகின்றது. (1590)

இவ்வாறாக சிவம் — குரு பாதம் பதித்து, அருட் பார்வையை வீசுவதற்காக; திருநந்தியெம்பெருமான் தன்னை நெறிப்படுத்துவதாக திருமூலர் கூறுகின்றார். குருவினுடைய, உண்மையினுடைய, சத்தியத்தினுடைய வடிவம் தாங்கிய தலைவனைக், கோவைக்கோனைத், தெட்சணாமூர்த்தியைத் தான் காண்பதாகவும்; அவ்வேளையிலே இரு வழியும் அடைபடுகின்றது, அற்றுப் போகின்றது எனத் திருமூலர் கூறுகின்றார். (1597)

அஞ்ஞானத்தை — மாயையை — மயக்கத்தை — இருளை நீக்குபவர் சிவம் — குரு ஆவர். சிவம் — தெட்சணாமூர்த்தி தான் ஏகமாகிய ஒரே குரு. இவரைத்தான் குருவாகக் கொள்ளுங்கள். வேறு எவருமே குருவாக இல்லை. குருட்டு வழியைக் குறுக்கு வழியை நாடாதீர்கள் என எச்சரிக்கின்றார் திருமூலர். (1680)

இவ்வாறு சிவம் தான் குரு என முழுமையாக உணர்ந்து, முழுமையாக ஏற்று; உள்ளத்தைப், பொருளை, உடலை, ஆத்மாவை அக்கணமே அதனிடம் முழுமையாக ஈந்து, ஒப்படைத்து; இடைவிடாது அதனுடனே உள்ளத்தால், ஆத்மாவால் நிற்கும்பொழுது; தெள்ளிய தெளிந்த உணர்வு, ஞானம் ஏற்படுகின்றது. இது பேரானந்தப் பேராம் பெருவாழ்வாகிய சிவபதத்திலே, சிவபுரத்திலே எம்மை எல்லாம் ஐக்கியப்படுத்துகின்றது. (1693)

முழுமையாகவே ஞானத்தில் விருப்பம் ஏற்பட ஏற்பட வரமுடியாத காதல், வற்றாத காதல் வந்து, அன்பாகி மலர்ந்து சிவம் பால், குருவின் பால் பொழிந்து கொண்டிருப்பதே ஒரு சாதகனுக்கு வேண்டியது, சிறப்புடையது ஆகும். அப்பொழுது சாதகனுக்கு எங்கும் சாராத நிலை, ஆராய்வுகள் எல்லாம் அற்றுப் போகின்ற நிலை ஏற்படுகின்றது — ஞானம் முழுமையாக மலர்வடைகின்றது எனத் திருமூலர் கூறுகின்றார். (1699)

சிவம் — குரு எம்மை முற்று முழுதாக ஆட்கொண்டு உய்வடைவிக்கும்போது உயிர், சரீரம், பிராணன், வியக்கத்தகுந்த ஒண்பொருளான சத்தி எல்லாம் செயலற்றுப் போகின்றது. (1779)

இவ்வாறு எம்மை எல்லாம் ஆட்கொள்ளும் சிவம் — குரு — ஆசாரியார், நித்தலும் இடைவிடாது பரம்பொருளை 'நினையவைத்து' 'வாய்திறவாதே' என்று மௌனநிலையில் அமர்த்துகின்றார். (1780)

தாளிணைத் — திருத்தாளிணைத் — திருவடியிணைப் — பாதகமலங்களைத் தீட்சையாக எமக்கு எல்லாம் தருகின்றார், ஆன்மகோடிகளின் தலைவராகிய, சற்குருவாகிய சிவம். (2049)

வேதங்களும், ஆகமங்களும்; சிவத்தையே பரம்பொருளையே, சத்தியத்தையே, உண்மையையே குருவாக விதந்து வியந்து விளம்புகின்றன. இந்தப் பெரும் வழியையே திருநந்திதேவர் குருவழி எனப் பேசுவதாகத் திருமூலர் கூறுகின்றார். எல்லோரும் இந்த வழியில் வந்து கூடுங்கள் எனத் திருமூலர் அழைக்கின்றார். (2057)

மௌனத்தாலே — மௌன உரையாலே முற்றாக மலங்கள் எல்லாம் எரிக்கப்படுகின்றன. இருள் முற்றாகவே அழுக்கப்படுகின்றது. அகற்றப்படுகின்றது. இவ்வாறு நிகழ்வதை மௌனநிலையில் இருந்தே குரு இயம்புகின்றார். (2066)

குருவை மிகவும் நுட்பமாகத், துல்லியமாகத், தெளிவாக திருமூலர் வெளிப்படுத்துகின்றார். திருமூலரை, திருமந்திரத்தை நாம் பெற்று அநுபவிப்பது நாம் எல்லோரும் செய்த பாக்கியமாகும். பிறவியின் பெரும் பயனுமாகும்.

**சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி ஷிஓம்ஷர்**

# திருமந்திரத்தில் நல்லொழுக்கம்

அறம், அன்பு, உயிர்நிலையாமை ஆகியவற்றைப் பற்றிப் பேசும் திருமந்திரத்து முதலாம் தந்திரம் நிலையான ஒன்றைப் பற்றியும் எடுத்துரைக் கின்றது. தவிர்க்க வேண்டிய பாவச் செயல்களை விளக்கி, புன்னெறிப் போக்கினை விலக்கி, கடைப்பிடிக்க வேண்டிய அற நெறிச் செயல்களை மேற் கொள்ளச் செய்து, மேலாம் நன்னெறியடையச் செய்வதே முதலாம் தந்திரத்தின் தலையாய நோக்கம் எனலாம்.

வானளாவச்சென்று சேணாங்கும் செல்வ நெடுமாடத்திற்கு இன்றியமையாத திடமான அத்திபாரம் போன்று மேல்வரும் அட்டமா தந்திரங்களுக்கு அடிப்படை யாக அமைவது முதலாம் தந்திரம். விலக்க வேண்டியவற்றை விலக்கிப் பொது வானவற்றை அனுசரித்துச் சமயி ஆனபின்பே ஒருவர் சைவமாவதற்கு அருகதை உடையவர் ஆகின்றார்.

113 ஆம் பாடல் தொடக்கம் 336 ஆம் பாடல் வரையான 224 பாடல்களைக் கொண்ட முதலாம் தந்திரம் 24 பகுதிகளைக் கொண்டது.

<u>உபதேசம்</u>

முப்பது பாடல்களைக் கொண்ட உபதேசப் பகுதி மேல்வரும் பாடலை முதலாவதாகக் கொண்டுள்ளது.

'விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின்று உருக்கி ஒரொப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே'.

பக்குவப்பட்ட ஆன்மாவை இறைவன் தானே வந்து ஆட்கொள்வது குறிப்பிடப்பட்டது.

'களிம்பறுத்தான் எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத்தான் அருட்கண் விழிப்பித்துக்
களிம்பணுகாத கதிர் ஒளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே'.

மலம் அறவித்து ஆட்கொள்வதால் கூறப்பட்டது.

'பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணுகாப் பசு பாசம்
பதி அணுகிற் பசு பாசம் நில்லாவே'.

பதியினைப்போல் பசுவும் அனாதியானது, என்கின்ற சைவசித்தாந்த உண்மை வலியுறுத்தப்படுகின்றது.

அடுத்து வரும் செய்யுட்களில் உபதேசம், உதாரணங்கள் முதலியவற்றால் விரிவாக விளக்கப்படுகிறது.

மேல்வரும் செய்யுள்களோடு உபதேசப் பகுதி நிறைவு பெறுகின்றது.

'சந்திப்பது நந்திதன் திருத்தாளினை
சிந்திப்பது நந்தி செய்ய திருமேனி
வந்திப்பது நாமம் என் வாய்மையால்
புத்திக்குள் நிற்பது நந்தி பொற்பாதமே'.

'போதம் தரும் எங்கள் புண்ணிய நந்தியைப்
போதம் தனில் வைத்துப் புண்ணியர் ஆயினார்
நாதன் நடந்தால் நயனம் களிகூர
வேதம் துதித்திடப் போயடைந்தார் விண்ணே'.

## நிலையாமை

அடுத்து வரும் நான்கு பகுதிகள் (2 தொடக்கம் 5 வரை) நிலையாமையினைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. எமது உடம்பு, செல்வம், இளமை, வாழ்க்கை ஆகியன நிலையற்றன. எனவே எதற்காக நாம் இந்த நிலையற்ற இன்பங்களை நாடப் பாவச் செயல்களில் ஈடுபட வேண்டும்? அறவழி நின்று இறைவனை அடைந்து பேரின்பப் பெருவாழ்வு பெறுதலே சிறந்தது.

'மண்ணொன்று கண்டீர் இருவகைப் பாத்திரம்
திண்ணென் றிருந்து தீவினை சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணானாற்போல்
எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாறே'.

## பஞ்சமா பாதகங்கள்

ஆறாம், ஏழாம், எட்டாம், ஒன்பதாம், இருபத்து நான்காம் பகுதிகள் கொலை, களவு, கள், காமம், பொய்கூறல் ஆகிய பாதகங்கள் பற்றிக் கூறுகின்றது.

'கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற் றாற்கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே'.

'பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே'.

## நல்குரவு

பத்தாவது பகுதி நல்குரவு பற்றியது. ஒருவனுக்கு மிகவும் துன்பமான நிலை வறுமை என்பது விளக்கப்படுகின்றது.

## அக்கினி காரியம்

பதினோராம் பகுதி கற்றாங்கு எரியோம்புதல் பற்றி விளக்குகின்றது.

'வசையும் விழுப்பொருள் வானும் நிலனும்
திசையும் திசை பெறுதேவர் குழாமும்
விசையும் பெருகிய வேத முதலாம்
அசைவிலா அந்தணர் ஆகுதி வேட்கிலே'.

'ஓமத்துள் அங்கியின் உள்ளுளன் எம்இறை
ஈமத்துள் அங்கு இரதங்கொள் வானுளன்
வேமத்துள் அங்கி விளைவு வினைக்கடல்
கோமத்துள் அங்கி குரைகடல் தானே'.

## அந்தணர் ஒழுக்கம்

12 ஆம் பகுதி அந்தணர் ஒழுக்கம் பற்றிப் பேசுகின்றது.

'அந்தணராவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பி முப்போதும் நியமஞ் செய்து
அந்தவ நற் கருமத்து நின்றாங் கிட்டுச்
சந்தியு மோதிச் சடங்கறுப் போர்களே'.

'அந்தன்மை பூண்ட அருமறை அந்தத்துச்
சிந்தைசெய் அந்தணர் சேரும் செழும்புவி
நந்தத வில்லை நரபதி நன்றாகும்
அந்தியும் சந்தியும் ஆகுதி பண்ணுமே'.

ஆட்சியாளர் கடன்

13 ஆம் பகுதி அரசராது கடன். ஆட்சிப் பொறுப்பில் இருப்பவரது கடமையினை வலியுறுத்துகின்றது.

'கல்லா அரசனும் காலனும் நேரொப்பார்
கல்லா அரசனிற் காலன் மிகநல் நல்லன்
கல்லா அரசன் அறமோரான் கொல்லென்பான்
நல்லாரைக் காலன் நணுகி நில்லானே'.

'தத்தம் சமயத் தகுதி நில்லாதாரை
அத்தன் சிவன் சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண்ட முஞ்செயும் அம்மையில் இம்மைக்கே
மெய்த் தண்டஞ் செய்வது அவ்வேந்தன் கடனே'.

14 தொடக்கம் 17 ஆம் பகுதி வரை வானச்சிறப்பு, தானச்சிறப்பு அறஞ்செய்வான் திறம், அறம் செய்யான் திறம் ஆகியன எடுத்துரைக்கப்படுகின்றன.

'அமுதூறும் மாமழைநீர் அதனாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றுங்
கமு கூறு தெங்கு கரும்பொரு வாழை
அமுதூறுங் காஞ்சிரை ஆங்கது வாமே'.

'ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம் பொருள் போற்றன்மின்
வேட்கை உடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே'.

'யாவர்க்கு மாம் இறைவர்க் கொரு பச்சிலை
யாவர்க்கு மாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்கு மாம் பிறர்க்கு இன்னுரை தானே'.

<u>அன்பு -- அன்புடையார்</u>

18 ஆம் 19 ஆம் பகுதி அன்பு அன்புடையார் பற்றியது.

'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே.'

'என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலில் பொரிய வறுக்கினும்
அன்போடுருகி அகம் குழைவார்க் கன்றி
என்பொன் மணியினை எய்தவொண்ணாதே.'

இப்பாடல்களை ஆராய்ந்து பார்க்கின் அன்பே ஞானம் என்பது புலப்படும்.

கல்வி, கேள்வி கேட்டமைதல், கல்லாமை ஆகியன 20 ஆம் 21 ஆம் 22 ஆம் பகுதிகளில் கூறப்படுகின்றன.

<u>முடிவுரை</u>

நம்பிரான் திருமூலர் ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதை முதலாம் தந்திரப்பாடல்களால் நாம் உணரலாம். ஒழுக்க சீலத்தை உயிரினும் பெரிதாகப் போற்றுவதைக் காணலாம்.

எத்தகைய பெருமையுடையவரேனும், அந்தணராயினும் சீலத்தில் தவறியவர்கள் நிந்தனை செய்யப்படுகின்றனர். யாவர்க்கும் ஏனைய தந்திரங்களில் கூறப்படும் வாய்மையினை சிந்தியவிடில் நல்ல பலனைத் தராமலும் கெடுதலும் விளைவிக்கக் கூடும். அன்றாட சமூக வாழ்க்கைக்கும் ஒழுக்கம் இன்றியமையாதது என்பதும் உண்மை.

ஒழுக்கம் சென்றவிடமெல்லாம் சிறப்புத்தரும். கல்வி, இன்சொல், இரப்பவர்க்குக் கரவாது இடுதல், பசு ஓம்புதல் இவை பற்றிக் கூறப்பட்டவற்றை ஒருமித்து நோக்கும் போது திருமூலர் பெருமானின் சமூகக் கண்ணோட்டம் தெளிவாகத் தெரிகின்றது.

எனவே அன்புமிக்க தெய்வம் நமக்குண்டு. எமது வாழ்வின் குறிக்கோள் அரன் கழல் செல்லுதல் என்பவற்றினையும் வலியுறுத்தும் இத் தந்திரம், இருமைக்கும் இன்பம் பயக்கும் வழியில் எம்மை ஆற்றுப்படுத்தும் கைவிளக்காகும்.

திரு. வே. ந. சிவராஜா

# திருமந்திரத்தில் அறவாழ்க்கை

"சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு"

அந் நெறியே சைவ சித்தாந்தமாகும். வேதவித்தாய், ஆகமமாய் நின்று அவ்வித்த அதனை நந்தி அருள் பெற்ற மூலன் மூவாயிரம் தமிழால் உரை செய்தான்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செயு மாறே"

என்னும் திருமந்திரத்தினை அகச் சான்றாகக் காட்டித் தமிழில் ஆகமத்தினைச் செய்யுமாறே தன்னை இறைவன் படைத்தான் எனப் பொருள் கூறுவர். இதனினும் தமிழ் என்பதற்கு அன்பு என்றும் ஒரு பொருள் சிறப்பாக உண்டு. அப் பொருளில் தன்னை அன்பு செய்யுமாறு படைத்தனன் எனப் பொருள் கொள்வதும் சிறப்பானதே.

திருமூலர் பாடியவை பாடல்கள் அல்ல, கவிதைகள் அல்ல, அவை மந்திரங்கள், மறை மொழிகள். அகத்தெழு வளி இசையானது, பரை, பைசந்தி, மத்திமை எனப் புறச் செவிக்குப் புலப்படா ஓசையாகவும் எழுந்து புறத்து இசைக்கும்போது வைகரியாயும் இயங்கும். ஓசை ஞானியரின் அகச் செவியால் உணரப் படுவது, வைகரியாகிய ஒலி எல்லார்க்கும் புலப்படுவது. எனவே ஓசை வேறு, ஒலி வேறாகும். நிறை மொழி மாந்தர் ஓசையால் உணர்ந்து ஒலியால் உணர்த்திய மொழிகள் வெளிப்படையாக ஒரு பொருளும் மறை பொருளாக மற்றொன்றும் கொண்டு விளங்குவதைக் காணலாம்.

"நந்தி இணை அடி நான்தலைமேற் கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றி செய்து
அந்திமதி புனை அரன்அடி நாள் தொறும்
சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே"

என்று கூறும் திருமூலர், இறையருளால் தாம் செப்பிய நூல் ஆகமம் என்று கூறுகின்றார். இது மூவாயிரம் மந்திரம் எனத் தொகையாகவும் ஒன்பது தந்திரம் என வகையாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

மந்திரம், தந்திரம், யந்திரம் என்பன ஒவ்வொன்றும் பல்வேறு பொருள்களில் பயின்று வந்துள்ளன. அவற்றுள் மந்திரம் என்பது தேர்ந்தெடுக்கப் பட்ட வார்த்தைகளைக் கொண்டு அமைக்கப்பட்ட வாசகங்களாகும். அவை உச்சரிக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களுக்கு நியதி இருக்கின்றது. அதாவது இன்ன மந்திரத்தை இன்ன முறையில் உச்சரித்தால் இன்ன பயன் உண்டு என விதிக்கப்பட் டுள்ளது.

மூலாதாரம் இது என்பதை உணர்ந்து அவ்விடத்து மூண்டெழு கனலை உணர்த்தும் மந்திரத்தைக் குருவிடம் பக்குவமுள்ள ஆன்மா பெற்று முறைப்படி தியா னிக்க மூலாதாரத்தில் கனல் மூண்டெழுவதை உணரலாம். இங்ஙனமே பிரமரந்திரம் இதுவென உணர்ந்து அதற்குரிய மந்திரத்தை முறைப்படி உச்சரிக்கப் பிரமரந்திரம் துடிப்பதை உணரலாம். இவை அனுபவ உண்மைகளாகும்.

மந்திரம் சொல்லின் ஒலியின் சக்தி. அதுபோல தந்திரம் என்பது உடல் உறுப்பு இயக்கத்தால் ஆகும் காந்த சக்தியாகும். தந்திரம் உடலால் காந்த சக்தியால் செய்யும் ஏமாற்று வித்தையல்ல. மந்திரம் முன்னர் குறிப் பிட்டதுபோல "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழியாகும்" நோயின்கூறையும் அது தணிக்கும் மருந்தின் கூறையும் நோயாளி உணராது உண்ணினும் மருந்து தீர்த்தல் போல மறை மொழியாயினும் மந்திரம் குறித்த பயன் தருதலிற் தப்பாது. மந்திரங்களால் ஏற்படும் உடலிசைவு உடலின் காந்த சக்தியை வெளிப்படுத்துகின்றது. இதுவே தந்திர சாத்திரத்தின் அடிப்படையாகும். இச் சக்தி வெளிப்பாட்டிற்குக் கண்களும் விரல் நுனிகளும் முக்கிய உறுப்புகளாகும். ஒவ்வொரு மனித உடலிலும்காந்தக் கல் போன்று காந்த சக்தியுண்டு. விரல் நுனிகளின் மூலம் காந்த சக்தியைக் கதிர்களாக வெளியிட முடியும். அங்ஙனமே கண்களும் காந்த சக்திகளை வெளியிடும் சக்தி வாய்ந்தவை. விழியிடையிலே உள்ள நெற்றிப் பொட்டில் காந்த ஊசி போன்ற அமைப்பு உண்டு. அதுவே நெற்றிக் கண்ணாகும். கண்களைக் கட்டிக்கொண்டு நெருக்கடி மிகுந்த வீதியில் ஒரு வாகனத் தில் சவாரி செய்யலாம். அப்போது இந்தக் காந்த சத்தியே கை கொடுக் கின்றது. ஒவ்வொருவரைச் சுற்றியும் இந்தக் காந்த சத்தி பாய்ந்து கொண்டே இருக்கிறது. ஆனால் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான அளவிலேயே அவை வெளிப்படுகின்றன. சாதனையால் இச் சத்தியை வளர்த்து அற்புதங்கள் செய்யலாம். உலகில் உள்ள எல்லா மதங்களிலும் இத்தகைய சித்துக் கைவரப் பெற்றோர் இருக் கின்றனர். தொலைவில் உணர்வு, தொலைவில் காட்சி எல்லாம் இவற்றின் வெளிப் பாடுகளே.

"சீலாங்க வேதத்தைச் செப்பவந்தேனே"

என்றும்,

"சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே"

என்றும் திருமூலர் கூறுவதினால் திருமந்திரமே தமிழர்களின் வேதமும் ஆகமுமாகும் என்பதில் ஐயமில்லை. வேத ஆகமச் சிறப்புக்களைத் திருமூலரே விரிவாகக் கூறியிருப்பதனால் திருமந்திரச் சிறப்பும் உணரப்படும். மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ், நந்தியருள் என்றும் காலை எழுந்து கருத்தறிந்து ஓத

வேண்டுமென்பதும் திருமூலரின் அருட்குறிப்பாகும். திருமந்திரத்தை ஓதி உணர்ந்து வழிபடுதல் ஒன்றே போதும். தோத்திரமாய்ச் சாத்திரமாய்ச் சமயமுமாகிய தமிழ் நூல் இதுவொன்றேயாகும்.

தமிழரின் சமயத்திற்கு ஒரு நூலில்லையே, ஒரு குரவர் இல்லையே என இனி அங்கலாய்க்க வேண்டாம். ஒருவனே தேவன், திருமூலரே குரு, திருமந்திரமே எமது சமயப் பெருநூல்.

## பொதுமை ஆய்வு.

இத்தந்திரத்தில் 208 மந்திரங்கள் உள்ளன. அவை அகத்தியம் முதல் பெரியாரைத் துணைக்கோடல் வரை 25 உட் பிரிவுகளைக் கொண்டுள்ளன. இத் தந்திரத்திலுள்ள உட் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் இடையிலான தொடர்புகளை அதிகார முறைமை கூறுவது போலக் கூறின் வலந்து பொருள் கொள்வதாகவே அமையும்.

அகத்தியம், பதியல் வீரட்டம் போன்ற உட்பகுதிகள் மாத்திரமன்றி வெளிப்படைப் பொருள் உடையன போற் தோன்றும். பொறையுடைமை, பெரியாரைத் துணைக்கோடல் போன்ற உட் பிரிவுகளும் மறை பொருளுடைய மந்திரங்களேயாகும்.

"நடுவு நில்லாது உலகம் சரிந்து கெடுகின்றது"
"முப்புரமாவது மும்மல காரியம்"
"பற்றி நின்றார் நெஞ்சில் பல்லிதான் ஒன்றுண்டு"

இவையெல்லாம் மறை பொருள் மந்திரங்களாகும். புராணங்களின் நோக்கம் சிறப்பு முதலானவற்றை அறியாதார் பலராவார். ஒருவகையில் புராணங்களும் மறைபொருள் உடையனவே. அவற்றின் உண்மையை உணராது கதைகளை மாத்திரம் அறிந்தவர்களுக்கு அவற்றுள் ஆழ்ந்திருக்கும் கவியுளம் இதுவெனக் காட்டும் மந்திரங்கள் பல உள்ளன. புராணங்களின் உட் பொருள் தவிர ஐந்தொழில்களின் தத்துவமும் கர்ப்பக் கிரியை என்னும் பகுதியில் உயர் கருவில் தோன்றி, இட்டவனும் அறியாது ஏற்றவரும் அறியாது பிறக்கும், அதிசயம் எப்படி? என வினவுவதும் நம் சிந்தனையைத் தூண்டுவன.

தோன்றிய உயிர்கள் மூவகையின என்பதும் அவற்றுள், பாத்திரம், அபாத்திரம் இவையெனக் கூட்டுவதும், அண்டத்தில் மாத்திரமன்றிப் பிண்டத்திலும் தீர்த்தம் உண்டு என்பதும், திருக் கோவில்களின் தேவை எவை என்பதும், அதோமுக தரிசன தத்துவமும் ஆழ்ந்து சிந்தித்தற்குரியன.

அடுத்து சிவ நிந்தனை, குரு நிந்தனை முதலியன கொடிய பாவங்கள் என்பதும் அறவோர் கொள்ளத்தக்கன பொறையுடைமையும் பெரியாரைத் துணைக் கோடலுமாகும் என்பனவற்றை எல்லாம் மந்திரமாகவே விளக்கி இத் தந்திரம் நிறைவு பெறுகின்றது.

சிறப்பாய்வு.

இத் தந்திரத்தில் மறைபொருளாகக் கூறப்பட்டுள்ள உள்ளுறைகளை இயன்றவரை வெளிக்கொணர முயல்வதே இப் பகுதியின் நோக்கமாகும். அதனையே சிறப்பு ஆய்வு என்னும் தொடர் சுட்டுகின்றது.

அகத்தியம்:

அகத்தியம் என்னும் சொல்லானது தொல்காப்பியனார் - தொல்காப்பியம், காக்கைபாடினியார் - காக்கைபாடினியர், செயிற்றியனார் - செயிற்றியம் என அவ்வவரால் இயற்றப்பட்ட நூல்களைக் குறிப்பது போல அகத்தியனாரால் இயற்றப்பட்ட அகத்தியம் என்னும் நூலைக் குறிக்கும் வழக்கு ஒன்று உண்டு. இங்கு அகத்தியம் என்பது உடலகத்துள்ள தீயினைக் குறிக்கின்றது. அதுவே அகத்தீ, மூலாக்கினியாகும். இங்கு அம் விகுதி, பகுதிப் பொருள் உணர்த்தி நிற்கின்றது. இத் தீயானது ஒவ்வொருவரின் நடுவிலும் உள்ளது. இதனையே "நடுவுள அங்கி" என்பது உணர்த்துகின்றது. அக்கினியானது உடலின் நடுவுள் - மூலாதாரத்தில் உள்ளது. மூலாதாரம் என்பது எருவாய்கு மேல் இருவிரல் தூரத்தும் கருவாய்க்குக் கீழ் இரு விரல் தூரத்தும் உள்ள ஒரு புள்ளியாகும். இங்ஙனம் இருவாய்க்கும் நடுவுள மூலாதாரத்தில் உள அங்கியைக் காமாக்கினியாக்கிக் கருவாய் வழியாகச் செலுத்தாது குண்டலினி சக்தியாக எழச் செய்து ஆதார வழியே செலுத்தி பிரமரந்திரத்துக்குமேல் பன்னிரண்டு விரற்கடைமேலே உள்ள அருமறைச் சிரத்தின் மேலாம் சிற்பரவியோமம் எனப்படும் துவாத சாந்தப் பெருவெளியில் பொற்புடன் நடம் செயும் புங்கழலை அடைந்து உய்தி பெறுது இவ்வுலகமானது சரிந்து கெடுகிறது. மூலாக்கினியைக் காமாக்கினியாக்கிக் கருவாய் வழியாகச் செலுத்திச் சரிந்து கெடுகின்றது. எம்பெருமானே, உய்யுமாறு எங்ஙனம் என்று வினவ, அகத்தீயை உடையவனே நீயே இவ் உலகுக்கு உணர்த்த வல்லவன், நீ போய் முன்னுக என இறைவன் உணர்த்தினான்.

நடுநில்லாது என்பதற்கு நடுவு நிலைமை என்னும் அறத்தினைக் கொள்ளாமையால் இவ்வுலகம் சரிந்து கெடுகிறது எனப் பொருள் கொள்வதும் ஒன்றாகும்.

எம்பெருமான் திருமூலன்,

நடுவு நின்றார்க் கன்றி ஞானமும் இல்லை
நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை

நடுவு நின்றார் நல்ல தேவரு மாவர்
நடுவு நின்றார் வழி நானும் நின்றேனே.

நடுவுநின் றான்நல்ல கார்முகில் வண்ணன்
நடுவுநின் றான்நல்ல நான்மறை ஓதி
நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவோர்
நடுவுநின் றார்நல்ல நம்பனும் ஆமே.

நடுவு நின்றார் சிலர் ஞானிக ளாவர்
நடுவு நின்றார் சிலர் தேவரு மாவர்
நடுவு நின்றார் சிலர் நம்பனு மாவர்
நடுவு நின்றா ரொடு நானும் நின்றேனே.

என நடுவு நின்றவன் சிறப்பினை முதலாம் தந்திரத்தில் கூறுகின்றார். இங்கு நடுவு நிற்றல் என்பது பகை, நட்பு, நொதுமல் என்னும் முத்திறத்தும் நடுவு நிலைமை தவறாது நிற்றல் என வெளிப்படைப் பொருள் கொள்வது ஒருபுறமிருக்க, இடகலை, பிங்கலைவழி யாகச் செல்லும் பிராணனை நடு நாடியாகிய சுழுமுனை நாடியைச் சேர்த்து நடு நாடி வழியாகச் செலுத்துதலே நடுவு நிற்றல் எனப் பொருள் கொள்வதே திருமூலர் கருத்தாகும். அந்தணர் முப்புரிநூலணிவதன் தத்துவமும் இதுவே.

ஞான நாட்டமுடையாரே உணரத்தக்க இந்த உண்மையினை உலகவர்க்கு உணர்த்த எழுந்த கதையே அகத்தியர் தென்னாடு போந்த கதையாகும். சிவன், பார்வதி திருமணம் நடந்தது, அது காணப் போந்ததினால் வடக்குத் தாழ்ந்து உலகு நடுவு நில்லாது சரிந்தது. சிவன், அகத்திய நீ போய் முதுகியவையத்து முன்னிர் என்றான். உலகு நடுவு நில்லாது சரிந்தது என்பது காமாக்கினியால் உலகு பிறழ்தலைக் குறிக்கின்றது. அகத்தீயை உணர்ந்து நடுவு நிற்றலே அகத்தியர் வருகை குறிப்பதாகும்.

இத்தகைய விளக்கத்தைத் தாங்கி நிற்கும் திருமந்திரம் வருமாறு.

நடுவுநில் லாதிவ் வுலகம் சரிந்து
கெடுகின்ற தெம்பெரு மானென்ன ஈசன்
நடுவுள அங்கி அகத்திய நீபோய்
முதுகிய வையத்து முன்னிசென் றானே.

பதிவலியில்வீரட்டம்.

வலியில் வீரட்டபதி - வலிகையால் வீரத்தோடு அட்டபதியாகும். புராணங்களில் பேசப்படும் இறைவனின் கோபப்பிரசாதத்தின் உட் பொருளை விளங்குவதே இப் பகுதியின் பொருளாகும்.

அந்தகாசுரன், தக்கன், பிரமன், சலந்தரன் முதலியோர் ஆணவ மலத்தின் வெவ்வேறு வெளிப்பாடுகளாகப் படைக்கப்பட்டுள்ளனர். பிறரை வருத்துதல், பெரியாரை மதியாது அவமதித்தல் முதலிய கீழ்க்குணங்கள், நல் வினைப் பயனாய் பணம், பதவி, அதிகாரம் பெற்றவர்களிடம் காணப்படுவது உலக வழக்கு. இறைவன் அவற்றை அழித்த மறக் கருணையைத் திருக்கோவிலூர், திருப்பறியலூர், திருக்கண்டியூர் முதலிய திருத்தலங்களில் நடைபெற்றவாகப் புராணம் கூறும்.

இவற்றுள் முப்புரம் பெற்ற நிகழ்ச்சி பிரசித்தமானது. ஆனால் அதன் மறை பொருளினை இத் தந்திரத்திலுள்ள ஒரு மந்திரம் மிக அழகாக வெளிப்படுத்துகின்றது.

**அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்**
**முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்.**

அந்த அசுரர்கள் இரும்பு முதலிய லோகக் கோட்டைகளோடு பறந்து உலகையே அழித்து வந்தனர். அவர்களின் கொடுமை தாங்காத தேவர்கள் வேண்டினார்கள் என்று கதை தொடர்கிறது.

இறைவன் அப்புரங்களை அழிக்க மேருமலையை வில்லாக வளைத்தான். ஆதிசேடனை நாணாகப் பூட்டினான். திருமாலை அம்பாக அமைத்தான். அப்புறம், அப்புறம் என்று ஆவல் தூண்டப்படுகிறது. முப்புர அசுரர்களின் ஆணவம் ஒருபுறம் இருக்கட்டும். அம்பாக அமைந்த திருமாலின் தலைக்கனம் கொஞ்சமா? சிவன் கைவில்லையும் அம்பையும் உதறினான். புருவ வில்லை வளைத்தான். புன்சிரிப்பைத் தொடுத்தான், அழிந்தன முப்புரம். இப்படிக் கதை சொல்வார்கள் மூடர்கள் என்கிறார் மூலர். இதன் உட்பொருள் என்னவெனில்,

> "முப்புரமாவது மும்மல காரியம்" எனவே மும்மலம் காரணம். அதன் காரியமே முப்புரமாக உலகை அழித்து வந்தது. அக் காரியமே அழிக்கப்பட்டது. காரணம் அழிவற்ற உள்பொருள் என்பது சைவ சித்தாந்த முடிபாகும்.

மும்மலங்களில் ஒன்றாகிய ஆணவ காரியமாகிய காம, குரோத லோப, மோக, மதம் முதலியனவும் கன்மத்தின் காரியமாகிய புண்ணிய பாவங்களும் மாயையின் காரியமாகிய தனு, கரண, புவன போகங்களும் அழிக்கப்பட்டன.

ஆன்மாக்களிடம் இம் மூன்றும் உள்ளன. சீவன் முத்தர்களிடம் இவை அழிக்கப்பட்டுவிடும். அழிக்கப்பட்டதை யாரும் கண்டதில்லை. அவர்களும் புறத்தே மும்மலத்தார் போலவே தோற்றமளிப்பர். ஆனால் அவர்களிடம் மும்மல காரியங்கள் எவையுமில்லை. அவர்களிடம் ஆணவ காரியமாகிய காம குரோதங்கள் இல்லை. இருவினை ஒப்பு எய்தியமையால் கன்ம காரியமாகிய நல்வினை தீவினை இல்லை. மாயையின் காரியமாகிய தனுகரணங்களோடு உலாவித்திரியினும் தாமரையிலைத் தண்ணீர் போலப் பிரிந்திருப்பர். பேசார் பிறர்க்கு. ஆதலால் அவர்க்கு மாயையும் இல்லை. இத்தன்னையும் அழித்தது யார்? அழிந்தது எப்படி?

"அப்புரம் எய்தது யார் அறிவாரே" என்கிறார் திருமூலர்.

"அப்பு அனி செஞ்சடை ஆதிபுராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறிவாரே"

(அப்புரம் – அந்த மும்மலகாரியங்களாகிய புரங்களை)

இந்து சமயம் தெய்வம் ஒன்று, என்பது போலப் பல தெய்வங்களையும் கொள்கிறது. ஒரு மெய்யடியாரைப் போலக் காலந்தோறும் வாழையடி வாழை எனத் தோன்றும் மெய்யடியார் பலரையும் ஏற்றுக் கொள்கிறது. ஒரு நூலைப் போலக் காலத்துக்குக் காலம் தோன்றும் பல நூல்களையும் ஏற்றுக் கொள்கிறது. இந்து சமயம் தேங்கிப் புழு மலிந்து நாற்றம் வீசும் சாக்கடையாகாது ஜீவ நதியாகப் பாய்ந்து கொண்டிருப்பதற்கு இதுவே காரணமாகும்.

**மூலத் துவாரத்து மூளும் ஒருவனை**
**மேலைத் துவாரத்து மேலுற நோக்கிமுற்**
**காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்**
**ஞாலக் கடவூர் நலமாய் இருந்ததே.**

**காம தகனத்தின் மறை பொருளினையே;**
**இருத்த மனத்தை இசைய இருத்திப்**
**பொருந்தி இலிங்க வழியது போக்கித்**
**திருந்திய காமன் செயலழித் தங்கண்**
**அருந்தவ யோகம் கொறுக்கை அமர்ந்ததே.**

என்னும் திருமந்திரம் உணர்த்துகின்றது. காலனைக் காய்ந்தது கடவூரிலே, காமனைக் காய்ந்தது கொறுக்கையிலே, சூரனைக் கொன்றது திருச்செந்தூரிலே என அண்டத்திற் கூறப்படும் இடங்களெல்லாம் இந்தப் பிண்டத்திலேயே இருக்கின்றன என்பது சித்தர் முடிவு.

மனமானது சலனமே இயல்பாகவுடையது. அங்ஙனம் அலைபாயாது, இருந்த மனத்தை ஆதார இலிங்கமாகிய இலக்கு வழியே செலுத்தி மேலே போகச் செய்யின் காமன் செயல் அழியும். இச்சை அழித்து யோகத்து அமர்தலே கொறுக்கை அமர்தலாகும். கொறுக்கைத் தலத்தில் சிவன், யோகமூர்த்தியாக வீற்றிருக்கும் தத்துவம் இதுவேயாகும்.

இறைவன் அரியனாகிலும் அன்புடையார்க்குப் பொய்யலன். அவர் பரிசறிந்து ஆட்கொள்வான். ஏனெனில் அன்புடைய அச்சுதற்கு ஆழியும் பிரமற்கு வாளும் (ஒளி) கொடுத்தருளினன். மேலும் தடவரையை எடுத்த இராவணன் வலி அழித்து அவன் அமரா என அலறியபின் நீங்கா அருள் செய்தான். இன்னும் தாதை தாளற வெட்டிய அன்பனுக்குச் சண்டேசுர பதவியும் தாம் சாத்திய மாலையும்

வழங்கி அருள் செய்தான். இச் செய்திகளால் நாம் உணர்வது இறைவனது அளப் பெரும் கருணையே. இதனை உணர்ந்தால் நாமும் உய்யலாம் என்பது இப்பகுதி மந்திரங்கள் உணர்த்தும் மறைபொருளாகும்.

தக்கன் வேள்வி, தக்கன் வல்லமை படைத்தவன். பெரும் பொருட் செலவில் வேள்வி எடுத்தான். ஆணவம் அழியவே வேள்வி எடுப்பது. தக்கனுக்குத் தன் வேள்வியால் செருக்குப் பெருகிற்று. அவன் செருக்கினை அடக்குவார் யாரும் இல்லை. எனவே வேள்வி வெந்தழல் ஊடே வீரபத்திரராக இறைவன் வெளிப்பட்டுச் சினம் செய்தான். அவ் வீரத் தோற்றத்தைக் கண்ட விண்ணவர் பூசை முடியாதவராய் முறை கெட்டுச் சிந்தி ஓடினர். இன்றும் வேள்வி, திருவிழா எடுப்பவர்க்கு இக் கதை எச்சரிக்கையாகவே அமைந்துள்ளது. மூலமலத்தின் வெளிப்பாடுகள் பல. அவற்றுள் ஒன்று பெரியாரைப் பணியாமை.

"சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணித் தமராக் கொள்வோ மெனும் நோக்கு"

தக்கனன்றி அரி, அயன் முதலிய தேவரும் பெரியாரைப் பணியாமை, பெரியாரைத் துணைக்கோடாமை முதலிய குற்றங்களால் சிறுமையுற்றுப் பின்னர் தம் குற்றமுணர்ந்து திருந்தியவராவர். இவ்வுண்மையை உணர்த்துவது இவ்விரண்டாம் தந்திரத்தின் குறிப்புப் பொருளாகும். அதனாலேயே இத் தந்திரம் பெரியாரைத் துணைக்கோடல் என்னும் பகுதியோடு நிறைவுற்றிருக்கின்றது. இதனோடு ஒரு பாற் கோடாமை சான்றோருக்கு அணி ஆதலின் 'நடுவு நில்லாது இவ்வுலகம் சரிந்து கெடுகின்றது." என்னும் இத் தந்திரத்தின் தொடக்கமும் நோக்குதற்குரியது. நடுவு நிற்றலின் சிறப்பினை முதல் தந்திரத்தில் கூறியவர், இங்கு, நடுவு நில்லாத் தக்கன் முதலியோர் உறவு இடுக்கண் கூறுகின்றார். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டாதலால் ஒழுக்கம் எல்லோருக்கும் பொதுவாயினும் உயர்ந்தோருக்கு அது சிறப்பாகும். அவர் தவறின் வேலியே பயிரை மேய்வது போலாகும். அரி, பிரமன், தக்கன், சூரியன், சந்திரன், வாலை எனப்படும் யாகசாலை காக்கும் தெய்வம் முதலியோர் தேவராயினும் சகலர் என்பது சாத்திரத் துணிபு. உயர் பதவி தாங்கிய இவர்கள் அனைவரும் நடுவு நில்லாமையால் தண்டிக்கப்பட்டனர். இவர்கள் பெற்ற தண்டனைகளை உணர்த்தும் திருமந்திரம் வருமாறு.

அரிபிரமன் தக்கன் அருக்க னுடனே
வருமதி வாலை வன்னிநல் லிந்திரன்
சிரமுக நாசி சிறந்தகை தோள்தான்
அரனருள் இன்றி அழிந்தநல் லோரே.

மேலே காட்டப்பட்டோர் சாதாரணரல்லர். தெளிந்தார். சட்டம் தெரியாது. தெரிந்தால் செய்யேன். எனக் கூறும் இந்நாளில் தவறுக்குத் தண்டனை உண்டு. இவரோ தெளிந்தார். தெரிந்தே தவறு செய்தனர். கலங்கக் கூடாதவர், கலங்கி விட்டனர். ஆனால் அன்பனே நீ கலங்காதே என

அருளுரை வழங்குகின்றார். அருளால் அடைவது ஆதிபிரானையே. தக்கனது வேள்வியை அழித்து அவனுக்கு அருள் செய்தான். எனவே நீ கலங்காதே எனக் கூறி இப் பகுதியினை நிறைவு செய்கின்றார்.

தெளிந்தார் கலங்கினும் நீகலங் காதே
அளித் தாங்கு அடைவதெம் ஆதிப் பிரானை
விளிந்தா னதுதக்கன் வேள்வியை வீயச்
சுளிந் தாங் கருள் செய்த தாமொழியானே.

அடுத்து சர்வ சங்காரம் எனப்படும் உலக ஒடுக்கம் கூறுகின்றார் பிறப்பு இறப்பில் சுழன்று வரும் ஆன்மாக்கள் அனைத்தும் ஒருசேர ஓய்வு பெறும் காலம் ஒன்று உண்டு. அக் காலத்தில் இவ்வுலகு முற்றாக அழிக்கப்படும். ஐம்பூதங்களும் தத்தம் நிலை பிறக்கும். நீராலோ அழித் தீயாலோ பிரளயம் ஏற்படும்போது ஒருவனே அங்கு ஒளியாகி நின்று அருள் புரிவன். துன்பம் வந்தபோது எம்பிரான் என்று இறைஞ்சிய தேவர்கள் பின்னர் மறந்தனர். கடல், கரை கடவாது காக்கும் கடவுளை உள்ளத்தில் அமைக்கவல்லார் எத்தனை பேர்? நோயுளார் வாயுளராகிய இறைவனைப் பலர் பிரளய காலத்திலும் நினையாதவராகின்றனரே என வருந்து கின்றார்.

எலும்பும் கபாலமும் அணிந்தான் என்னும் புராணச் செய்தி தேவதேவன் சிவன் என்பதை உணர்த்தும். உணர்ந்தும் பிரமனும் மாலும் பிரானே நாம் எனக் கலங்கி நிற்க பரமன் அனலாய்ப் பரந்து முன்னின்றான். அப்பொழுதும் அடி பணிந்து அருள் பெறாது அடி முடி தேடலாயினர். ஆனால் அடியேன் வான் ஏழுலகும் மாமணிகண்டனை அவனது அருள் ஆண்மையால் அறிந்தேன் என்கிறார் மூலர். அவன் அருளால் அவன்தாள் வணங்கப்பெறலாமேயன்றி, நம் ஆற்றலால் அல்ல என்பதை உணர வைப்பதே இக் கதை உணர்த்தும் உண்மையாகும்.

## சர்வ சிருஷ்டி.

சர்வ சிருஷ்டி என்பது உலகு முழுவதையும் ஒடுக்கிய சர்வ சங்காரத்துக்குப்பின் ஆன்மாக்களின் மல கன்மங்களைப் பரிபாகப்படுத்துவதற்காக மீண்டும் சிருஷ்டிப்பதாகும்.

உலகப் படைப்புப் பற்றி உலகில் உள்ள மதங்கள் யாவும் பலவகையான கருத்துக்களைக் கூறியுள்ளன. விஞ்ஞானமும் தன் ஆய்வை நடத்திக்கொண்டேயிருக் கிறது. திருமூலர் கூறும் சர்வசிருஷ்டி என்பது இந்து மதம் - சைவ சித்தாந்தம் கூறும் உலகத் தோற்றம் பற்றிய கருத்தின் உள்ளடக்கமாகும்.

தோற்றம், நிலைபேறு, ஒடுக்கம் அற்ற ஒரே ஒரு பொருள் இறைவனே அதனை "ஆதியோடந்தம் இலாத பராபரம்" என்று திருமூலர் கூறுகின்றார். இந் நிலையில் பராபரமாய், சிவமாய் நிற்கும் இறை அறிந்தும், அறிவித்தும் நிற்கும் நிலை அடையும்போது அந்த ஆற்றல் பரை எனப் பெயர் பெறும். எனவே பராபரமும்

பரையும் ஒன்றேயாகும். சக்தி புணர்ந்த நிலையில் பராபரை. பராபரமான முழுமுதல் சக்தியாகிய பரையைப் புணர்ந்தபோது பராபரை அல்லது பரம் என அழைக்கப்படுகின்றது.

"தீதில் பரை அதன்பால் திகழ் நாதமே"

பரையில் இருந்து நாத தத்துவம் தோன்றுகின்றது. நாதத்திலிருந்து விந்துவும் விந்துவிலிருந்து தோன்றும் தத்துவங்களைச் "சொல்லது சொல்லிடில் தூராதி தூரமே" என அவற்றின் எல்லை கடந்த தன்மையினைக் கூறுகின்றார். சத்தியிலிருந்து மான் எனப்படும் அசுத்த மாயையும் அதிலிருந்து ஆகாயமும் அதிலிருந்து காற்றும் காற்றிலிருந்து நெருப்பும் அதிலிருந்து நீரும் நீரிலிருந்து நிலமும் தோன்றும் என்னும் தத்துவ விரிவு கூறப்படுகின்றது. இதனை விளக்கும் திருமந்திரம் வருமாறு.

நீரகத் தின்பம் பிறக்கும் நெருப்பிடை
காயத்திற் சோதி பிறக்கும் அக் காற்றிடை
ஓர்வுடை நல்லுயர்ப் பாதம் ஒலி சக்தி
நீரிடை மண்ணின் நிலைப் பிறப் பாமே.

சங்கார சிருஷ்டி காலத்தை,

"போக்கும் வரவும் புனிதன் அருள் புரிந்து
ஆக்கமும் சிந்தைய தாகின்ற காலம்."

எனக் குறிப்பிடுகின்றார். இக் காலத்தில் இறைவன்

"மேக்கு மிகநின்ற எட்டுத் திசையொடும்
தாக்கும் கலக்கும் தயாபரன் தானே"

எட்டுத் திசையாக விளங்கும் பிரபஞ்சத்தோடு இறைவன் இரண்டற ஒன்றாய் உடனாய்த் தாக்கிக் கலந்திருப்பான் எனும் அத்துவிதக் கலப்பினைக் கூறுகின்றார். மலமற்ற நிமலன், உயிர்களை உடலுற ஆக்கும் அளவையில் தனு, கரண, புவனங் களோடு கூட்டும்போது அவ்வவற்றின் வினைக்கேற்பவே நின்றுயிர்ப்பான். ஏனெனில் அவன் நடுவு நின்றான் என்கிறார்.

சிருஷ்டித் தொழில் பலவாகவும் அவற்றை ஆற்றுவோர் பலராகவும் கூறப்படுவதினால் கற்பவர்க்கு ஏற்படும் மயக்கத்தை நீக்க

ஒருவனு மேஉல கேழும் படைத்தான்
ஒருவனு மேஉல கேழும் அளந்தான்
ஒருவனு மேஉல கேழும் கடந்தான்
ஒருவனு மேஉட லோடுயிர் தானே.

எனக் கூறியுள்ளார்.

உடலோடு உயிரைக் கூடும் பிறவிக் குளம் செய்த மாநந்தியாகிய எம்மிறை, ஆணும் பெண்ணுமாயுள்ளவர் உள்ளத்தினுள் போகியாய் நின்று போகம் விளைத்தலையும் நான் அறிந்து கொண்டேன். இதனை,

"ஊடும் அவர்தமதுள்ளத்தினுள் நின்று
நாடும் வழக்கமும் நான் அறிந்தேனே."

எனப் பாடுகின்றார்.

**திதி.**

திதி என்பது காத்தல் எனக் கூறினும் உயிர்கள் ஈட்டிய வினைப் போகங்களை அவை உண்ணுமாறு ஊட்டிக் கழியச் செய்து ஆன்ம பக்குவம் செய்து உய்த்தலே காத்தலாகும்.

புந்தியுள் மன்னி நிற்கும் இறைவன் வெளியாய் இருளாகி உடலாயுயிராகி, கடலாய் கார்முகில் நீர் பொழிவானாய், அன்பும் அறிவும் அடக்கமுமாய் உலகெலாம் வியாபித்து நிற்றலே திதியாகும். உலக வழக்கில் பாதுகாத்தல் என்னும் வழக்கோடு இதனை ஒப்புநோக்குதல் தவறாகும். இறைவன் ஒன்றாய் உடனாய் இருந்து அவ்வவற்றின் வினைக்கேற்ப இயங்குதற்கு விட்டு ஆடல் பார்த்திருக்கும் திருவிளையாடலே இத்திதியாகும்.

**சங்காரம்.**

சங்காரமென்பது திதிபெற்றஉயிர்கள் இளைப்பாறுதற்காக அழித்தலாகும். உலக வழக்கில் இல்லாதொழிதல் என்னும் பொருளோடு மயங்காது, இறைவன் இளைப்பாற்றலாகிய சங்காரத்தை நித்த சங்காரம், வைத்த சங்காரம், சுத்த சங்காரம் உய்த்த சங்காரம் என நால்வகைப்படுத்தி அருள்கின்றான். இவற்றை நான்கு மந்திரங்களில் வைத்து ஆசிரியர் விளக்கியுள்ளார். ஆன்மா அவஸ்த்தைக்குள்ளாகும் போதும் அழித்தலாகிய இளைப்பாற்றல் நடைபெற்றுக்கொண்டேயிருக்கின்றது. நனவில் முழுத்தத்துவங்களோடும் இயங்கிய ஆன்மா ஏனைய அவஸ்தைகளில் தத்துவங்களைச் சிறிது சிறிதாக நீக்கி இளைப்பாறுகின்றது.

நித்த சங்காரத்தில் ஆன்மா உறக்கத்து ஒன்றையும் உணரா நிலை பெறுகின்றது. வைத்த சங்காரத்தில் ஆன்மா, சாக்கிரத்தே அதீதத்தை அடைகின்றது. மாயையின் விருத்தி அடங்கித் துரியத்தில் நிலைபெறுகின்றது. அந்த சங்காரமாவது மனாதீதம், மனம் முதலிய அந்தக் கரணங்களுக்கும் அப்பாற்பட்ட நிலை. இங்கு அந்தக் கரணங்கள் சங்காரம் செய்யப்பட்டு ஆன்மா இளைப்பாறுகின்றது.

"உய்த்த சங்காரம் பரன் அருள் உண்மையே"
"உய்த்த சங்காரம் சிவனருள் உண்மையே"
"உய்த்த சங்காரம் சிவமாகும் உண்மையே"

உய்த்த சங்காரம் என்பது ஆன்மா உய்வு பெற்று அருளில் மூழ்கி அருளிற் கலந்து அருளாகி நிற்கும் நிலை. இதுவே நிலைத்த சங்காரம். நிலைத்த இளைப்பாறலாகும். எனக் கூறுகின்றார்.

திரோபவம்.

திரோபவம் என்பது ஆன்மாக்கள் கன்மத்துக்கேற்ற போகங்களை அநுபவித்து அவற்றைக் கழிக்கும்வரை இறைவன் தன்னை மறைத்துப் போகங்களில் மயங்கச் செய்து அவற்றில் அழுந்தித் துய்க்குமாறு செய்யும் அருளாகும்.

இறுதியாகிய அனுக்கிரகம் தவிர்ந்த ஏனைய நான்கும் ஒன்றின் பின் ஒன்றாக நடைபெறுவனவல்ல. சிருஷ்டியிலிருந்தே அதனோடு திதியும் சங்காரமும் திரோபவமும் நடைபெற்றுக்கொண்டே வரும். படைத்தபின் காத்தலன்று, காத்தபின் சங்கரித்தலன்று, சங்கரித்தபின் திரோபவம் அன்று. படைத்தலோடு காத்தலும் இளைப்பாற்றலும் நடைபெறுவதோடு போகநுகர்ச்சியாகிய திரோபவமும் நடைபெற்றுக்கொண்டே வருகின்றது.

திரோபவத்தில் இறை உடனிருந்தும், ஆன்மா அவனை உணர்வதில்லை. இதனை,

உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே.

என உணர்த்துகின்றார்.

"இன்னப் பிறவி படைத்த இறைவனும்
துன்பம் செய் பாசத் துயருள் அடைத்தனன்"

இதற்குக் காரணம் என்ன?

"இறைவன் செய்த இரும்பொறி யாக்கை
மறையவன் வைத்த பரிசறி யாரே"

இந்த இரும்பொறி யாக்கையைத் தானென மயங்கி நிற்கத்தான் (இறைவன்) மறைந்து நிற்கும் மர்மம் என்ன? அதுவே திரோபவமாகும்.

கங்கைக் கரையிலிருந்தும் பெருகிவரும் நீரால் அழுக்கைக் கழுவாது அழுக்குள் அழுந்துவதுபோல் உத்தம சித்தனாகிய ஆன்மா, திரோபவத்தைக் கொண்டு பிராரத்த கன்மத்தை நுகர்ந்து போக்கிக் கொள்ளாது மீண்டும் ஆகாமிய, சஞ்சித கன்மங்களைத் தேடிக் கொள்கின்றது.

மண் ஒன்றே, அதுவே பலவித கலங்களாகின்றது. இறைவன் ஒருவனே, எல்லா யோனிகளுள்ளும் உள் நின்றான். கண் ஒன்றே, பலவற்றையும் காணும். ஆனால் தன்னைக் காட்டாது. காட்டும் கடவுளும் தன்னைக் காட்டான். இக் கருத்தினை,

"மண் ஒன்று தான்பல நற்கல மாயிடும்
உள் நின்ற யோனிகள் எல்லாம் ஒருவனே.
கண்ஒன்று தான்பல காணும், தன்னைக்காணா
அண்ணலு மவ்வண்ண மாகிநின் றானே"

என உணர்த்துகின்றார்.

அநுக்கிரகம்.

அநுக்கிரகம் என்பது மலபரிபாகமுற்ற உயிர்களை இறைவன் தன் சிருஉடிகளில் சேர்த்தலாகும். சேர்த்தலாகிய அநுக்கிரகம் மாத்திரமல்ல, ஐந் தொழிலும் அநுக்கிரகமே. திருவடி சேர்தலே ஆன்மாவுக்குப் பேரின்பம் அளித்த லால் இது இப் பெயர் பெற்றது.

ஐம்பூதங்களாலும் ஆக்கப்பட்டு, உயிர் நிலைபெற ஆக்கப்பட்ட இக் காயப் பையைக் கட்டி அவிழ்க்கின்ற கண்ணுதலின் செயலே அநுக்கிரகமாகும்.

"உச்சியில் ஓங்கி ஒளிதிகழ் நாதத்தை
நச்சியே இன்பம் கொள் வார்க்கு நமனில்லை"

உச்சியாகிய பிரமரந்திரத்தில் ஓங்கி எழுந்து ஆவாத சாந்தப் பெரு வெளியில் ஒளியாகத் திகழும் நாதவடிவாகிய இறையை அநுபவிக்கும் சீவன் முத்தர்க்கு மரணம் இல்லையாகும். இறப்பிலா அவர்க்குப் பிறப்பும் இல்லை.

குயவனால் பக்குவப்படுத்தப்பட்டுத் திரிகையில் ஏற்றிய மண்ணைப் போன் றது பக்குவப்பட்டு இறைவனைச் சரணடைந்த ஆன்மா.

"குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்."

அதுபோல எடுத்துச் சுமப்பானான இறைவனிடம் உயிரும் உடலும் உடைமை எல்லாம் கொடுத்தவற்கு நன்றென்ன? தீதென்ன? எதுவும் உன்றன் விரும்பன்றோ எனச் சும்மா இருப்பதே இயல்பு. இது அநுக்கிரகத்தில் ஆன்ம இயல்புணர்த்திய வாறாம்.

இனி, "ஆரும் அறியாத அண்டத் திருவுரு"

யாராலும் இலகுவிற் காணமுடியாத அண்டமே திருவுருவாகத் திகழ்பவனை, பார் முதலிய ஐம்பூதம் தோறும், பாரிடை ஐந்தாய் நீரிடை நான்காய் தீயடை மூன்றாய் வளியடை இரண்டாய், வெளியிடை ஒன்றாய்ப் பயிலும் இறையை

"கடத்திலே நீரில் பால் போல் நிற்கின்ற நேர்மையை"

குடத்து நீரில் கலந்த பால் போல் நிற்கின்ற இயல்பனை

"சோராமல் காணும் சுகம் அறிந்தேனே"

சிறிதும் சோர்வின்றி இடைவிடாது காண்கின்ற சுகத்தை அறிந்து கொண்டேன்.

"நீரினில் பால்போல் நிற்கின்ற நேர்மை"
"விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்"
"மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்"

இறைவன் மாமணிச் சோதியானாயினும் எம்போன்ற சகலருக்குமறைய நின்றுளன் அவனை நாம் காணவேண்டுமாயின் உறவுக் கோல் நட்டு உணர்வுக்

கயிற்றினால் முறுக வாங்கிக் கடைய வேண்டும். அப்போது மறைய நின்றவன், மாமணிச் சோதியாய் முன்னிற்கும். மறைய நின்றவனை உறவுக் கோல்நட்டு முறுக வாங்கிக் கடைந்தவர்களே சீவன் முத்தர். அவர்களுக்கே இறைவன் சோதியாய் முன்நிற்பன். இதுவே அனுக்கிரகமாகும். இங்ஙனம் அனுக்கிரகம் பெற்ற சீவசிவ உறவினையே "நீரில் பால்போல் நிற்கின்ற நேர்மை" கொடுத்து ஓதினார்.

விறகில் தீ போல, பாலில் நெய் போல எமக்கு நின்றவன் நீரில் பால் போல் சீவன் முத்தருக்கு நிற்கின்றான். நீராகிய சீவனோடு பாலாகிய சிவன் கலந்தது. இதனால் நீர் பாலானது போல சீவன் சிவமாயிற்று. ஆனால் நீரின் தன்மை மாய்ந்து பாலின் நிறம், இயல் எல்லாம் பெற்றாலும் நீர் வேறு பால் வேறே. அனுக்கிரகம் பெற்ற நிலையிலும் சீவன் வேறு, சிவன் வேறே. இது சைவ சித்தாந்த முடிவு. முத்திநிலையில் ஆன்ம இறைக்கலப்பை உணர்த்தும் இவ்வுவமையின் சிறப்பையும் அதனைக் கூறிய எம்பெருமான் திருமூலனாகிய எம் குரவன் அருளும் உணர்ந்து உணர்ந்து நெஞ்சு நெகிழ்ந்து போற்றுதற்குரியது. சாத்திரம் தாடலை எனக் கூறிய உவமையும் இதுவேயாகும்.
இப்போது அந்த அருமைத் திருமந்திரத்தை முழுமையாகப் பார்ப்போம்.

"ஆரும் அறியாத அவ்வண்டத் திருவுரு
பார் முதலாகப் பயிலும் கடத்திலே
நீரினில் பால்போல் நிற்கின்ற நேர்மையை
சோராமல் காணும் சுகம் அறிந்தேனே."

அண்டத் திருவுருவானது பார்முதலாகப் பயிலும். எனினும் ஆரும் அறியார். ஆனால் நான் நீரினில் பால் போல் அவன் நிற்கின்ற நேர்மையைச் 'சோராமல் காணும் சுகம் அறிந்தேன்." எனக் கொண்டு கூட்டிப் பொருள் உணர்தலே சிறப் பாகும். அறிஞர் சிலர் பயிலும் எனும் முற்றை எச்சமாகக் கொண்டு பார்முத லாகப் பயிலும் கடத்திலே எனக் கூட்டி பூமி முதலாகச் சொல்லப்படுகின்ற குடத்திலே (கடம் – குடம்) எனப் பார்முதலிய பூதங்களில் நீரில் பால் போல் இறைவன் உள்ளான் எனப் பொருள் கண்டனர். இறைவன், பூதங்களில் விறகில் தீ போல் மறைந்து நிற்கின்றானேயன்றி நீரில் பால் போல் நில்லாமையாலும் அனுக் கிரகம் பெற்ற சீவ சிவக் கலப்பே பொருளாதலாலும் அவ்வுரை சிறவாமை உணரப்படும். அவர் பார் முதலியவற்றைக் கடமாகவே உருவகித்தனர். சீவன் முத்தராகிய திருமூலர் உடம்போடுற்ற நிலையிலேயே நீரினில் பால் போல் நிற்கின்ற நேர்மையைச் சோராமற் காணும் சுகம் அறிந்தேனே. எனக் கூறுதலால் மூலரின் திருமேனியே கடமாக உருவகிக்கப்பட்டதெனப் பொருள் கொள்ளப்பட்டது.

## கர்ப்பக் கிரியை.

ஐந்தொழில்களையும் விளக்கியபின், தாய் வயிற்றிலிருந்து வெளிவருமுன் மாதாவின் கர்ப்பத்தில் நடைபெறும் தொழில்களை நாற்பத்தொரு திருமந்திரங் களால் விளக்குகின்றார். கர்ப்ப நிகழ்வுகளை இன்று விஞ்ஞானம் விளக்குகின்றது.

திருமூலர் அந்திமதிபுனை அரனடி நாள்தொறும் சிந்தை செய்து ஆகமம் செப்பிய வராததாலும் நந்தியருளால் மெஞ்ஞானத்துள் நண்ணியவராதலாலும் அவர் கூறும் கர்ப்பக் கிரியைகள் மெஞ்ஞானத் தெளிவாகும். இங்கு கூறப்படும் செய்திகளெல்லாம் மனித முயற்சிக்கு அப்பாற்பட்டவை. திருவருளால் நிகழ்பவை. திருவருளை உணர்ந்து பற்றி உய்யவே இவை கூறப்படுகின்றன.

மரணத்தில் பிரிந்த 25 தத்துவங்களும் கர்ப்ப உற்பத்தியில் கூடுகின்றன. தத்துவங்கள் கர்ப்பத்தில் உயிரோடு பொருந்துவதை பெற்றோரும் அறியார்.

"இட்டார் அறிந்திலர் ஏற்றவர் கண்டிலர்
தட்டான் அறிந்தும் ஒருவர்க் குணர்த்திலர்
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்குளன்
கெட்டேன் எம்மாயையின் கீழ்மை எவ்வாறே"

கரு உற்பத்தியைச் செய்த பெற்றோர் அறியவில்லை. பிரமன் அறிந்தும் உரைக்கவில்லை. மூலப் பரமனும் அங்கிருந்தான். என்னே இந்த மாயை. தொடர்ந்து சுக்கில சுரோணிதத் தொடர்பும் ஆண், பெண், அலி இவற்றின் பிறப்பிற்குக் காரணமும் உடல் உறவைப் பொறுத்துக் குழந்தையின் ஆயுட் கணக்கும் அது குறுடாதல், முடமாதல், கூனாதற் காரணமும் கூறப்படுகிறது.

குயில் முட்டையைக் காக்கை அடை காப்பதுபோலத் தாயும் மயக்கத்தால் கர்ப்பத்தில் வளர்க்கின்றாள். உண்மையில் அது அவளுடையதல்ல.

சங்கார காலத்தில் பரத்தில் ஒடுங்கிய ஆன்மா மல நீக்கத்தின் பொருட்டு உடம்போடு கூடிப் பிறவி எடுக்கவேண்டில் கடலில் உப்புத் திரண்டது போல மீண்டும் பிறக்கும். இதனை உணர்த்தும் திருமந்திரம் வருமாறு.

"பரத்திற் பதிந்து பதித்தநற் காயம்
உருத்தரித் திவ்வுடல் ஓங்கிட வேண்டில்
திரைக்கடல் உப்பில் திரண்டது போலத்
திரித்துப் பிறக்கும் திருவரு ளாலே"

இப்பகுதி விஞ்ஞான நோக்கிலும் அநுபூதி மான்களால் மெய்ஞ்ஞான நோக்கிலும் ஆராயப்படவேண்டிய ஒன்றாகும்.

**மூவகை ஆன்மாக்கள்.**

முற்கூறியாங்கு கருப்பத்துட் பிறந்த ஆன்மாக்களின் இயல்பு நோக்கி மூவகையாகப் பிரிக்கப்படும். இப் பகுதிக்கு முன்னுரையாக அமைந்துள்ள அருமைத் திருமந்திரம் வருமாறு.

"சத்தி சிவன் விளையாட்டால் உயிராக்கி
ஒத்த இருமாய கூட்டத்திடை பூட்டிச்
சுத்தம தாகும் துரியம் பிரிவித்துச்
சித்தம் புகுந்து சிவமய மாக்குமே."

சக்தியோடு கூடிய சிவன் மலகன்மங்களோடு கூடிய மாயையின் காரியமாகிய 31 தத்துவங்களும் மலகன்மங்களோடு கூடாத மாயையின் காரியமாகிய 5 தத்துவங்களும் ஆகமொத்தம் 36 தத்துவங்களாலான உடம்பில் உயிரைப் பூட்டி உயிராக்குகின்றான். இதுவே படைத்தலாகும். பல பிறவிகளில் பக்குவப்பட்ட பின்னர் துரிய அவத்தையில் மாயா காரியமாகிய 36 தத்துவங்களில் இருந்து ஆன்மாவைப் பிரிக்கின்றான். இறுதியாகத் துரியாதீத அவத்தையில் சித்தம் புகுந்து சிவமயமாக்குகின்றான்.

மூவகைப்பட்ட ஆன்மாக்களுள் விஞ்ஞானகலர் நால்வகைப்படுவர். பிரளயாகலர் மூவகைப்படுவர், சகலர் மூவகைப்படுவர். இங்ஙனம் மூவகையினரும் பத்துவகையினராவர்.

இறுதியாக இவர்களின் இயல்பும், இவர்கள் பெறும் பேறும் கூறி இப் பகுதி நிறைவு பெறுகின்றது.

## பாத்திரம்.

பாத்திரம் என்பது சற்பாத்திரமாகும். மூவகை ஆன்மாக்களுள் சிவஞானியரே சற்பாத்திரராவர். பாத்திரம் கொள்கலமாதலால் இல்லறத்தார் அவர்க்கே வழங்க வேண்டுமென்பார்.

"திலம் அத்தனை பொன் சிவஞானிக்கு ஈந்தால்
பலமுத்தி சத்தி பரயோகமும் தரும்."
திலம் – எள்ளு

"நிலம் அத்தனை பொன்னை நின்மூடர்க்கு ஈந்தால்
பலமும் அற்றே பரயோகமும் குன்றுமே."

எனச் சிவஞானியார்க்கே வழங்க வேண்டும். அவரே சற்பாத்திரராவர் எனக் கூறியவர்.

உலகத்தோர், உயிர் உண்டிடும் காலனைக் கண்டிருந்தார். காலனைக் கொன்று தன்னோடு ஆன்மாவைச் சேர்த்துக் கொள்ளும் அருட்குணத்தினைத் தம்முள்ளே கொண்டிருந்தார். இருந்தும் நீதியுணர்ந்தாருக்கு அருளும் நாதனை உணர்ந்தவர் சிலரே. அவரே சற்பாத்திரராவர். இதனை உணர்த்தும் மந்திரம் வருமாறு.

"கண்டிருந் தாருயிர் உண்டிடுங் காலனைக்
கொண்டிருந் தாருயிர் கொள்ளுங் குணத்தனை
நன்றுணர்ந் தார்க்கருள் செய்திடும் நாதனைச்
சென்றுணர்ந் தார்சில தேவரு மாமே"

நன்று – நீதி.

நெய் விட்டு எரிக்காத விளக்கு விளக்காகுமோ? சிவஞானமில்லார் சற்பாத்திரராவரோ? கருவாய்க் கிடந்த காலத்தும் கழலடியே நினையும்

கருத்துடையேன் என்றும் மெய்விட்டிலேன், விகிர்தன் அடியன்றி வேறு தேடிலேன் எனத் தன் மேல் வைத்துச் சற்பாத்திரராகிய சிவஞானியர் இயல்பு கூறுகின்றார்.

"கைவிட்டிலேன் கருவாகிய காலத்தும்
மெய்விட்டிலேன் விகிர்தன் அடி தேடுவன்
பொய்விட்டு நானே புரிசடை யானடி
நெய்விட்டிலதை இடிஞ்சிலுமாமே."

சிவஞானியாகிய சற்பாத்திரனுக்குத் தன் செயலென எதுவும் இல்லை. எல்லாம் சிவன் செயலே. அவன், காவலனாகிய பேர் நந்தி காட்டக் கண்டு, ஏவ, இயங்கி இருப்பவன். எனவே அவன், ஆவன ஆவ, அழிவ அழிவன, போவன போவ, புகுவ புகுவன என உலகப் படைப்பும் ஒடுக்கமும் வினையின் போக்கு வரவும் ஆகியவற்றைப் புரிந்து நன்றே செய்வாய், பிழை செய்வாய் நானே இதற்கு நாயகம் எனச் சிவஞானியாகிய சற்பாத்திரன் அமைந்திருப்பான். மந்திரம் வருமாறு.

"ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவனை செய்யும் இளங்கிளை யோனே."

அபாத்திரம்.

உண்மை ஞானிகளே பாத்திரமாவார் என உடன்பாட்டால் உயர்த்திக் கூறிய மூலர், அபாத்திரம் என எதிர்மறை முகத்தாலும் ஞானிகளின் உயர் வினையே கூறுகின்றார்.

அபாத்திரர், கோல வறட்டுப் பசு என்கிறார். அபாத்திரர், பாத்திரர் போலக் கோலமாகக் காட்சிதருவர். ஆனால் ஞானப்பால் தரார். அதனால் பால் தராத கொழுத்துத் தளதளவென நடந்து திரியும் மலட்டுப் பசுவினை உவமையாக்கிய நயம் அறிந்து இன்புறுதற்குரியது. வருந்தி உணவிட்டு வளர்த்தாலும் மலடு பால் தராது.

பருவம் தவறிச் செய்த பயிர்விளைந்தும் பயன் தராது. முன்னது வீண் முயற்சி, பின்னது வீண் முயற்சியோடு பொருள் அழிவுமாகும். இதனை,

"கோல வறட்டைக் குனிந்து குளகிட்டுப்
பாலைக் கறந்து பருகுவ தேஒக்கும்
சீலமும் நோன்பும் இலாதவர்க் கீந்தது
காலம் கழிந்த பயிரது வாகுமே."

என மந்திரம் பாடுகின்றது.

ஆதலால் யோக இயம நியமங்களோடு அன்புள்ளவர்க்கன்றி ஏனையோருக்கு ஈவதும் பெரும் பிழையபகும். சிவஞானியர்க் கீந்தவன் நரகிற் புகான். அன்னலை எண்ணி இறைஞ்சாதார்க்கு ஈந்தவரும் ஏற்பவரும் நரகமே புகுவர் என அபாத்திரரின் இழிவுகூறு முகத்தான் சற்பாத்திர உயர்வு கூறி நிறைவு செய்கின்றார்.

### தீர்த்தம்.

இறைவனுக்குத் தீர்த்தன் என்னும் திருநாமம் ஒன்றுண்டு. கங்கை, காவேரி முதலிய தீர்த்தங்கள் புற அழுக்கையே அகற்றும். அதனால் கங்கை ஆடிலென்? காவிரியாடிலென்? பல தீர்த்தங்கள் நம்முள் உள்ளன. அதனை மெல்லக் குடைந்து ஆடிவினை அழுக்கை அகற்றாது பள்ளமும் மேடும் பரந்து திரிகின்றோம்.

இயமம், நியமமாகியவற்றை மேற்கொள்ளும்போது உள்ளத்தின் உள்ளே உள்ள பலதீர்த்தங்களை மெல்லக் குடைந்து நீராடுகின்றோம். இயமம் பத்து, நியமம் பத்து, இவற்றின் விரிவு மூன்றாம் தந்திரத்தில் விளக்கப்பட்டுள்ளது.

இங்ஙனம் குடைந்து குடைந்து நீராடிய ஞானியர்க்கு இறைவன் அவர்தம் சிந்தையுள்ளான். வலியறிவாளராகிய யோகியர்க்கு வாய்க்கினும் வாய்க்கும். ஏனெனில் யோகியர் சித்தியில் மயங்கிச் சிவஞானம் எய்தப் பெறாது விடுதலுமுண்டு.

உள்ளத்திலுள்ளே உணரும் ஒருவனை, அவனைத் திருவருளாற் சென்று கூட்டித் திருவருட் தீர்த்தமாடாது ஊரூராக உள்ள தீர்த்தம் பல தேடித் திரிவர். கடலில் போட்டுவிட்டுக் குளத்தில் தேடுபவரை ஒத்தவராவர். மும்மல நீக்கமே வீடுபேறாகும். அதனைக் கழுவுவது திருவருட் தீர்த்தமே. கறுப்பாகிய தாமதமும் சிவப்பாகிய இராசதமும் வெளுப்பாகிய சாத்துவிகமும் திருவருட் தீர்த்தத்தால் தூய்மை பெறும். இவற்றை உணர்த்தும் மந்திரங்கள் வருமாறு.

கடலிற் கெடுத்துக் குளத்தினிற் காண்டல்
உடலுறத் தேடுவார் தம்மையொப் பாரிவர்
திடமுற்ற நந்தி திருவருளாற் சென்று
உடலிற் புகுந்தமை ஒன்றறியாரே.

கலந்தது நீர துடம்பிற் கறுக்கும்
கலந்தது நீர துடம்பிற் சிவக்கும்
கலந்தது நீர துடம்பில் வெளுக்கும்
கலந்தது நீர் நிலங் காற்றது வாமே.

### திருக்கோயிலிழிவு.

திருக்கோயிலை இழிவுபடுத்தினால் உண்டாகும் தீமைகளைக் கூறுவதன் மூலம் திருக்கோயில் சிறப்பினை எதிர்மறையாகச் சிறப்பிக்கின்றார்.

அசையாது உறுதியாக அமைக்கப்பட்ட இலிங்கத் திருவுருவினைப் பறித்து வேறோரிடத்தில் அமைத்தல் தவறாகும். இச் செயலால் ஆட்சிநிலை குலையும். நாட்டில் பெருநோய் தோன்றும். இது காவலன் நந்தி கட்டுரையாகும். திருக் கோயில் மதிலிலேயுள்ள ஒரு கல்லைப் பெயர்த்தாலும் அச் செயல் அரசரை அழிக்கும். முனிவர்களையும் வேதியர்களையும் வேதனைப்படுத்தும். இது விண்ணவன் ஆணையாகும்.

"ஆற்றரு நோய்மிக் கவனி மழையன்றிப்
போற்றரும் மன்னரும் போர்வலி குன்றுவர்"

"முனைவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னம் களவு மிகுத்திடும்."

ஒழுக்கமற்ற பிராமணன் பூசை புரிவானேல் அரசு நிலை தவறும். நாட்டில் பஞ்சம் மிகும். இவையெல்லாம் நந்தி உரையென முடிபு கூறுகின்றார். இவற்றால் கோயில் வழிபாடும் வழிபாடியற்றும் அந்தணர் ஒழுக்கமும் வற்புறுத்திய வாறாம்.

அதோமுக தரிசனம்.

கண்டம் கறுத்தது.

இறைவனுக்குச் சொல்லப்பட்ட ஐந்து முகங்களோடு கீழ் நோக்கியுள தாகிய அதோமுகமும் சொல்லப்பட்டுள்ளது. "அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்" என்பது இதுவே. ஆறுதல் தரும் முகமே ஆறுமுகம். அதுவே அதோ முகம்.

"எம்பெருமான் இறைவாமுறை யோவென்று
வம்பவிழ் வானோர் அசுரன் வலிசொல்ல
அம்பவள மேனி அறுமுக போயவர்
தம்பகை கொல் என்ற தற்பரன் தானே."

சூரன் வலிசொல்த் தேவர் வேண்டினர். இறைவன் அதோமுகமாகிய ஆறாவது முகத்தால் கீழ் நோக்கி அருட்பார்வை செலுத்தினான். முருகன் அவ தரித்த கதை உணர்த்தும் உண்மை உணர்த்திய வாறாகும்.

"அண்டமொரு எண்திசை தாங்கும் அதோமுகம்
கண்டம் கறுத்த கருத்தறி வாரில்லை
உண்டது நஞ்சென்று உரைப்பர் உணர், விலோர்
வெண்டலை மாலை விரிசடை யோற்கே."

பாற்கடல் கடைந்து நஞ்சுண்டு கண்டம் கறுத்த கதையினை உண்மையினை உணர்த்து கின்றார். அதோமுகம் தாங்கிய கண்டமே நஞ்சுண்டு கறுத்தது. ஆண வத்தின் காரியமாகிய அஞ்ஞானம் முதலிய நஞ்சு உயிர்களை வருத்தாதபடி தான் விழுங்கிக் கழுத்தடக்கிக் காத்தார். பதிஞானமாகிய அமுது வேண்டி அதனை உண் டார் சாகார் ஆதலின் உயிர்களாகிய பாற்கடலை நல்வினையாகிய தேவர்களும் தீவினையாகிய அசுரர்களும் ஆன்ம போத மத்திட்டுக் கடைந்தனர். அப்போது புறப்பட்ட ஆணவ நஞ்சைத் தாம் கழுத்தடக்கிப் பதிஞானமாகிய அமுதத்தைத் தேவர்க்கு ஈந்தார் என்பதே உட்பொருளாகும். இதனையறியார் உண்டது நஞ் சென்று உரைப்பர்.

"அதோமுக மாமல ராயது கேண்மின்
அதோமுகத் தாலொரு தூறாய் விரிந்து
அதோமுக மாகிய அந்தமில் சத்தி
அதோமுக மாகி அமர்ந்திருந் தேனே"

அதோமுகமாகிய அந்தமில் சக்தியானது ஒரு நூறாய் விரிந்து பிரகிருதி மாயா புவனங்களாக, அவற்றோடு இறைவன் அதோமுகமாக அமர்ந்திருந்தான். எனவே உயிர்களின் மல நீக்கத்தின் பொருட்டு இறைவன் உயிர்களை நோக்கி அருட் பார்வை செலுத்துதலே அதோமுக தரிசனமாகும்.

## சிவ நிந்தை.

மூலப் பரம்பொருளே சிவனாகும். அப்பொருளை அறியாமையால் நிந்தித்தல் தகாது. தெளிந்த ஞானமுடையோர் இறைவனை இகழார். இகழ்வோர் கிளி ஒன்று பூனையாற் கிழிக்கப்பட்டது போலாவர். சிவ நிந்தனை என்பது சிவ ஞானமாகிய மூலப் பரம்பொருளின் மேலாந்ததன்மையை மதியாமையாகும். மதியாத் தேவரும் அசுரரும் தம்முன் பொருது மடிந்தனர்.

"அசுரரும் தேவரும் நற்பகை செய்து நடுவேமுடிந்தனர்,
பொய்ப்பகை செய்யினும் ஒன்று பத்தாகுமே."

## குருநிந்தை.

இறையருளைக் காட்டும் குருவை மதியாமையாகும்.

"ஓரெழுத் தொருபொருள் உணரக் கூறிய
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊருடைச் சுணங்கனாய்ப் பிறந்தங் கோருகம்
பாரிடைக் கிருமியாய்ப் படிவர் மண்ணிலே."

ஓங்காரமாகிய ஓரெழுத்தின் உண்மைப் பொருளை உணர்த்திய குருவை மதியாதார் தெரு நாயாய் அலைவர். ஒருயுகம் புழுவாய்ப் பிறந்து வருந்துவர். மெய்ஞானிகளையன்றிப் பத்தினிப் பெண்டிரையும் இறை பக்தர்களையும் இழிவு செய்தவர் அழிவர்.

"பத்தினி பக்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்"
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றினில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே.

குரு நிந்தனை புரியத் தேசமும் நாடும் சிறப்பும் அழியும். மன்னர் பீடமும் இந்திரன் இருக்கையும் அழியும். ஞானிகளைச் சாதாரண மனிதரோடு ஒப்ப நினைத்தலும் நிந்தனையே ஆகும். இருகைப்பட்ட மாமணியைக் கைவிட்டு விட்டு வெறும் கல்லைச் சுமப்பது போலாகும். இனிய உணவினை உண்ணாது கசப்பை உண்ணுதல் ஒக்கும் என நிந்தனை செய்வோரின் இழிவு கூறி இப்பகுதியை நிறைவு செய்கின்றார்.

## பொறையுடைமை.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா, நோதலும் தணிதலும் அவற்றோரன்ன" என்னும் உண்மை உணர்ந்த ஞானியர்க்குப் பொறையுடைமை இயல்பாயமைவதாகும். பொறுமையை இழக்கச் செய்வது உலகப்பற்றாகும். அவற்றினைப் பல்லியாகப் பற்றி விடா உடும்பாக உருவகிக்கின்றார். பற்று ஐம்புல வழிகளைப் பற்றி நின்றே இயங்குவது. அதனால் அப் பற்று மூக்கையும் நாவையும் தெற்றிக் கிடந்து சிந்தையைச் சிதைக்கின்றது என்கிறார். இத் துயர் தீரவேண்டுமாயின் உள்ளத்தில் வற்றாதிருக்க வேண்டியது சாதாரண பொறுமைக்குமல்ல. மா கமையாகும். மா கமை – மிகப்பெரிய பொறுமை. இதனை விளக்கும் திருமந்திரம் வருமாறு.

"பற்றிநின் றார்நெஞ்சிற் பல்லிதன் ஒன்றுண்டு
முற்றிக் கிடந்தது மூக்கையும் நாவையும்
தெற்றிக் கிடந்து சிதைக்கின்ற சிந்தையுள்
வற்றா தொழிவது மாகமை யாமே."

பற்றால் வரும் இன்ப துன்பங்களைப் பொறுமையால் வென்று சமநிலை கண்டவர் ஞானம் விளைந்தவராவர். உம்பர்தம் ஆதியைச் சேனைபோல் வளைந்து திசைதொறும் வணங்க ஏனைய ஞானத்தகுதிகளுடன் அருளும் கைகூடும். எனவே,

"வல் வகை யாலும் மனையிலும் மன்றிலும்
பல்வகை யாலும் பயிற்றிப் பதஞ்செயும்"

எவ்விடத்தும் பலவகையாலும் உறுதியோடு பொறுமையைப் பயின்று ஆன்மாவைப் பக்குவம் செய்துகொள்ளுங்கள்.

"கொல்லையி னின்றுகுதி கொள்ளும் கூத்தனுக்கு
எல்லையி லாத இலயமுண் டாமே."

கொல்லை என்பது சுடலை. சுடலையில் கூத்தாடும் கூத்தன் என்றது வினைகளெல்லாம் சுட்டுப் பொசுக்கிய துரியம் கடந்தோரின் சிற்பர வியோமமாகும். திருச்சிற்றம்பலத்துள் நின்று பொற்புடன் நடம்செயும் கூத்தனையாகும். அந்தக் கூத்தனோ இலயத்திலுண்டாகும். பொறையுடைமையின் பயன் இது வென்றவாறு.

## பெரியாரைத் துணைக்கோடல்.

"அரிய வற்று ளெல்லாம் அரிதே,
பெரியாரைப் பேணிக் கொளல்."

துணைக்கோடலின் சிறப்பினைக் கூறுகின்றார் "மனநலம் நன்குடையார்க்கும் இன நலம் ஏமாப்பு டைத்து" ஆதனால் இப் பகுதியை இறுதியில் வைத்து இத்தந்திரத்தை நிறைவு செய்தலின் அருமையை உணர்ந்து கொள்வோமாக.

பெரியார் எனப்படுவார் யாரெனில் தேடவல்லார்க்கு அருள்கின்ற தேவர் பிரானோடும் கூட வல்லாரேயாவர். ஆனால் நானோ உலகியலில் ஓடியும் பாடியும் வீணே திரிந்தேன். இன்று பெரியாரைத் துணைக்கொண்டேன். துன்பத்தால் துயருறாதோரே பெரியோர். துன்பத்தால் தளிர்போல் தயங்கிடும் துன்பத்தால் தொடக்குறார். பெரியாரைத் துணைக்கொண்டதனால் வீடு பேறும் பெற்றேன். அடியாருடன் சென்று பதிபுக்கேன். உடையான் என்னை வருக என்றான். அருமை, பெருமை, உரிமையாகிய திரிமை (மும்மை) வல்லாரோடு சேரும் பேறு பெற்றேன். அதனால் ஞானம் பெற்றுப் பிறவிச் சுழி நீந்தி ஊழியிருக்கும் பேறு பெற்றேன். எனத் தன்னை வைத்துப் பெரியாரைத் துணைக்கோடலின் பெருமை கூறி இப்பகுதியினை நிறைவு செய்கின்றார்.

ஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓஓ

## நிறைவுரை

மூல னாகிய முதல்வன் அருண்மொழிச்
சீல முணர்ந்த சிறீம் சங்கரச்
சாமி யாகிய சற்குரு நற்பதம்
ஈழ முய்ய ஏத்துவன் சிந்தையில்.

அன்ன வர்ஒரு நாளென் அகத்திலே
இன்ன ருள்தர எழுந்தருள் போதிலே
சொன்ன வாசகத் தூமொழி இவ்வுரை
பன்ன லானது பழியெனக் கில்லையே.

கோல மொன்றும் கொள்ளாக் குருபரன்
ஈழ முய்ய எழுந்த என்னிறை
ஞால முய்யநற் சிந்தனை தந்தவன்
ஏல வேயென் உள்ளம் புகுந்தவன்.

மூலன் உரை செய்த மந்திர வாசகச்
சீல முணரும் திறமெனக் கில்லையால்
கால னெனைக்கொடு போகா முனமிந்த
வேல னுரை செய்த விளக்கம் முற்றுமே.

ஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃஃ **வித்துவான் க. ந. வேலன்**

# திருமந்திரத்தில் யோகப்பழக்கம்

சித்தர் பலருக்கும் முன்னோடியாக விளங்கியவர் திருமூலரே. சித்தர் பற்றிய இலக்கணம் கூறுவது போல அமைவது மந்திரம் 1403. சமாதிநிலை எய்தியவர் உள்ளத்தில் பரந்த உலக தரிசனம் பெறுவர்; உள்ளொளியாகிய பேரொளியும் அவர்களுக்குத் தோன்றும், சத்திதரிசனமும் அவர்கள் பெற்றிருக்கும் இத்தகைய சமாதி அனுபவம் பெற்றோர் எல்லாச் சித்திகளையும் பெற்றவராவர்.

யோகச் சமாதியின் உள்ளே யகலிடம்
யோகச் சமாதியின் உள்ளே யுளரொளி
யோகச் சமாதியின் உள்ளே யுளசத்தி
யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே

மேலும் சித்தர் என்போர் இவ்வாழ்க்கையிலேயே இருக்குமிடத்திலேயே சிவலோக அனுபவம் பெற்றவரெனத் திருமூலர் அறுதியிட்டுக் கூறுவர்.

"சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர்" (மந்திரம் 169)

மூன்றாம் தந்திரமாகிய வீராகமத்தில் 335 மந்திரங்களும் 21 பிரிவுகளும் உள்ளன. அட்டாங்கயோகம் பற்றிய முன்னுரை 4 மந்திரங்களாக அமைகின்றது. இயமம்(தீதகற்றல்), நியமம்(நன்றாற்றல்), ஆதனம் (இருக்கை),பிராணாயாமம் (வளிநிலை), பிரத்தியாகாரம்(தொகைநிலை), தாரணை(பொறைநிலை), தியானம்(நினைதல்), சமாதி(நொசிப்பு, என்னும் எட்டு உறுப்புக்கள் கொண்டதே அட்டாங்க யோக நெறியாம்.

<u>இயமம், நியமம்</u>

தீயவற்றைச் செய்யாது ஒழுகுதல் இயமமாகும். கொல்லாமை,பொய்யாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, காமமின்மை, ஆராய்வுடைமை, பணிவுடைமை, நீதி வழுவாமை, பகுத்துண்ணல், குற்றமின்மை ஆகிய தன்மைகளை வளர்ப்பவர் இயமநெறி நிற்போராவர்.

நல்லன செய்தல் நியமமாகும். தூய்மை, கருணை, சுருங்கிய உணவு, பொறுமை, நேர்மை, வாய்மை, உறுதியுடைமை, காமம் கொலை களவு ஆகியவற்றை தீமையெனக் காண்டல் என்பன நியமநெறி நிற்போர் குணங்கள் இயமம், நியமம் பற்றிய ஆய்வு முதலாந்தரத்தில் அமையும்.

ஆதனம் பற்றியும் அட்டாங்க யோகத்தின் பிற கூறுகள் பற்றியும் கூறுமுன் முக்கியமான ஒரு கருத்தை முன்வைக்க வேண்டும். இந்த யோகத்தின் எல்லா அங்கங்களைப்பயில்வதற்கும், அவற்றில் முன்னேறுவதற்கும் ஆசான் ஒருவருடைய துணையும் உதவியும் இன்றியமையாது இருத்தல் வேண்டும். பயிற்சிகள் பற்றி

"எட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன்
கூட்டுங் குருநந்தி கூட்டி டினல்லது" (மந்திரம் 289)

எனத் திருமூலரும் குருவின் துணை வேண்டுமென்பதை வற்புறுத்துவர்.

ஆதனம்

நூறு பல ஆசனங்கள் இருப்பதாகக் கூறினும் தாம் முக்கியமாகக் கருதும் எட்டையே திருமூலர் குறிப்பிடுவர். பத்மாசனம், பத்திராசனம், குக்குடாசனம், சிங்காசனம், கோமுகாசனம், சுகாசனம், வீராசனம், சுவத்திகாசனம்.

பிராணாயாமம்

உடம்பிலுள்ள பிராணன் என்ற ஆன்மசக்தியின் இயக்கத்தால் பிராணவாயு என்ற உயிர்க்காற்று உடம்பில் இயங்கி ஆயுளுக்கு ஆதாரமாகிறது. பிராணவாயு என்பதற்கு மூச்சு, சுவாசம், உயிர்ப்பு போன்ற பெயர்களும் உண்டு. மூச்சுக் காற்றை கட்டுப்படுத்தி ஆளும் அளவுக்கு உயிர்ச்சக்தியைப்பேணி வளர்த்திட முடியும். மூச்சுக்காற்றை ஒழுங்கு படுத்தும் முறையே பிராணாயாமம் ஆகும்.

மூக்கின் இடப்பக்கத்து துவார வழியாகவரும் மூச்சு இடைகலை எனப்படும். இடப்பால் நாடி எனவும் கூறுவர். வலப்பக்கத்து துவாரவழியாக வரும் மூச்சு பிங்கலை அல்லது வலப்பால் நாடி எனப்படும். இவ்விரு நாடிகளுடன் மூன்றாவதாகிய நாடி சுழுமுனைநாடி எனப்படும். இது முள்ளந்தண்டோடு இயல்பொத்த நிலையில் அடியிலிருந்து உச்சிவரை செல்லும் நாடியாகும். உடம்பில் உள்ள 10 நாடிகளுள் இம்மூன்று நாடிகளுமே யோகப்பயிற்சியில் முக்கிய இடம் பெறுவன. நடுநாடி, வீணாத்தண்டு, மேருமலை என்பன சுழுமுனைக்குரிய பெயர்களுட் சிலவாம்.

மூச்சை உள்ளே இழுத்தலைப் பூரகம் செய்தல், பூரித்தல் என்பர். மூச்சை உள்ளே அடக்கி வைத்திருத்தலைக் கும்பகம் செய்தல் என்பர். மூச்சை வெளியே விடுதலை இரேசகம் செய்தல் என்பர்.

இப்போது பிராணாயாமத்துக்குரிய அடிப்படைப்பயிற்சியை நோக்குவோம். மூச்சுப்பயிற்சி தொடங்கும் போது எப்போதும் இடப்பக்க நாசிமூலம், இடைகலை மூலம் மூச்சை உள்ளே இழுக்க, பூரிக்க, தொடங்க வேண்டும்.

"எங்கே இருக்கினும் பூரி இடத்திலே" (மந்திரம் 552)

உயிர்ப்பினை மூச்சை 16 மாத்திரை நேரம் பூரகம் செய்தல் வேண்டும். பின் 64 மாத்திரை நேரம் உள்ளே தடுத்து நிறுத்தல் வேண்டும். கும்பகம் செய்தல் வேண்டும். அதன்பின் 32 மாத்திரை நேரம் மூச்சை வெளியே விடல் வேண்டும். இரேசகம் செய்தல் வேண்டும். இவ்வாறு மாறி மாறி இயன்ற அளவு செய்தல் வேண்டும். எனவே பூரகம், கும்பகம், இரேசகம் என்பவைவற்றைப் புரிதலுக்கான விகித சமனைப் பின்வரும் முறையில் அமைக்கலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| பூரகம் | : | கும்பகம் | : | இரேசகம் |
| 16 | : | 64 | : | 32 |

இதனை 1 : 4 : 2 என்னும் விகிதசமனாகச் சுருக்கலாம். இதுவே "காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்கு" ஆன விகிதா சாரமாகும். தலை, கண், காதுகள், கால், பெருவிரல், நெஞ்சகம், தொப்பூழ் போன்றவை நிறையுமாறு பூரிக்க வேண்டும். பின் கும்பகம் செய்து, அளவான முறையில் இரேசகம் செய்தால், வாயுவைக் கும்பகம் செய்வதால் பூரண நன்மை விளையும். பயிற்சியாளர் சோம்பல் அற்றுத் துள்ளி நடக்கும் இயல்பினர் ஆவர். முதுமையடைந்த நிலையிலும் இளமைப் பண்புடையவராயிருப்பர். மேனி பொன் நிறமாகும். தலைமயிர் கறுத்து விளங்கும். சிவபெருமான் திருவருளால் மரணமின்றி நெடுங்காலம் வாழ்வர். "கூற்றை யுதைக்கும் குறியது வாமே" (மந்திரம் 553) என்பர் திருமூலர்.

<u>பிரத்தியாகாரம்</u>

ஐந்து புலன்களையும் நல்ல வழியில் இயக்குவதே யோகப் பயிற்சி முறையில் உள்ள அடிப்படையான கருத்தாகும். வெளிமுகமாகப் புறத்தே செல்லும் ஐந்து புலன்களையும் உள்முகமாகத் திருப்புதல் வேண்டும். இவ்வாறு திருப்புதற்கு இறை சிந்தனையில் மனத்தைப் பழக்குதல் வேண்டும். பிராணாயாமப் பயிற்சி இதற்குத் துணையாகிறது. மூச்சை அடக்கி நெறிப்படுத்துமளவிற்கு மனமும் அடங்குவதை யோக நெறியினர் உணர்ந்தனர். மேலும் உடம்பிலுள்ள ஆற்றல் மையங்களாகிய ஆதார நிலையங்களையும் அறிந்தனர். இவற்றைக் கீழிருந்து மேலாக முறையே மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் சக்கரங்கள் என்பர். இவையாவும் தாமரை மலரை ஒத்திருக்கும் என்பர். இவற்றுக்கு மேலாக உச்சியில் இருப்பதே 1000 இதழ் தாமரை எனக் அழைக்கப்படும் சகஸ்ராரம், மூலாதாரம் உள்ள நிலையைத் திருமூலர் "எருவிடும் வாசற் கிருவிரல் மேலே
கருவிடும் வாசற் கிருவிரற் கீழே"
(மந்திரம் 565) எனக்குறிப்பிடுவர்.

எருவிடும் வாசல் மலம் கழிக்கும் துவாரம் ஆகும். கருவிடும் வாசல் இந்திரியம் வெளிவரும் வழி இந்த மூலாதாரத்துக்கு அண்மையிலேயே மூலக்கனலாகிய குண்டலினி சத்தி உள்ளது. திருவருளே உருவாக விளங்கும் பேரறிவுப் பேரொளியும் அங்கே உள்ளது. இந்த சத்திகளை எழுப்புவதற்கு ஓம் என்னும் மந்திர செபம் முக்கியமாகும்.

ஆறு ஆதாரங்களும் நடுநாடியாகிய சுழுமுனையை மையமாகக் கொண்டு ஒன்றன் மேல் ஒன்றாக புருவ நடுவரை அமைந்துள்ளன. மூக்கிலிருந்து 12 விரலளவு கீழே இருப்பதே அனாகத சக்கரமாகிய நெஞ்சகம். இந்த நெஞ்சத்தாமரையாகிய அனாகத சக்கரத்தில் சிவனை மனத்தினால் நிறுத்தி நினைந்து கொள்வதே மானத பூசையாகிய அகவழிபாடு, இதனால் புலன்கள் உள்முகப்பட்டு மனமும் அடங்கும்.

<u>தாரணை</u>

ஆதாரங்கள் பற்றியும், மூலாதாரம், சகஸ்ராரம் என்பனவற்றின் நிலையை அறிந்துள்ளோம். ஏனைய ஆதாரங்களின் நிலைகளையும் அறிந்திடலாம். மூலாதாரத்துக்கு அடுத்து மேலுள்ள சுவாதிட்டானம் உந்தியில் உள்ளது. மணிபூரகத்தின் நிலை நாபியாகும். இதற்குமேல் அனாகதம் இதயத்தானத்தில் உள்ளது. விசுத்தி கண்டத்தை இடமாகக் கொண்டது. ஆஞ்ஞை புருவநடுவில் அமைந்திருப்பது, உச்சியில் இருப்பதே சகஸ்ராரம்.

உடலிலுள்ள 10 நாடிகளுள் முக்கியமான 3 பற்றியறிந்தோம். உடலிலுள்ள 10 வாயுக்களுள் பிராணன் பற்றி அறிந்தோம். அவற்றுள் அறிய வேண்டிய மற்றொன்று அபானன் ஆகும். இதனைக் காம வாயு என்பர். சாதாரண நிலையில் இது கீழ் முகமாகத் தொழிற்பட்டு மலக்கழிவிற்கும் விந்து நீக்கத்திற்கும் காரணமாகின்றது. மூச்சுப் பயிற்சி மூலம் உயிர்ப்புச் சத்தியை மேலே செலுத்தும் அதே வேளையில் மூச்சுப் பயிற்சி அபானவாயுவையும் திசைதிருப்பி மேல்நோக்கிச் செலுத்த உதவுகின்றது. அபானவாயு மேல்நோக்கிச் செல்லும் அளவிற்கு அது சுத்தமடைவதோடு விந்துவும் விரயமாகாது, மேல்நோக்கிச் செலுத்தப்படுகிறது. அபானவாயு சுத்தமடைவதும் விந்து மேல்நோக்கிச் செல்வதும் மனத்தை ஒருவழி நிறுத்தி ஆராய்தலாகிய தாரணை யோகத்துக்கு உறுதுணையாய் அமைகின்றன. பிரத்தியாகாரப் பயிற்சியால் விளையும் உடல்சார் நன்மைகள் தாரணை யோகத்தால் உறுதியான முறையில் விளைவனவாம்.

உயிர்ப்புப் பயிற்சியால் மூலவழியை அடைத்து உயிர்க்காற்றை எழுப்புதல் தாரணைக்கு ஏற்ற பயிற்சியாம். புருவ நடுவாகிய ஆஞ்ஞையில் இறைவனை மனத்தால் இருத்தி ஓங்கார செபம், ஐந்தெழுத்து மந்திர செபம் ஆகிய அகத்தவம் புரிதலும் தாரணை யோகசித்திக்குரிய பயிற்சியாம். நாபி, இதயம், கண்டம், புருவநடு, இவை ஒன்றில் இறைசிந்தனையில் நிலைத்திருத்தல் விரும்பத்தக்கது. இத்தகைய பயிற்சிகள் மூலம் கண், காது ஆகிய கருவிகள் இன்றி அகத்திலே காட்சிகளையும், ஒலிகளையும் அனுபவிக்கலாம்.

தியானம்

இடைவிடாது இறைவனை நினைத்திருத்தலே தியானமாகும். இடையீடுபட்டு இறைசிந்தனையிலிருப்பது தாரணை. இடையீடுபடாது இறைசிந்தனையில் ஆழ்ந்திருப்பது தியானம். இத்தகைய தியானம் இரு வகைப்படும். சகளத்தியானம், நிஷ்களத் தியானம் எனக் கூறுவர். சகளம் என்றால் உருவத்தோடு கூடியது. இறைவனை அம்மை அப்பர் வடிவில், அர்த்தநாரீஸ்வரவடிவில் தியானிப்பது. உருவத்தியானம் எனக் கொள்ளலாம். நிஷ்களம் என்றால் உருவம் இல்லாத நிலை. எனவே நிஷ்கள தியானத்தில் இறைவனைச் சோதியாக வைத்துத் தியானித்தல் வேண்டும். உருவத்தியானத்தில் பயிலத்தொடங்கிப் பின்னர் அருவத்தியானத்தில் பயின்று வரலாம்.

புருவ நடுவாகிய ஆக்ஞையில் இறைவனை மனத்தால் இருத்துதல் பற்றி முன்பே குறிப்பிடப்பட்டது. இவ்விடத்தில் உள்ள சிறப்பு என்னவெனில் கண், காது, நாக்கு, மூக்கு ஆகிய அறிதற்கருவிகளுக்குரிய துவாரங்கள் அங்கு சந்திக்கின்றன. அறிகருவிகள் கூடும் அவ்விடத்தை ஞானக்கூட்டம் என அழைப்பர். அவ்விடமே பேரொளியாகவும், பொருளுணர்த்தும் பேரொலியாகவும் அமையும் செம்பொருள் விளங்கும் இடம்.

இவ்விடத்தில் உருவத்தியானமோ, அருவத்தியானமோ புரிவதற்கு உதவும் பயிற்சிமுறைகளும் உள்ளன. தியானம் தொடங்கும்போது இரண்டு கண்பார்வையையும் புருவநடுவிற்கு நேராக உள்ள மூக்கு நுனிமேல் பொருந்த வைத்து மனத்தை இறைவனிடத்துப் பொருந்த வைத்தல் வேண்டும்.

"நாட்டம் இரண்டு நடுமூக்கில் வைத்திடில்" (மந்திரம் 584)
இவ்வாறு பார்வையைச் செலுத்தித் தியானிப்பது சாம்பவி முத்திரை எனப்படும். இது வெளிநோக்குடன் தியானம் புரிதல்.

இரண்டு கண்பார்வையையும் நாசியின் மேலுள்ள புருவ நடுவில் ஒன்றை வைத்துத் தியானிக்கவும் செய்வர். இங்கு அகக் கண்பார்வை புருவநடுவில் ஒன்றுகிறது.

"நயனம் இரண்டும் நாசிமேல் வைத்திட்டு" (மந்திரம்585)
இப்பயிற்சி முறையைக் கேசரி முத்திரை என்பர்.

உயிர்ப்பை அடக்கி இத்தகைய முத்திரைகளைப் பயன்படுத்தித் தியானம் பயின்று உறுதியடைந்தால் திருவருள் ஒளி அகத்தே தோன்றும். இதனால் உடலுக்கும் அழிவு, ஏற்படாது. மேலும் இத்தகைய அகத்தவப் பயிற்சிமுறையால் தசவித நாதங்களையும் கேட்கலாம். மணி, கடல், யானை, புல்லாங்குழல், மேகம், வண்டு, தும்பி, சங்கு, பேரிகை, யாழ் என்பனவற்றின் ஓசை காரத்தில் ஒலிப்பன போல் மெல்லெனக் கேட்கும். புருவ மத்தியிலும் சரி, நெஞ்சத்திலும் சரி, சிவனைத் தியானித்தல் மூலம் தியானிப்பவர் சிவனையும் தம்மையும் உணர்ந்தவராவர்.

## சமாதி

உயிரும் இறைவனும் ஒன்றி நிற்றலே சமாதி. இயமம் முதலாக அங்கங்கள் எல்லாவற்றையும் முறைப்படி பயின்று வந்தோர்க்குச் சமாதி கிட்டும். இறைவன் திருவடி சாரும் விருப்பம் இருந்தால் அவன் பால் பேரன்புகொண்டு, பிறவேட்கைகளை ஒடுக்குதல் வேண்டும்.

"அன்பினை யாக்கி யருத்தி ஒடுக்கிப் போய்க்
கொம்பேறிக் கும்பிட்டுக் கூட்டமிட் டாரே" (மந்திரம் 606)

இதன் பொருட்டு உயிர்ப்புப் பயிற்சியினால் உடலர அமிழ்தாகிய விந்துவையும் உயிர்ப்பு ஓசையாகிய நாதத்தையும் நடுநாடி வழியாக ஏற்றிப் புருவநடுவிற் சேர்ப்பித்து உயிரினுள் திருக்கூத்துக் கொண்டருளும் கூத்தப் பெருமான் திருவடிக்கன் கலந்திருப்பர். இதனால் அட்டமா சித்திகளும் எய்தப் பெறுவர்.

ஏழாம் தந்திரத்தில் பூரணக் குகை நெறிச் சமாதி பற்றிக்கூறும் பகுதியில் சமாதி கைகூடாது. உடல் விட்டுப்போன யோகி மீண்டும் பிறந்து யோகம் பயின்று சமாதி நிலை கைகூடப் பெறுவர் என்பர். ஒன்பதாந் தந்திரத்தில் பிரணவ சமாதி நிலைபற்றி விவரிக்கும் முகமாக ஓங்கார செபத்தினால் சித்திகளும் முத்தியும் எய்தப் பெறுவன என்றும் சோடச மார்க்கத்தின் உயிர் நிலையாகிய அறிவின் அறிவு வாயிலாக யோகியர் திருவடிப்பேறு எய்துவர் எனவும் குறிப்பிடுவர்.

அதன் பின் வரும் மோன சமாதி என்னும் பகுதியில் சமாதிநிலை கைவரப் பெற்றோர் தன்மையை உபமானம் ஒன்றின் வாயிலாகத் திருமூலர் விளக்குவர். வேறாக நின்ற இரு பொருள்கள், பிரிக்கமுடியாதவாறு ஒன்றாகக் கலந்து, இரண்டும் அழியாது ஒன்றாய் நிற்பதற்கு உப்பையும் நீரையும் உபமானமாக எடுத்துக்காட்டுவர். நீரிற் கலந்து ஒன்றாய் நிற்கும் உப்பென்று சொல்லக்கூடிய வகையில் சிவபெருமான் உயிருடன் அனைந்தருள்வன. அந்நிலையில் ஆருயிரானது பேருயிருடன் ஒன்றி நின்று நிலையான இன்பம் துய்க்கும்.

அப்பினில் உப்பென அத்தன் அணைந்திட்டுச்
செப்பு பராபரஞ் சேர்பர மும்விட்டுக்
கப்புறு சொற்பத மாளக் கலந்தமை
எப்படி யப்படி என்னுமவ் வாறன்றே (மந்திரம் 2905)

## அட்டமாசித்தி

அட்டமா சித்திகளையும் பின்வரும் முறையில் சுருக்கமாக விளக்கி விடலாம்.

(1) அணிமா என்பது நுண்மை இயல்பு பெரிய பொருளாயிருப்பது அணுவைக் காட்டிலும் மிக நுண்மையான வடிவைப் பெறக்கூடிய ஆற்றல் அணிமா ஆகும்.

(2) மகிமா என்பது பருமை இயல்பு சிறிய பொருளாகத் தோன்றுவது. பெரிய வடிவை எடுத்து நிற்கும் ஆற்றல் மகிமா எனப்படும்.

(3) இலகிமா மென்மைத் தன்மையைக் குறிக்கும். சுமையுள்ளன பொருளை மிக மென்மையுடைய சுமையற்ற பொருளாக மாற்றும் ஆற்றல் இலகிமா ஆகும்.

(4) கரிமா வன் தன்மையை, பரத்தைக் குறிக்கும். இலேசான, பாரமற்ற நிலையிலுள்ளது. பெருஞ் சுமையான பொருளாக மாறும் ஆற்றல் கரிமா எனப்படும்.

(5) பிராத்தி என்றால் விரும்பியவற்றை எல்லாம் பெற்றிடும் ஆற்றல். எண்ணியதை எண்ணியவாறு எண்ணியவுடன் எய்துதல்.

(6) பிராகாமியம் என்பது பல வடிவங்கள் எடுத்தல், நினைத்த இடம் செல்லல், பிறர் உடம்பில் நுழைதல் போன்ற ஆற்றலைக் குறிக்கும்.

(7) ஈசத்துவம் என்பது ஆட்சியனாதல், இறைவனது முத்தொழிலையும் புரியும் ஆற்றல் பெறல்.

(8) வசித்துவம் என்பது கவர்ச்சி பெறும் வல்லமை. தெய்வங்கள் உட்படப் பல்வகை உயிர்களையும் தன்வசமாக்கிக் கொள்ளும் ஆற்றல்.

## கலை நிலை

இடைகலையைச் சந்திரகலை என்றும், பிங்கலையை சூரிய கலை என்றும், சுழுமுனையை அக்கினி கலை என்றும் கூறுவர். சந்திர கலை பெண்பால் தன்மை உடையது. சந்திர கலையாகிய இடப்பக்க மூச்சினை அமுதம் எனவும் கூறுவர். பிங்கலையாகிய சூரியகலை ஆண்பால் தன்மையுடையது. சூரியகலை உருவ அறிவினை விளக்கும் தன்மையது. அக்கினி கலை ஆன்ம அறிவுவளர்ச்சிக்குரியது. சந்திரகலை, சூரியகலை, அக்கினி கலையாகிய மூன்றும் உடம்பில் விளங்கும் முறையை நோக்குதல் வேண்டும். பிராணவாயுவாகிய உயிர்ப்பு அடங்குமாயின் நன்மைகள் பல விளையும்.

அட்டாங்க யோகப் பயிற்சியினால் அந்தக் காரணங்களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன சுத்தியடைய அவற்றை இறைவன்பால் பதிய வைத்தல் எளிதாகும். இவ்வாறு அன்புநெறியின் கண் நிற்கவே பிராணவாயுவை அடங்க வைக்கும் முறையும் எளிதாகும். சந்திரகலை சூரியகலையாகிய இரண்டும் அக்கினி கலையுடன் உயிர்ப்புப் பயிற்சியினால் ஒன்றி சுழுமுனை வழியாக மேல்நோக்கிப் பரவெளியில் செல்லும். சாதகனது உடல் சிவாலயமாக மாறும். சங்கர நாதனும் அவ்வொளி மண்டலத்தில் விளங்குவன். உயிரும் சிவமயமாகும். இத்தகைய பேறுபெற்றோர், அளவில் காலம் நீருள் மூழ்கி இருந்தாலும், நிலத்தில் புதை உண்டிருந்தாலும் உடல் அழியாது வாழ்வர்.

## காயசித்தி உபாயம்

உயிர்க்கு உயிராய் விளங்குபவன் இறைவனாகிய சிவன். உயிரோ உடம்பில் உறைவது. எனவே உடல் சிவாலயமாகிறது. இதன் காரணமாக உடலைப் பேணுதல் சிவானுபவம் பெறுதற்கு அத்தியாவசியமாகிறது. உயிர்ப்புப் பயிற்சி உடலைப்பேணும் முறையெனத் தெளிந்தனர் திருமூலர். ஆண், பெண் புணர்ச்சி குறையுமளவிற்கு விந்து தாரணை ஏற்படுவதும் இப்பயிற்சிக்கு உறுதுணையாகும். உணவு உட்கொள்ளுதல் குறைவதும் மூச்சைக் கும்பித்து வைத்து ஆயுளை நீடிப்பதற்கு உதவும்.

மேலும் மூச்சு வெளிவரும்போது அம் என்னும் ஓசை உண்டாதலை அவதானிக்கலாம், மூச்சு உட்செல்லும் போது சம் என்னும் ஓசை உண்டாகிறது. எனவே மூச்சு விடும்போதெல்லாம் அம்சம் என்னும் சிவமந்திரம் ஓயாது செபிக்கப்படுகிறது. இதனுடன் ஓங்காரமாகிய பிரணவ மந்திரத்தையும், ஐந்தெழுத்து மந்திரத்தையும், செபிப்பது உயிருக்கும், உடலுக்கும் உறுதி பயக்கும் பயிற்சிகளாம். உயிர்ப்புப் பயிற்சியைக் காலை, நண்பகல், மாலை நேரங்களில் முறையாகச் செய்தால், முறையே பித்தம், வாதம், கபம் ஆகியன நீங்கும். இவை மூன்றன் வேறுபாட்டால் விளையும் நோய்களும் வரா. வராது போகவே உடலில் நரை, திரை தோன்றா. உயிர்ப்புப் பயிற்சியினாலும் தாரணை, தியானம் பயிற்சியினாலும் புருவநடுவில் சிவன் உணர்வுமயமாய் விளங்குவதைக் கண்டு கொண்டதாகத் திருமூலர் கூறுவர். அதனால் உடலும் உயிரும் அழிவற்று நிற்கும்.

## வார சரம், வார சூலம்

பிராணன், மூச்சு, சுவாசம் என்பதன் ஓட்டத்தையே சர ஓட்டம் என்பர். எந்தெந்த நாட்களில் எந்த நாடி வழியாக சுவாசம் இயங்க வேண்டும் என்பதை இப்பகுதி கூறுகிறது. வெள்ளி, திங்கள், புதன் கிழமைகளில் உயிர்ப்பின் ஓட்டம் இடைநாடி வழியாக அமைதல் வேண்டும். சனி, ஞாயிறு, செவ்வாய்க் கிழமைகளில் மூச்சு வலநாடி வழியாக ஓடுதல் வேண்டும். வியாழக்கிழமையில், வளர்பிறையில் இடமூக்கு வழியாகவும், தேய்பிறையில் வலமூக்கு வழியாகவும் உயிர்ப்பு இயங்க வேண்டும்.

சந்திரகலை, சூரிய கலைகள் இடைகலை, பிங்கலை நாடிகளில் மாறிமாறி இயங்கவும் செய்யும். இடைகலை வழியாக ஏறி பிங்கலை வழியாக இறங்கவும், பிங்கலை வழியாக ஏறி இடைகலை வழியாக இறங்கவும் செய்யும். சூரிய, சந்திர கலைகள் எனப்படும் பிராணன் நடுநாடியாகிய சுழுமுனையிலும் செல்லும். பிராண இயக்கம் மாறும் காலத்தில் தியானம் செய்தால் மன ஒருமைப்பாடு ஏற்படும். பிராண இயக்கம் சுழுமுனை நாடியில் நிலைக்கும்போது குண்டலினி ஆற்றலைப் புருவ நடுவில் சேரச்செய்தால் நடுநாடியின் உச்சியில் திருவருள் ஒளி பிரகாசிக்கும்.

பயணம் தொடங்கும்போது எந்த எந்த நாட்களில் எந்த எந்தத் திசைகளில் சென்றால் தீமை விளையும் என்பதைக் குறிப்பிட்டு, நன்மை தரும் திசைகளை ஊகிக்க வைப்பது வாரசூலம், கிழமை தோஷம் என்ற பகுதி. திங்களிலும், சனியிலும் கிழக்குத் திசையில் செல்லக்கூடாது. செவ்வாயிலும் புதனிலும் வடக்குத் திசையில் செல்லக்கூடாது. சூலம் இடப்பக்கமாகவும் பின்பக்கமாகவும் இருக்கும் வகையில் பயணம் செய்தால் நன்மை விளையும். சூலம் வலப்பக்கமாகவும், முன்பக்கமாகவும் இருக்கப் பயணம் செய்தால் பயணத்தில் தீயவிளைவுகள் ஏற்படும். மேற்கூறியனவற்றை இணைத்துப்பார்க்கும் போது பின்வருவன தெரியாகும். வெள்ளி, செவ்வாய், புதன், ஞாயிறு கிழமைகளில் கிழக்கு நோக்கிப் பயணமாகலாம். வியாழன், வெள்ளி, ஞாயிறு கிழமைகளில் வடக்கு நோக்கிப் பயணம் செய்யலாம். செவ்வாய், புதன், திங்கள், சனி கிழமைகளில் தெற்கு நோக்கிப் பயணம் செய்யலாம்.

<u>கேசரி யோகம்</u>

உயிர் வெளியே செல்லும் வாயில்களாக அமைவன கண்ணும், செவியும், மூக்கும், வாயும். இவற்றுக்குரிய வழிகள் ஒன்று கூடுமிடம் மேல் வாயாகிய அண்ணாக்கு ஆகும். இதனை நாற்சந்தி என்பர். இவ்விடமே புருவநடுவாகிய ஆஞ்ஞை எனப்படும் ஆதார நிலையாம்.

அபானவாயுவாகிய காமவாயு சாதாரணநிலையில் கீழ்நோக்கிச் செல்லும் இயல்பினது. விந்துவைக் கீழே செலுத்திக் கருவாயிலிற் சேர்ப்பிப்பது. மூலபந்தம் செய்வதன்மூலம் அபானவாயு கீழே செல்லாத வகையில் தடுத்திடலாம். உயிர்ப்புப் பயிற்சியினால் பிராணவாயுவுடன் அபானவாயுவையும் மேல்நோக்கிச் செலுத்தவே விந்துமேல்நோக்கிச் செல்லும். அவ்வாறு சென்று பின் மேற்கூறிய நான்கு வாயில்களும் சந்திக்கின்ற தொளையினூடு கீழே வரக்கூடும். அவ்வாறு வருவதைத் தடுப்பதற்கு நாக்கை மடித்து அதன் நுனியால் அத்தொளையை அடைத்தல் வேண்டும். இவ்வாறு அடைத்து உயிர்ப்புப்பயிற்சியினால் விந்துவைக் கீழ்நோக்கிச் செல்லவிடாமல் அதனை உச்சித் தொளைக்கு ஏற்றினால், உடலமுதாக முன்விளங்கிய விந்து வானமிழ்தாக மாறியமையும். பிராணனைக் கீழ்நோக்கிச் செல்லாவாறு தடுப்பதற்கு சாலந்திர பந்தத்தையும் அது விரைவில் மேல்நோக்கிச் செல்வதற்கு உட்டியான பந்தத்தையும் செய்வர்.

நாவின் நுனியால் உண்ணாக்குத் தொளையை அடைக்கும் பயிற்சியினால் மேல்நோக்கும் எண்ணந்தோன்றும். இத்தகைய பயிற்சியே கேசரியோகம் எனப்படும். இதன் மூலம் புருவ நடுவில் சிவன் திருவடித்தியானம் எளிதில் கைகூடும். உயிரும், உயிர்க்குயிராம் சிவனும் அங்கு ஒன்றியிருக்கும் நிலைதோன்றும். எனவே சிவன் உறைவிடமாகிய உயிரின் உடம்பும் அழிவில்லாதிருக்கும்.

## பரியங்க யோகம்

புணர்ச்சி நிலையில் இறையின்ப அநுபவம் பெறும் முறையே பரியங்க யோகமாகும். இத்தகைய யோகம் பயில்பவர் யோகியரே. எனினும் அவர்கள் போகநிலையில் இத்தகைய புணர்ச்சியில் ஈடுபடுபவரல்லர். உடலில் நெஞ்சத் தாமரையில், புருவநடுவில் உள்ள இறைவனை மனம் நினைத்திருக்க கேசரியோகம் போன்றவை கைவந்தமையினால் அபான பிராண வாயுக்களை மேற்செலுத்தி உரம் பெற்ற நிலையிலேயே அவர்கள் பரியங்க யோகம் பயில்வர். இப்பயிற்சியில் ஈடுபடும் ஆணுக்கு 30 வயது மேல் எல்லையாகும். பெண்ணுக்கு 20 வயது மேல் எல்லையாகும். இத்தகையோர் செய்யும் யோகத்தை "கண்டனும் கண்டியும் காதல் செய் யோகத்து" (மந்திரம் 807) எனத் திருமூலர் விவரிப்பர். கண்டன், கண்டி என்போர் காம உணர்வுகளைக் கண்டிதஞ் செய்தோராவர். அவர்கள் போகக்காதலால் ஒன்று சேர்பவர்கள். பரியங்க யோகம் பயில்வதற் குரிய கால எல்லை 5 நாழிகை. இத்தகைய யோகப்பயிற்சியால் பரவொளியை அறிந்து பேரின்பநிலை எய்தலாம்.

பரியங்க யோகப்பயிற்சி கைவராத சிலர் அவ்வாறு கைவந்தது போன்று நடிக்கவும் செய்வர் எனத் திருமூலர் எச்சரிக்கை விடுகின்றார். அவர்களைக் கள்ளத் தட்டார் என்பர் திருமூலர். சுக்கிலத்தை வெள்ளி என்றும், சுரோணி தத்தைப் பொன் எனவும் கூறுவர். தமது இயலாமையினால் சுக்கிலம் சுரோணி தத்துடன் கலந்தாலும் இதனை அவர்கள் மறைத்துவிடுவர்.

வெள்ளி யுருகிப் பொன்வழி ஓடாமே
கள்ளத் தட்டானார் கரியிட்டு மூடினார் (மந்திரம் 810)

## ஆதனம்

யோகப்பயிற்சியில் ஈடுபடுதற்கு உறடயோகம் கூறும் ஆசனங்களின் தேவை பற்றி ஒன்று கூறலாம். ரஜோகுண, தமோகுண மேலீட்டினால் உடலில் யோகப் பயிற்சிக்குத் தடையாகத் தோன்றக்கூடிய இயல்புகள் தோன்றாதிருப்பதற்கு உறுதி யான இருக்கை அவசியமானதே. எனவே உறடயோகம் கூறும் ஆசனங்களுள் எட்டைத் திருமூலர் தெரிவு செய்தனர். உடல் சுகத்தைப் பேணுதற்கும் அதிகரிப் பதற்குமுரிய ஆசனங்களை அவர் தெரிவு செய்யவில்லை. உடலில் உள்ள பிணிகளை அகற்றும் இயல்புடைய ஆசனங்களையும் அவர் தெரிவு செய்யவில்லை. பிராணா யாமம், தாரணை, தியானம் போன்ற பயிற்சிகளுக்கு உகந்த, ஒரே நிலையில் அமர்ந்திருக்கக்கூடிய ஆசனங்களையே அவர் பெருமளவில் தெரிவு செய்தனர் என்பதை அவதானித்திடலாம்.

## பிராணாயாமம்

60 நாளிகை அல்லது 24 மணிநேரம் கொண்ட ஒரு நாளில் 21600 முறை சாதாரண நிலையிலுள்ளவர்கள் மூச்சை உள்ளே இழுத்து வெளியே விடுவார் கள் என யோகியர் கூறுவர். ஒரு மணி நேரத்துக்கு இது 900 முறையாம். எனவே ஒரு நிமிடத்தில் ஒருவர் 15 முறை மூச்சுவிடுவதாக இது அமைகிறது. நவீன மருத்துவ ஞான அடிப்படையில் பெறக்கூடிய எண்ணிக்கைக்கு இது சிறிது குறை வாயுள்ளது போல்தெரிகிறது. மூச்சுவிடும் முறையை எவரும் அவதானித்து எண்ணிக் கையைச் சரிபார்க்கலாம்

மூச்சுப்பயிற்சி ஆயுளை நீடித்து மரணமில்லா நிலையையும் தருமெனத் திருமந்திரம் கூறும். விலங்குகளின் மூச்சு விடும் முறையை நோக்கி இதனைத் தொடர்ந்து ஆராயலாம். மனிதனிலும் விரைவாக மூச்சுவிடும் விலங்குகள் குறைந்த ஆயுள் உடையன; குரங்குகள், நாய்கள் போன்றவை குறுகிய ஆயுட்காலம் கொண் டவை. யானைகள், ஆமைகள் போன்ற விலங்குகள் மனிதனிலும் குறைந்த கதியில் மூச்சு விடுவன, நெடுங்காலம் வாழ்வன. சில ஆமை இனங்கள் 200, 300 ஆண்டுகள் வாழ்வன. மூக்கின் வேகம் அதிகரிக்க வாழும் காலம் குறைவதையும், மூச்சின் வேகம் குறைய வாழும் காலம் அதிகரிப்பதையும் அறிந்திடலாம். வாழும் கால அளவு மூச்சின் வேகத்துக்கு நேர்மாறுவிகித சமனாக அமைகிறது போன்று உள்ளது.

## அமுரி தாரணை

சிவநீர், குடிநீர், உவரி, தேறல் என்பன அமுரியைக் குறிக்கும் பிற சொற்கள். கடல் அருகே ஊறும் நீர் இனிப்பானதாய் இருப்பதுபோல் உடம்பில் இருந்து பெறப்படுவது விரும்பத்தக்க இனிய சிவநீர் எனப்படும். உயிர்ப்புப் பயிற்சியினால் இதனை மேலே செலுத்தவும் செய்து நன்மை பெறலாம். அதனைப் பருகியும் நன்மையடையலாம். அவ்வாறு ஒரு வருடம் பருகிவரின் சிவ ஒளி மேலோங்கும். உடல் பொன்மேனியாகும். நரைமயிர் கருமை பெறும். தூறு மிளகளவு பருகவேண்டுமென்றும், நாளுக்கு ஒரு மிளகு அளவு நீரை 100 நாள் பருகவேண்டும் என்றும் பலவாறு பொருள் கொள்வர்.

தூறு மிளகு தகருஞ் சிவத்தினீர்
மாறும் இதற்கு மருந்தில்லை மாந்தர்காள் (மந்திரம் 827)

இச்சிவ நீரில் மிளகு, நெல்லி, மஞ்சள், வேம்பு ஆகிய நான்கும் கலந்து உண்டால் உடல் மென்மையடையும். தலைமயிர் கருமையாகும்.

## சந்திரயோகம்

யோகியர் சந்திரகலை 16 எனவும், சூரியகலை 12 எனவும், அக்கினி கலை 64 எனவும் அறிந்துள்ளனர். இவை சாதாரணமாக ஒன்றோடொன்று சேராது நிற்கும். எனினும் உயிர்ப்புப் பயிற்சியாகிய அகத்தவ முயற்சியால் நடுநாடியாகிய சுழுமுனை வழியே இவற்றை மேல்நோக்கிச் செலுத்தவல்லார். தாம் விரும்பும் காலத்திலேயே உயிரை விடும் வல்லமை பெற்றவராவர். புற உலகில் சூரியனும், சந்திரனும் எதிர் எதிராகத் தோன்றும் காலம் முழுநிலா ஆகிய பூரணை காலமாகும். இவ்வாறே அக உலகில் சூரிய கலை, சந்திர கலை, அக்கினி கலை ஆகிய மேற்சென்று புருவநடுவில் ஒன்றும் போது அக்கினி சூரிய கலைகள் ஒடுங்கி அகத்தில் முழுநிலாத் தோன்றும். இம்முழு நிலா ஒளி அறிதற்கரியது, அறிவுப்பிழம்பாய் நிற்பது. இதன் அடிப்படையிலேயே சிவனும் வெண்திங்கட் கண்ணியன் எனப்படுவன். முழுநிலவுச் சந்திரகலை மதியமிழ்தமாகி உடல் முழுதும் பரவும். இத்தகைய நிலை கைகூடியவர் சசிவன்னர் எனப்படுவர். இந்நிலையில் முக்கால நிகழ்ச்சிகளையும் அவர் அறிய வல்லராயிருப்பர்.

மூச்சுவிடல் நிமிடத்துக்கு 15 முறை எனின் வாழும் கால அளவு 75 வயது எனக் கொள்வோம்.
மூச்சுவிடல் நிமித்துக்கு 25 முறையாக அதிகரிக்கின், வாழும் கால அளவு
75 $\frac{15}{25}$ வயதாகக் குறையும், 45 வயதாகும்.

மூச்சுவிடல் நிமிடத்துக்கு 5 முறையாகக் குறையின், வாழும் கால அளவு
75 $\frac{15}{3}$ வயதாக அதிகரிக்கும், 375 வயதாகும்.

மூச்சுவிடல் நிமிடத்துக்கு 1 முறையாகக் குறையின் வாழும் கால அளவு
75 $\frac{15}{1}$ வயதாக அதிகரிக்கும், 1125 வயதாகும்.

மூச்சு விடுவதை நிறுத்தியே விட்டால், பூரண கும்பக நிலையில் இருந்தால், வயதெல்லை அளவில் காலமாகிவிடும்.
நவீன காலத்தில் 30,40 நாட்கள் மூச்சைவிடாது நிலத்தில் தம்மைப் புதைத்து வைக்கச் செய்தவரும் இருந்தனர். இது எவ்வாறாயினும் முக்கிய முடிவு என்ன வென்றால் உயிர்ப்பை அடக்கும் பயிற்சி மூலம் வாழ்வை எங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என்பதே.

'சிவசிவ' என்னும் மந்திரத்தை உச்சரிக்க 4 மாத்திரை காலம் எடுக்கும் என கூறி, மூச்சை பூரித்தல், கும்பித்தல், இரேசித்தில் என்பனவற்றின் கால எல்லை முறையே 16,64, 32 மாத்திரையாதலால், அக்கால எல்லைகளைக் கணிப்பதற்கு இம்மந்திரத்தை முறையே 4,16,8 முறைகள் செபித்து வரலாம் என்பர். இத்தகைய செபத்தினால் உயிர்ப்புப் பயிற்சி விளைவிக்கும் நன்மைகள் அதிகரிக்கும். இப்பயிற்சி முறையை திருமூலரும் சிபார்சு செய்கிறார்.

ஞாயிறு திங்கள் நவின்றெழு காலத்தில்
ஆயுறு மந்திர மாரும் அறிகிலர்
சேயுறு கண்ணி திருவெழுத் தஞ்சையும்
வாயுற வோதி வழுத்தலு மாகுமே (மந்திரம் 2654)

<u>தாரணை, தியானம், சமாதி</u>

மனம் ஒரு வழிப்படும் அனுபவங்கள் பலருக்கு வருவது இயல்பு. சில வேளைகளில் எவரும் தங்களை மறந்திருக்கும் நிலையில் தாங்கள் இருந்ததை உணர்வர். அலுவலகத்தில் அதிகாரியைச் சந்திப்பதற்கு இருவர் செல்வர். அறையினுள் பார்க்கும்போது அவர் "சிந்தனையில் ஆழ்ந்துள்ளர்" என்று ஒருவர் கூறி இருவரும் வெளிவருவர். தம்மையறியாமல் தாரணையில் இருக்கும் நிலை இதுவே.

நாம் அறிந்து கொண்டு, திட்டமிட்டு, புலன்களைப் புற உலகிலிருந்து மீட்டு அகநோக்குடன் ஒரு குறித்த இடத்தில் சிந்தனையைக் குவியச் செய்வதே தாரணை. இதற்கு இறைவனை புருவநடுவில் இருத்தி மனத்தை அவனிடம் குவியச் செய்வது யோக மரபு.

சமாதி நிலையில் தமது அநுபவத்தை திருமூலர் எடுத்துக் கூறுவர்.

ஆராலும் என்னை அமட்டவொண் ணாதினிச்
சீரார் பிரான்வந்தென் சிந்தை புகுந்தனன்
சீராடி யங்கே திரிவதல் லால்இனி
யார்பாடுஞ் சாரா அறிவறிந் தேனே.

அட்டமா சித்தி

(1) அணிமா ஆற்றலுக்குரிய உதாரணமாக அநுமன் சிறிய வடிவமெடுத்து இராம இலக்குமணரை முதல் முறையாகச் சந்திக்கச் சென்றதைக் குறிப்பிடலாம். பிருகு முனிவர் வண்டு வடிவம் எடுத்த வரலாறும் உண்டு.

(2) மகிமா ஆற்றலுக்கு உதாரணமாக திருமால் வாமனனாக வந்து விஸ்வரூபத் தோற்றம் எடுத்ததைக் குறிப்பிடலாம். தனது ஆற்றலை உணராதிருந்த அநுமன் பிறர் எடுத்துக் கூறியபின் பேருருக் கொண்டு கடலைத் தாண்டியதைக் குறிப்பிடலாம்.

(3) இலகிமா ஆற்றலுக்குரிய உதாரணமாக திருநாவுக்கரசரைக் கல்லில் கட்டிக் கடலில் இட்டபோது கல்மிதந்ததைக் குறிப்பிடலாம். அவரே தீர்மானித்து அதனைச் செய்யாது இறைவன் திருவருளால் நிகழ்ந்தது என்பர்.

(4) கரிமா என்னும் ஆற்றலுக்குச் சிபிச்சக்கரவர்த்தியின் வரலாற்றில் புறாவின் எடைக்குச் சமமாக அவரே அமர்ந்தது உதாரணமாகும்.

(5) பிராத்தி என்ற ஆற்றலுக்கு உதாரணமாக இராவணன் போன்றோர் விரும்பிய இடமெங்கும் சென்றுவருதலைக் குறிப்பிடலாம்.

(6) பிராகாமியம் என்னும் ஆற்றலுக்கு மூலன் என்னும் இடையன் உடம்பில் நுழைந்து திருமூலராய் எழுந்த யோகியரை உதாரணமாகக் கூறலாம்.

(7) ஈசத்துவம் என்னும் ஆற்றலுக்கு ஞானசம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கியதை உதாரணமாக்கியதைக் கூறலாம்.

(8) வசித்துவம் என்ற ஆற்றலுக்கு சுந்தரருக்காகத் திருவாரூரில் இறைவன் பரவை யாரிடம் தூது சென்றதை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

சித்திகளுள் எல்லாம் சிறந்தது இறைவனுடன் இரண்டறக் கலந்து இன்பந் துய்ப்பதே என்பதை மனத்தில் கொள்ளல் வேண்டும்.

## காய சித்தி

வயோதிப நிலைக்குரிய நரை என்னும் வெண்மயிரையும், திரை என்னும் குறைந்த கண் பார்வையையும், வயோதிப உடல்நிலையையும் அதற்குரிய உளநிலை யையும், நோயையும், மரணத்தையும் தடுத்துவிடலாம் என்னும் நம்பிக்கை காயசித்தி பற்றிய கருத்தில் இருப்பதை அவதானிக்கலாம். பிற உலோகங்களை இரசவாத முறையால் பொன் ஆக்குவது போல், உடலையும் ஆன்மீக இரசவாதத்தால் அழியா நிலையில் வைத்து அதன் மூலம் இந்த ஒரே பிறவியில் சீவன் முத்திநிலையை யோகப் பயிற்சிகள் மூலம் எய்துவதே காயசித்தி அடைவதன் நோக்கமெனக் கூறலாம்.

## கேசரி யோகம்

கேசரி யோகப் பயிற்சி போன்றவற்றுக்கு உதவும் பதங்கள், முத்திரைகள் பற்றிய சில குறிப்புக்களை இங்கு தந்திடலாம். முழுவிபரங்களுக்கு ஹடயோகப் பிரதீபிகை போன்ற ஹடயோக நூல்களைப் பார்த்தல் வேண்டும்.

(1) உட்டியான பந்தம்: வயிற்றின் நாபியின் மேல்பாகத்தையும் கீழ்ப்பாகத்தையும் முதுகோடு ஒட்டுப்படும், பின்னே இழுக்க வேண்டும். மரணமென்னும் யானைக்கு இப்பயிற்சி கேசரியாகிய சிங்கமாக அமையும் என்பர். உட்டியானப் பயிற்சி யால் பறவைக் கதியில் பிராணவாயு சுழுமுனையில் செல்லுமென்பர்.

(2) மூலபந்தம்: இரண்டு குதிகளாலும் குதத்தை மேலே தள்ளுதல். இதனால் கீழே செல்லும் அபான வாயு பிராணவாயுவுடன் சுழுமுனையில் செல்லும்.

(3) சாலந்தர பந்தம்: கண்டத்திலுள்ள துவாரத்தைச் சுருக்கி, 4 அங்குலம் இடையிருக்கும்படி மார்பின் சமீபமாகக் கீழேகுனிந்து மோவாய்க் கட்டையை நிறுத்துதல்.

(4) வஜ்ரோலி முத்திரை: இது பரியங்கயோகத்தில் பயன்படுத்தப்படுவது. சில கிரியைகள் மூலம் இலிங்கத்துவார வழியைச் சுத்தப்படுத்தி, பின் இலிங்கத்தின் மூலம் நீரைமேல் இழுத்துப் பழகுதல் வேண்டும். இத்தகைய பயிற்சி விந்துவை மேலே இழுத்துக் கொள்வதற்குத் துணையாக அமைகிறது. (வஜ்ரோலி முத்திரை என்பது கைகளைத் தலையில் ஊன்றி கால்களை மேலே தூக்கி நிற்கும் நிலை எனவும் கொள்வர். மேலுள்ள விளக்கம் ஹடயோக பிரதீபிகையில் விரிவாகத் தரப்பட்டுள்ளது)

<u>முடிவுரை</u>

"அறிவும் அடக்கமும் அன்பும் உடனே" (மந்திரம் 1444) என்னும் திருமூலர் வாக்கின்படி பார்க்கும் போது திருமூலர் உபநிடதங்களில் மெய்ஞ்ஞான பாரம்பரியத்தையும், யோகநெறிப் பயிற்சி முறைகளையும், அன்புநெறி முறையையும் இணைக்க முயன்றவர் என நாம் மதிப்பிடலாம். இந்த ஒன்றிணைக்கும் பணியில் மூன்றாம் தந்திரத்தில் நாம் அவதானிக்கக் கூடியது உயிர்ப்புப் பயிற்சியாகிய சுரவழி முக்கிய இடம் பெறுகிறது. மந்திரங்கள் போன்ற ஒலிப்பயிற்சிகள் மூலம் உடலில் ஓசைகள் கேட்பதற்கு வழிவகுக்கும் நாத உபாசனையும் இடம் பெறுகிறது. அதனுடன் உடம்பகத்துள் இறைவனைச் சோதிப்பிழம்பாகத் தரிசிப்பதற்கேற்ற ஒளி உபாசனையும் உண்டென்று கூறலாம். அத்தகைய சோதிவடிவினனாகிய இறைவனுடன் இரண்டறக் கலக்கும்போது எஞ்சுவினையாகிய சஞ்சிதம், ஏறுவினையாகிய ஆகாமியம் என்னும் பின்னை வினைகள் எல்லாம் அற்றுப்போவதை திருமூலர் அனுபவம் மூலம் தெரிவிப்பர்.

தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே. (மந்திரம் 2565)

திரு. பெ. கணநாதபிள்ளை

சிவமயம்
*****

# திருமந்திரத்தில் குருநெறி நிற்றல்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

அவையடக்கம்: திருமந்திரம் என்னும் பாரிய நூல் ஏனைய சாதாரண நூல்களில் ஒன்றாகக் கருதப்படலாகாது என்பதனை யாவரும் அறிவர். ஏனைய பாடல் நூல் களைப் போல், பாடலில் வரும் சொற்களுக்குப்பொருள் காண முற்படும் நூலன்று இது. ஆன்மீகத்துறையில், அநுபவ ஞானமுடையவர்கள், இதற்கு ஓரளவு பொருள் காணலாமேயொழிய, மற்றையோர்க்கு இயலாத காரியம். அறிஞர்கள் குற்றங்களைப் பொறுத்தருள்வாராக.

முன்னுரை: சிவகுரு தரிசனம் என ஆரம்பிக்கும் ஆறாந்தந்திரத்தின் மீதான இக் கட்டுரைக்கு, என்னுரையாகச் சில வார்த்தைகள் சொல்ல வேண்டியுள்ளது.

குரு, இலிங்க, சங்கம வழிபாடு என்பது சைவ மரபிற் தொன்றுதொட்டு வருவதொன்று; குருவையும் சிவலிங்கத்தையும், சிவவேடம் தாங்கி நிற்கும் சிவனடி யாரையும், சிவனாக வழிபடும் மரபு இது. இதுகாறும் உள்நின்று உணர்த்திய சிவம், மானுட உருத்தாங்கி, முன்னின்று உணர்த்தும் குருவாக காட்சி அளிப்பார். மேற்கூறிய மூன்றனுள்ளும், முதன்மை நோக்கிப்போலும், குரு முதலாவதாக கூறப்பெற்றுள்ளார்.

"குரு" என்னும் பதத்திற்கு, அறியாமையை நீக்குகின்றவர் என்று பொருள். திருமூல நாயனாரது திருவடியை ஒற்றி அவருக்குப்பின் தோன்றியவர்கள் குருவின் நிலையைப் பல கோணங்களிலிருந்து விளக்கியுள்ளனர். சூரியனது ஒளி இன்றிச் சூரிய காந்தக்கல்லின் வழியால் அக்கினியைத் தோற்றுவிக்க முடியாது. அது போல குருவின் உதவியின்றி ஆன்மாவில் தத்துவ ஞானத்தைத் தோற்றுவிக்க முடியாது. ஐம்புலன்களாகிய வேடரின் கையிலகப்பட்டு மயங்கிநின்ற ஆன்மாவை, ஆன்ம தலைவ ராகிய சிவபரம்பொருளே குருவாய் வெளிப்பட்டுத் தோன்றி உண்மை நிலையை உயர்த்தி, ஆன்மாவை அவ்வேடர்களின் பிடியிலிருந்து விடுவித்து வீடுபேறடைய அருளுவார்.

மௌன குருவாக எழுந்தருளிய தட்சணாமூர்த்தியே குருபரம்பரையின் முதற்குருவாகத் திகழ்கின்றனர். இதனாலேயே திருக்கையிலாய ஞான பரம்பரை என்னும் மரபு நிலவுகின்றது.

திருமந்திரம். திருமூல நாயனார் அருளிச்செய்த "தமிழ் மூவாயிரம்" என்னும் திருமந்திரம், சாத்திர நூலாகவும், தோத்திர நூலாகவும், வாழ்க்கை நூலாகவும் அமைகின்றது.

"அந்திமதிபுனை அரனடி நாள்தொறும்
சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே" என வரும் 73ஆம் பாடற் பகுதியிலிருந்து நாயனார் ஆகமத்தைச் சொல்லுகின்றார் என்பதும்,

"தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்
சுந்தர ஆகமம் சொல் மொழிந்தானே" என வரும் 101 ம் பாடற் பகுதியிலிருந்து நாயனார் ஒன்பது ஆகமங்களைச் சொல்லுகின்றார் எனபதும் ஒருவாறு தெரியக்கிடக்கின்றது.

இக்கட்டுரையின் தலைப்பாகிய "ஆறும் தந்திரம்" வியாமள ஆகமத்தின் சாரம் எனக் கற்றறிந்தோர் கூறுவர். இத்தந்திரம் "சிவகுரு தரிசனம்" என்பதனை முதற் பகுதியாகக் கொண்டு இத்துடன் தொடர்புபட்ட மேலும் 13, விடயங்களைப் பகுதி பகுதியாக மொத்தம் 131 பாடல்களிற் கூறுகின்றது. சிவகுரு தரிசனம் கிடைக்கப்பெற்று அந்நற்குருவின் வழிகாட்டலின் பேரில் திருவடிப் பேறுபெறுதலே வாழ்க்கையின் நோக்கம் எனக்காட்டப்படுகிறது. இம்முயற்சியில் ஞாதுரு, ஞானம், ஞேயம் என்பவற்றின் விளக்கம் தரப்படுகின்றது. அதாவது காண்பவன், காணும் அறிவு, காட்சிப்பொருள் என்பன. மேலும் துறவு, தவம் என்பன யாவை, உண்மைத் தவவேடத்தின் இலக்கணம், இதற்கு மாறான போலிவேடத்தின் தன்மை, இவற்றிற்கு அப்பாலான ஞானவேடம், சிவவேடம் என்பவற்றின் தன்மைகள் கூறப்படுகின்றன. குருவும், சற்குருவாக அமைதல் வேண்டும், என்னும் அதே வேளை சீடனும், பக்குவ சீடனாக அமைதல் வேண்டும். பக்குவனுடைய குணங்களும், அபக்குவனுடைய தன்மைகளும் விவரிக்கப்படுகின்றன. இத்தந்திரத்தின் சாரத்தை ஒரே சொல்லிற் சொல்வதானால், "சற்குரு நெறிநிற்றல் – வீடு பேறடைதல்" எனச்சொல்லிவிடலாம்.

## சிவகுரு தரிசனம்.

சிவகுரு தரிசனமாவது உள்ளத்திலேயுறைந்து நின்றருளும் சிவபரம்பொருளே குருநாதனாகக் காட்சியளிக்கின்றார் என்பதனை உணர்ந்து அவ்வாறு ஏற்றுக்கொள்ளுதல். அக்குருநாதன் பக்தியை உண்டாக்கி, மந்திர உபதேசங்களால் குற்றங்களை நீக்கி, சத்து, அசத்து, சதசத்து என்பதான பொருள்களின் உண்மை இயல்புகளை உணர்த்துவார்.

சத்து என்பது உண்மைப்பொருள் - சிவம் —சத்துப்பொருள், அசத்து என்பது உண்மை போலக் காட்சியளிப்பினும் உண்மையற்ற பொருள், பொய்ப்பொருள்— சடம். பாசம் — அசத்து. சத்தும் அசத்துமாகிய இரண்டினையும் ஒருவாறு அறியும் இயல்புடைய ஆன்மா, சதசத்து எனப்படுகிறது. இக்கருத்தையே நாயனார் முதற் பாடலில் கூறியருளினார்.

"பத்திப் பணித்துப் பரவும் அடி நல்கிச்
சுத்த உரையால் துரிசறச் சோதித்துச்
சத்தும் அசத்தும் சதசத்தும் காட்டலாற்
சித்தம் இறையே சிவகுருவாமே"

ஆன்மாவானது நித்தியப் பொருளாயிருப்பினும் ஆணவமலமாகிய இருளில் மூழ்கியுள்ளது. இவ்வாணவ மலத்தை நீக்குதற் பொருட்டு, மாயா மலமாகிய பாசம் உயிருடன் கூட்டப்பெறுகின்றது. பெற்ற பின்னர், ஆன்மாவானது, நல்வினை, தீவினைகளுக்கீடான, சரீரங்களைக் கடவுளருளால் பெற்றும், மேலும் புண்ணிய பாவங்களை இயற்றிப் பிறவிச் சுழலிற்பட்டு, உழலும்போது சற்குருவின் அருளினாலே, உடலே தான் என்று இருந்த ஆசையை அறுத்து, நேருக்கு நேரே, நிலை குலையாது முத்தியிற் கூட்டுவதற்கு உதவுவார். இதனையே நாயனார் இரண்டாம் பாடலில் விளக்குகின்றார்.

"பாசத்தைக் கூட்டியே கட்டிப் பறித்திட்டு
நேசித்த காயம் விடுவித்து நேர் நேரே
கூசற்ற முத்தியிற் கூட்டலா நாட்டத்து
ஆசற்ற சற்குரு அம்பலமாமே"

சுத்த சிவனே சீவர்களிடம் கருணை கொண்டு, குருவாக வந்து மலக்குற்றத்தை நீக்கி அத்தனை புரியும் அருளைக் காணாத அறிவிலிகள், பொய் மிகுந்த புவன போகங் களையே பொருளெனக் கண்டறியும் பாசம் பற்றியவர்கள், குருவை நம்மவர் என்று தம்மோடு ஒப்பவைத்து என்னுவர். புண்ணியமுடைய ஞானியர்களோ சிவனே இவர் என்று அடிபணிந்து வணங்குவர்.

"சுத்த சிவன் குருவாய்வந்து தாய்மை செய்து
அத்தனை நல்லருள் காணா அதிமூடர்
பொய்த்தகு கண்ணார் நமரென்பர் புண்ணியர்
அத்தன் சிவனென்று அடி பணிவாரே!!

பொய்மை ஒழிதலும் உலகப்பற்று நீங்குதலும் எட்டெட்டுச் சித்தி மயக்கம், அதாவது 64 கலைகளையும் நாம் கற்றுவிட்டோம். அதனால் நாம் எல்லாம் அறிந்துள்ளோம் என்கின்ற மயக்க உணர்வும் ஆகியன, குருவருளாலன்றி நீங்காது.

குருவினுடைய மேன்மையை மேலும் நாயனார் கூறுகின்றார். சிவனே சிவஞானியாக அமைவதால், தனக்கு உபதேசம் செய்யும் குருவைச் சிவனென்று எண்ணித் திருவடியை அடைவார்க்கு சிவனது தோழமையும் நல்ல முத்தியும் பொருந்தும். அவர் பிறப் பின்றி மேலான சிவலோகத்தைச் சென்றடைவார்.

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென்பது குறித்து ஓரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே"

குருவருளால் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தால் சிவன் விளக்குவார்.

இவ்வுலகில் நான் வீடுபேறு அடைவதற்காக அமைத்த இந்த இன்பப் பிறப்பை முன்னமே எனக்கு உதவிய முதல்வனாகிய இறைவனை ஞானத்தால் அடையும் காலத்தில் அவன் என்னிடமாகத் தானாகவே வெளிப்படுவன். எனது தலைவனை அடையத்துணை செய்தது எனது மனத்தின் ஒருமைப்பாடும், தணியாததாகமுமே என்கின்றார் நாயனார்.

நான் நூலறிவினால் அறிந்தும் அனுபவத்தில் உணர்ந்தும் இந்த விரிந்த உலகங் களையெல்லாம் கண்டேன். சிவத்தோடு பொருந்திச் சிவத்தைத் தியானித்துச் சிவத்தின் அருளைப்பெற்றேன். அறிவில்லாதவர் கூட்டத்தை விட்டொழிந்தேன். அதனால் இப்பிறவியை விட்டு நீங்கினேன்.

வினைக்கீடாகப் பெற்ற உடல் முதலியனவற்றைச் சுமக்கின்ற பல்லுயிர்கள், தலைவனாகிய இறைவன் எவ்வாறு சீவர்களோடு பொருந்தி இயக்குகின்றான் என்பதை எவ்வகையிலும் அறியார். சீவர்கள் அறியாவகை பிரிக்கின்ற தடைகளை நீக்கி, எல்லா உயிர்களையும் தன் கருவிலே முன்னர் கொண்ட இறைவனை நான் கண்டு கொண்டேனே. இவ்வாறு நாயனார் தனது அனுபவத்தை எமக்காகக் கூறுகின்றார்.

## 2. திருவடிப்பேறு.

குருவருளால் திருவடிப்பேறு எய்துவதே பயனென்பதனாற் போலும் 'திருவடிப் பேறு' என்னும் பகுதி சிவகுரு தரிசனம் என்னும் பகுதிக்கு அடுத்தாற்போல் வைக்கப் பட்டுள்ளது. அன்பினால் இறைவனைச் சிந்தித்தால், சிரசின் மீது உணர்வு பெருகி இன்பம் உண்டாகும் என்கின்றார் முதலாவது பாடலில்.

இறைவன் திருவருளை நல்கிய போதே பொறி புலனுக்கு அடிமையாகக்கிடந்த எனக்கு, ஞானத்தைக்கொடுத்த எம் தலைவன், ஞானவாளை உதவி அஞ்ஞானத்தை வேறுபடுத்தும் திறமையையும் கொடுத்து வீட்டுலகை முடிவிலாக் காலம் ஆள்வாயாக என அருளி அருட் சக்தியை இன்பமாக என்சிரசிற் பதித்தனன்.

"தாள் தந்தபோதே தலை தந்த எம்மிறை
வாள் தந்த ஞான வலியையும் தந்திட்டு
வீடு அந்த மின்றியே ஆள்க எனவிட்டு அருட்
பாடின் முடி வைத்துப் பார் வந்து தந்ததே"

திருவடி ஞானம் பெற்றவரின் தன்மையை நாயனார் விவரிக்கின்றார். அநுபவ நிலையில் பேச்சற்று உணர்வு கெட்டு, தான் என்ற நிலை அறியாது, தெளிந்த, அமைவின்றியிருக்கும், சிவமாம் தன்மையும் கெட்டு, சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி ஆகிய வாக்கினால் உதிக்கும் நாதத்தைக் கடந்த எல்லையற்ற தனது சொருபத்துடன் ஒன்றாக்கினான். அதனால் பிறப்பு இறப்புக்கு எல்லையான வியவகாரத்தைக் கடந்து விட்டோம்.

"உரையற்று உணர்வற்று உயிர் பரமாற்றும்
திரையற்ற நீர்போல் சிவமாதல் தீர்த்துக்
கரையற்ற சத்தாதி நான்கும் கடந்த
சொருபத் திருந்தனன் சொல்லி றந்தோமே"

அது நாதத்திற்கு அப்பாற்பட்ட நிலை. அதாவது சொல்லிறந்த நிலை. அதை விளக்க; சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி ஆகிய நாதத்தின் நான்கு படிக்கிரமத்தையும் குறிப்பிடுகின்றார். சூக்குமை என்பது வாக்குப் புலத்தில் வெளிப்படாது. சூக்கும நிலையில் இருப்பது பைசாந்தி என்பது மயில் முட்டையின் நீர் பஞ்ச நிறங்களையும் சூக்கும ரூபமாய்த் தன்னுள் அடக்கியிருப்பது போல எழுத்துக்கள் பிரிந்து தோன்றாது மிகவும் சூக்குமரூபமாயிருப்பது. மத்திமை என்பது சூக்கும ரூபமாய் எழுத்துக்கள் பிரிந்து தோன்றிச் செவியிற் கேட்கப்படாததாய் சொல்லுவான், உணரும் உணர்விற்கு ஏதுவாய் மெல்லோசையாய்க் கண்டத்தில் விளங்குவது. வைகரி என்பது தன்செவிக்கும், பிறர்செவிக்கும் கேட்கப்பட்டு நினைத்த பொருளைச் சொல்லும் சொல்லாய் அமைவது, என்னுடைய சிரசின் மீது திருவடியைச் சூட்டி அருளால் பார்த்து எங்குமாயிருக்கும் பெரிய வடிவினைத் தந்த பெரிய பெருமானை குருவடிவில் வந்த தலைவனை எம்முடைய அரசனின் திருவருளைப் பெற்றுப் பிறவி உண்டாகும் வழி உலர்ந்து போகக்கண்டு கொண்டேனே.

இனித் திருவடி ஞானத்தின் தன்மையைக் கூறுகின்றார். திருவடி ஞானம் சிவமயமாக்கும். சிவலோகத்தில் சேர்க்கும் சிறைப்படுத்தியிருந்த மலத்தினின்றும், சிவனை நீக்கும், அணிமாதி சித்திகளையும் முத்திப்பேற்றினையும் அளிக்கும்.

"திருவடி ஞானம் சிவமாக்குவிக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறை மலம் மீட்கும்
திருவடி ஞானமே தின் சித்தி முத்தியே"

திருவடி ஞானத்தின் பேற்றினை மேலும் விளக்குகின்றார்.

"கழலார் கமலத்திருவடி என்னும்
நிழல் சேரப் பெற்றேன்", என்றும்
"முடி மன்னர் இன்பம் அளவுபட்டது
அடி மன்னர் இன்பம் அளவுபடாதது" என்றும்

போற்றுகின்றார்.

இறைவன் திருவடியின் பெருமையை மேலும் கூறுகின்றார்.

"மந்திரமாவதும் மாமருந்தாவதும்
தந்திரமாவதும் தானங்களாவதும்
சுந்தரமாவதும் தூயநெறியாவதும்
எந்தை பிரான் தன் இணையடி தானே".

## 3. ஞாதுரு, ஞானம், ஞேயம்.

ஞாதுரு, ஞானம், ஞேயம் என்பவை முறையே அறிவான், அறிவு, அறியத்தகு பரம்பொருள் என்பவற்றைக் குறிக்கும். ஆன்மா தற்போதம் இழந்து சிவஞானத்தால் இறையுணர்வில் அழுத்தி நிற்றலை இப்பகுதி உணர்த்துகின்றது. தான் என்ற ஆன்மாவும் அவன் என்ற சிவமும் என உண்மைப்பொருள் இரண்டு உள்ளன. தன்னையும் அவனையும் தனது உண்மை ஞானத்தாற் கண்டு தான் என்னும் பூவை அவனது திருவடியிற் சாத்தினால் நான் என்றும் ,அவன் என்றும் வேறுபடுத்திக் காணும் உணர்வு மாறி நானே அவன் என்னும் நல்லுணர்வு உண்டாகும்.

சிவசிந்தனையால் வினை நீக்கமும், இருள் நீக்கமும், சிறந்த உயிர்க்கு உண்டாகும். இரண்டாம் பாடலிலே "பல்பேதமையாலே மறந்து" என்னும் சொற்றொடர்களை, நாயனார் செய்துள்ளார். அதாவது பிறந்து, இறந்து பலவகை அறியாமையாலே செய்வன தவிர்வன மறந்துபோதல், செய்வன, இனியவை கூறல், அடக்கமுடைமை, அருளுடைமை, தவமுடைமை, முதலான எத்தனையோ உள்ளன. அதேபோலத்தவிர்வன வும், கூடாவொழுக்கம், அழுக்காறு, வெஃகல், புறங்கூறல், பயனில் சொல்லல் முதலாக எத்தனையோ உள்ளன.

மூன்றாம் பாடலிலே சிவபிரானின் உருவடிவை விளக்குகின்றார். அறமே வடிவாகியுள்ளவன், அனாதியேயுள்ளவன், அதனால் தனியன், அவன் தங்குமிடமெல்லாத் தத்துவங்களும் சுட்டெரிக்கப்பட்ட இடம், அவன் ஏற்பது மனிதர்களது தற்போத மாகிய பிச்சை, ஆதலால் அவன் துறவி என்பதை அறியுங்கள். பற்றுக்கள் நீத்த வரின் பிறவியைப் போக்கும் பித்தனுமாவான்.

"அறவின் பிறப்பிலி யாரும் இலாதான்
உறைவது காட்டகம் உண்பது பிச்சை
துறவனும் கண்டீர் துறந்தவர் தம்மைப்
பிறவி யறுத்தருள் பித்தன் கண்டீரே"

அநாதியான இறைவன் சீவர்கள் அடைய வேண்டிய நெறியையும், நெருஞ்சில் முள்போன்று ஒதுக்கித்தள்ள வேண்டியவற்றையும் படைத்தான். அறவழியில் நில்லாது தவறினால், நெருஞ்சில்முள் குத்துவது போன்று துன்பத்தை அடைவர், ஆனால் அறவழி தவறாது ஒழுக வல்லார்க்கு வழியில், நெருஞ்சில்முள் குத்துவது போன்ற துன்பங்கள் அடையமாட்டா.

"நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்
நெறியில் வழுவில் நெருஞ்சில் கட்பாயும்
நெறியில் வழுவாது இயங்க வல்லார்க்கு
நெறியின் நெருஞ்சில் முட்பாயகிலாவே"

நெருஞ்சில் சாதாரணமாக கண்ணுக்கு புலப்படாத ஒரு முள் காலில் பட்டால் பெருந்துன்பம் தரும். அதுபோன்று அறநெறியிற் செல்லாதவர்கள் தாம் அறியாதே பெரும் துன்பம் அடைவர். பாம்பு ஒன்று உள்ளது. அதற்குப்படம் ஐந்து. அது நுகரும் போகம் நான்கு. அது புற்றுக்குள்ளே பொருந்தி நிறைந்துள்ளது.

தான் என்ற ஆன்மாவும், அவன் என்ற சிவமும் என உண்மைப்பொருள் இரண்டு உள்ளன. தன்னையும் அவனையும் தனது உண்மை ஞானத்தாற் கண்டு, தான் என்னும் பூவை அவனது திருவடியிற் சாத்தினால், நான் என்றும், அவன் என்றும் வேறுபடுத்திக் காணும் உணர்வு மாறி, நானே அவன் என்னும் நல்லுணர்வு உண்டாகும்.

"தானென்ற அவனென்ற இரண்டாகும் தத்துவம்
தானென்ற அவனென்ற இரண்டும் தனிற்கண்டு
தானென்ற பூவை அவனடி சாத்தினால்
நானென்ற அவன் என்கை நல்லது ஒன்றே"

நந்தியாகிய குருநாதன் சிவதீட்சையின் மூலமாக "அறிவு அறியாமை பேதித்து" அதாவது, அறிவு என்று நாம் சாதாரணமாகக் கைக்கொள்ளும் அறியாமையினால் நீக்கியருளி, தான் என்ற ஆன்மாவைப் பரம் என ஆக்கி, எனது உண்மை இயல்பை எனக்கு உணர்த்தியருளினார். "அறிவு அறியாமை " என்னும் சொற்றொடரை நாம் இங்கு கவனித்தல் வேண்டும். நாம் சாதாரணமாக அறிவு எனக் கொள்வது சுட்டியறியும் அறிவு. ஞானிகளின் நோக்கிலே சுட்டியறியும் அறிவும் ஒருவகை அறியாமையாகும்.

கண்பொறியாற் காணாத காட்சியுடன், செவிப்பொறியாற் கேளாத கேள்வியும், மாறுபடாத சிவானந்தமும், கூடிப்பின்னர் பிரியாத சேர்க்கையும், நாணமில்லாத பற்றும், நாதாந்தத்தில் விளங்கும் அறிவும் சான்பாயாக என நந்தியெம் பெருமான் காட்டியருளினார்.

"காணாத கண்ணுடன் கேளாத கேள்வியும்
கோணாத போகமும் கூடாத கூட்டமும்
நாணாத நாணமும் நாதாந்த போதமும்
காணாயென வந்து காட்டினன் நந்தியே"

காணாத கண், கேளாத செவி என்பன சுட்டறியும் அறிவினால் ஒரு சேரக்கண்டும் கேட்டும் இருத்தல்.

4-துறவு.

அன்பினால் இறைவனைப்பற்றி நின்று, இயல்பான முறையிற் பாசங்களின் நீங்குதலே துறவு ஆகும். அறிவினால் ஆராய்ச்சி செய்து, பற்றின் நீங்குதல் அவாவறுத்தல் எனப்படும். உலக இன்பங்களை இயல்பாகத் துறந்த சோதிப்பிரானை மறவாது வழிபடுவார்க்கு அவர் சிவலோகம் ஆகுவார்.

அதற்குரிய இரண்டு உடல்களிலும் படத்தை விரித்து ஆடிக்கொண்டிருந்ததைவிட்டு, ஒரே படமாகச் செய்து கொண்டு உடம்பு இடமாகக்கிடக்கும்.

"நாகமும் ஒன்று படம் ஐந்து நாலது
போகம் உட்புற்றிற் பொருந்தி நிறைந்தது
ஆகம் இரண்டு படம் விரித்து ஆட்டொழிந்து
ஏகம் படம் செய்து உடம்பு இடமாமே"

நாகம் என்பது குண்டலினி சக்தி. இது கிரியா சக்தி, உடலிலுள்ள சகல கிரியைகளும் இதன் காரியமாகும். ஐந்து படம்—மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவை அதன் ஐந்து தலைகள். நாலு போகம் என்பது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவை. இந்திரியங்களுடன் தொடர்பு கொண்டு சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் ஆகிய ஞானத்தை உயிருக்கு உணர்த்துகிறது. ஆகம் இரண்டு என்பது தூல, சூக்கும உடல். இதற்கு வேறுவகையிலும் பொருள் சொல்வார்கள். ஆருயிர்கட்கு, நாகம் போலும் உடம்பு ஒன்று அதன் ஐந்து படம்போலும், ஐம்பொறிகள். அப்பொறிகள் வழியாக, அறம் பொருள், இன்பம், வீடு ஆகிய நாற் பயன்களையும், உயிர் நுகரும். உளப்புற்றாகிய உடம்பினது அகத்துப்பொருந்தி, நிறைந்து நிற்பவன் சிவன். சூக்கும தூல உடம்பு இரண்டினுள்ளும் படமாகிய பொறி வழிச்சென்று ஆடும் செயலது. அதாவது உழல், வாதியொழிந்து பக்குவப்படுதலாகிய தகுதி உண்டாக்கி அச்சிவபெருமான் அவ்வுடம்பினை இடமாகக் கொண்டருள்வான். இங்குதான் அனுபவ ஞானம் தேவைப்படுகிறது.

5—தவம்

தவமானது தன்னுள்ளே மறைந்துள்ள பொருளைக் காணச் செய்யும். முயற்சி. சிவமிடத்தே மனத்தை வைத்து நிலைபெற்ற உத்தமர்களின் உள்ளமானது உலகிலுள்ள எத்தகைய துன்பத்தையும் கண்டு அஞ்சுவதில்லை. அத்தகையவர் பிறப்பு இறப்பு இல்லாமையால் எமனுக்குப் பயப்படுவதில்லை. அவர்களுக்கு வேறு எவ்வகை உலகியல் துன்பமும் இல்லை. சிவனின் நினைப்பு மறப்பாகிய பகல் இரவு இல்லை. இரவு பகல் என்ற வேறுபாடு இல்லை. இரவு பகல் என்ற வேறுபாடு இல்லை. பிறபொருளின்மேல் பற்று நீத்தவர்க்கு அடைதற்குரிய உலகியற் பயன்களுமில்லை.

"ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்
நடுங்குவதில்லை நமனுமங் கில்லை
இடும்பையும் இல்லை இராப் பகல் இல்லை
படும்பயன் இல்லைப் பற்று விட்டோர்க்கே"

சாத்திரம் படித்துக்கொண்டு பெருமையடைவதை விட்டு நீங்கள் ஒரு கணநேரம் ஆதல் புறத்தே செல்லும் மனத்தைத் தடுத்து அகத்தே நோக்குங்கள். அவ்வகமுகப் பார்வையானது பசுமரத்தில் அடித்த ஆணிபோல் நிலைபெற தொன்று தொட்டுப் பிணித்துவரும் பிறவியானது கட்டுக்களினின்றும் அகன்று நீங்கியோடும்.

"சாத்திரம் பேசும் சதுர்களை விட்டு நீர்
மாத்திரைப் போதும் மறித்துள்ளே நோக்குமின்
பார்த்த அப்பார்வை பசு மரத்தாணிபோல்
ஆர்த்தபிறவி அகவிட்டோடுமே"

6-தவதாடணம்

தவதாடணம் என்பது தவப் புறக்கணிப்பு அல்லது தவக்கடப்பு என்று சொல்லலாம். தவத்தாற்பெறும் பயன் கிடைத்தபின்னர் தவ அனுசரிப்புத் தேவைப்படாது, என்பதே இதன் பொருள். புறநோக்கைவிட்டு அகநோக்குக் கொண்டவர்க்குப் புறத்தே செய்யும் கிரியை ஒன்றும் வேண்டாம்.

கற்றதனாலாய பலன் இறைவனைக் காணுதல், உயிர்க்குயிராகிய பொருளை உள்ளே பெற்றபின் கற்று அறிய வேண்டியது ஒன்றும் இல்லை. இருபொருள் உள்ள போது காதல் உண்டு. பொருள் ஒன்றானபோது, காதலுக்கு இடமில்லை. உடலினின்றும் உயிர் பிரிதல் சாதல், சமாதியில் உடலினின்றும் உயிர் தனித்து நிற்றலின் காதலும் வேண்டாம் புலன்வழிப் போகாமைச்சாக, மலை, காடு முதலிய இடங்களைத்தேடிப் போகவும் வேண்டியதில்லை.

"ஓதலும் வேண்டாம் உயிர்க்குயிர் உள்ளுற்றால்
காதலும் வேண்டா மெய்க்காயம் இடம்கண்டால்
சாதலும் வேண்டாம் சமாதிகை கூடினால்
போதலும் வேண்டா புலன் வழிபோகார்க்கே"

திருமறை, திருமுறைகளாகிய செந்தமிழ் அருள்நூல்களைக் கற்காது தவம் செய்வதற்கு அஞ்சி, பிறந்து இறக்கும் பெரும் துன்பத்திற்கு அஞ்சாது தம் வயிற்றுக்கு ஊதியம்தேடி அலைவது எப்படியென்று கேட்டால் அங்கே தாரத்திலே ஆற்றிற்கிடக்கின்ற முதலைக்கு அஞ்சி காட்டில் வாழும் அண்ணாமயிற்குட்டிகளை ஈன்ற கரடிக்கு எதிர்ப்பட்டது போலும். அன்மையில் ஈன்றெடுத்த குட்டிகளோடு நிற்கும் கரடி மிகவும் கொடியது.

"ஆற்றிற்கிடந்த முதலை கண்டு அஞ்சிப் போய்
ஈற்றுக் கரடிக்கு எதிர்ப்பட்டதன் ஒக்கும்
நோற்றுத் தவம் செய்யார் நூலறியாதவர்
சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே"

சித்தம் இடையறாது சிவனையே எண்ணிச் சிவமாதலே தவம்.

7 – அருளுடைமையின் ஞானம் வருதல்

அருளுடைமையின் ஞானம் வருதலாவது, இறைவன் திருவருள் கிட்டியபோது, ஞானம் விளங்குதல்.

சிவனது அருள் உண்டாயின், நல்ல செல்வம் உண்டாகும், நல்ல ஞானம் உண்டாகும், பெருந்தன்மை உண்டாகும், பெருந்தெய்வமும் ஆவர். புண்ணியம் என்றும் பாவம் என்றும் இவ்வுலகில் இரண்டு உள்ளன. இவை வினை காரணமாக இன்ப துன்பமாகப் பொருந்துகின்றது என்று உணர்வார். சிவஞானிகள். இவ்வாறு உணர்ந்து, இவற்றுக்குக் காரணமாகிய வேரினை அடியோடு அறுத்து, வினை நீங்கிய இடத்து, வெளிப்படும் அண்ணலை ஆராய்ந்து அறிந்து கொள்வர். அதுபோல நீங்களும் ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள்.

"புண்ணிய பாவம் இரண்டுள பூமியில்
நன்னும் பொழுது அறிவார் சிவஞானிகள்
என்னி இரண்டையும் வேரறுத்து அப்புறத்து
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள்வீரே"

உடம்பாகிய ஊர்தியில் ஊர்ந்து, மனமாகிய பாகன் செலுத்த அழியும் தத்துவ உணர்வு களில் தலைப்பட்டு மயங்கும் உயிர்கள், உணர்வில் விளங்கும் ஒளிமண்டலத்தில் அமர்ந்து மலமில்லாது சதாசிவ குருவின் அருள் பெற்றால், அடியார் கூட்டத்தில் ஒருவராகி சிவனும் சிவரூபம் பெறுவான்.

"காயத்தேரேறி மனப்பாகன் கைகூட்ட
மாயத்தேரேறி மயங்கும் அவை உணர்
நேயத்தேரேறி நிமலன் அருள் பெற்றால்
ஆயத்தேரேறி அவன் சிவனாமே"

8 – அவவேடம்

அவவேடம் என்பது போலிக் கோலம். அகமும், புறமும் ஒத்தில்லாத பொய் வேடம் புனைவது, பயனற்றதாகும். பொய்வேடம் பூண்பவரை நாயனார் இரக்கம் இன்றிச் சாடுகின்றார். ஆடம்பரங்களை மேற்கொண்டு சோறு உண்பதே பயனாகப் பயனற்ற வேடங்களைப் பூண்டு, உலகத்தை ஏமாற்றும் அறிவிலிகள்! பொய் வேடத்தை விட்டுச் சிவனை நினைந்து ஆடியும், பாடியும், ஆனந்தக்கண்ணீர் சொரிந்தும், மகிழ்ச்சி யோடு பிதற்றியும் சிவனது திருவடிகளைத் தேடியும் காணமாட்டீர்கள்.

"ஆடம்பரம் கொண்டு அடிசில் உண்பான் பயன்
வேடங்கள் கொண்டு வெருட்டிடும் பேதைகாள்
ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும்
தேடியும் காணீர் சிவனவன் தாள்களே"

சிவஞானம் இல்லாதவர் தவவேடம் பூண்டு இந்நாட்டில் இழிவான செயலைச்செய்து, பிச்சையெடுத்து உண்டு உயிரோடிருப்பினும், அந்த நாடு அதன் பெருமை குன்றும். ஆதலால் இழிவுடையோராகிய அவரது வேடத்தைக் கழிப்பிப்பது, இன்பமாம். வலிந்து தானும் பிறர் அதனைக் களைதல் வேண்டுமென்பது நாயனாரது புரட்சிகரமான கருத்துப்போலும்.

"ஞானமில்லார் வேடம் பூண்டிந்த நாட்டிடை
ஈனமதே செய்து இரந்து உண்டிருப்பினும்
மான நலம் கெடும் அப்புவி யாதலால்
ஈனவர் வேடம் கழிப்பித்தல் இன்பமே"

"பொய்த் தவம் செய்வார் புகுவர் நரகத்துப்
பொய்த் தவம் செய்தவர் புண்ணியராகார்"
என்று பொய்த்தவரைச் சபிக்கின்றார் நாயனார்.

9-தவவேடம்

அவவேடத்தைச் சாடிய நாயனார் இப்போது தவவேடம் என்பதன் இலக்கணத்தை விளக்குகின்றார். தவத்தில் சிறந்தவரே முதன்மையான வேடம் பூண்டவர்கள். அங்ஙனம் இன்றிப் பொய்யான வேடத்தை பூண்டவர், கொடுமை மிக்க கொலை பாதகராவர். அத்தகைய கீழான செயலுடையார் தவவேடத்திற்குப் பொருந்தார். அவ்வேடம் தவத்தாற் சிறந்தவர்க்கன்றித் தாங்கமுடியாது.

"தவம் மிக்கவரே தலையான வேடர்
அவம் மிக்கவரே அதி கொலை வேடம்
அவம் மிக்கவர் வேடத்தாகார் அவ்வேடம்
தவம் மிக்கவர்க்கன்றி தாங்க வொண்ணாதே"

சிவ அடையாளங்களில் முதன்மையானது திருநீறு, இரண்டு காதிலும் அணிவது தாமிரத் தாலாய குண்டலம், கழுத்தில் அணிவது சிவமணிகள் 32 கொண்ட உருத்திராக்க மாலை. இவை வேதாகமங்களை ஓதியவர்க்குரிய சின்னங்கள்.

இனிச் சிவயோகிக்குரிய சாதனங்களாவன: உட்கட்டாகிய கோவணம், கையில் தொங்கும் பை, மயிலிற்காலாகிய கட்டை சுற்றிய சடை, உடம்பு முழுவதும் பூசப்பெற்ற திருநீறு, கையில் மண்டையோடு, வலக்கையில் பிரப்பம் கோல் என்பன.

"பூதி அணிவது சாதனம் ஆதியில்
காதணி தாம்பிர குண்டலம் கண்டிகை
ஓதியவர்க்கும் உருத்திர சாதனம்
தீதில் சிவயோகி சாதனம் தேரிலே"

"யோகிக்கு இடுமது உட்கட்டு கஞ்சுளி
தோகைக்குப் பாசத்துச் சுற்றும் சடைய தொன்று
ஆகத்து நீறணி ஆங்கு அக்கபாலம்
சீகத்த மாத்திரை தின் பிரம்பாகுமே"

சிவயோகியற்குரிய சின்னங்களைப் பத்தாகக் கொடுத்து அடுத்த பாடலிற் கூறுகின்றார்.

"காதணி குண்டலம் கண்டிகை நாதமும்
ஊது நற்சங்கும் உயர்சட்டி கப்பரை
ஏதமில் பாதுகம் யோகாந்தம் ஆதனம்
ஏதமில் யோகபட்டம் யோக தண்டம் ஆகிய பத்தும்"

அவையாவன காதணியாகிய குண்டலம், கழுத்தாகிய உருத்திராக்கம் சிவ சிவ என்னும் ஒலி, ஊதுகின்றன வெண்சங்கு, மேலான ஆறு சட்டி, மண்டையாகிய சட்டி, குற்றமற்ற பாதுகை, சிவயோகத்திற்குரிய இருக்கை, குற்றமற்ற யோக பட்டம், யோக தண்டம் என்னும் பத்துமேயாம்.

உயர்கட்டி அல்லது ஆறுகட்டி என்பது காமாதி ஆறுபகையையும் அடக்கியதற்கு அடையாளமாகக் காதில் ஆறு குண்டுகளைக் கோத்து அணியும் காதணி. யோக பட்டம் என்பது யோகம் புரியும் போது, முழங்காலையும் முதுகையும், சுற்றிக் கட்டப் பெறும் பட்டிகை, யோக தண்டம் என்பது யோகம் செய்யும் பொழுது முட்டுக் கொடுக்கும் கலைவடிவான தண்டம்.

10-திருநீறு

பூணூாலையும், நுன்குடுமியையும் அணிந்திருந்தும் அவற்றின் உண்மையை மூடர்கள் அறிவதில்லை. பூணூல் என்பது வேதாந்தத்தைக் குறிப்பது. நுன்குடுமியாவது வேதாந்த ஞானத்தை உணர்த்துவது. சிவத்தின் பால் இரண்டற்று, ஒன்றினை அத் தன்மையுடையோர், பரமும், உயிரும் ஒன்றென்றே பார்ப்பர். அவ்விதம் ஒன்றா காது நின்றவர் ஓங்காரம் ஓதில் ஒன்றாவர்.

"நூலும் சிகையும் உணரார் நின் மூடர்கள்
நூலது வேதாந்தம் நுன்சிகை ஞானமாம்
பாலொன்றும் அந்தணர் பார்ப்பார் பரம் உயிர்
ஓரென்று இரண்டெனில் ஓங்காரம் ஓதிலே"

பூணூல் என்பது முப்புரிநூல், இது இடை, பிங்கலை, சுழுமுனையாகிய மூன்றையும் தொழிற்படுத்தும் ஆற்றல் உடையோர் என்பதற்கு அடையாளம். நுன்குடுமி என்பது நிராதாரத்தில் உள்ள பிரமத்தையே நினைத்திருப்பர் என்பதற்கு அடையாளம்.

ஓங்காரம் என்பது அ,உ,ம,விந்து, நாதம் என்ற ஐந்து உறுப்புக்களை உடையது. இவற்றுள், அ, உ,ம என்பதைத் தடத்தம் என்றும் விந்து, நாதம், சொருபம் என்றும் பெயர் பெறும். தடத்த வடிவமான ஓங்காரத்தில் சொருபமான விந்து நாதம் மறைந்துள்ளது. சதா ஓங்கார சிந்தனை செய்தால்,அதன் சொருபம் உடலின்றும் வெளிப்பட்டு, வெண்ணிற ஒளியான விந்துவையும், பலதொனிகளுடன் கூடிய நாதத்தையும் வெளிப்படுத்தும். இந்த விந்து நாதங்களை அறிந்து அவற்றில் ஒன்றி னால் பிரணவம் கடந்த பரத்தில் உயிர் ஒன்றும், அப்போது அவர் அந்தண்மை பூண்ட பிரமதரிசனிகள் அல்லது பார்ப்பர் ஆவர். பிரம சொருபமுடைய தூல உடல் சூக்கும உடலாக மாறுவது அவசியம் என்றும் அவ்வொளியே சைவர்கள் அணியும் திருநீற்றின் தத்துவம் என்றறிக. திருநீற்றின் உண்மை உணர்ந்து ஓங்காரத்தை ஓதி இரண்டற்ற நிலையை அடைய வேண்டும்.

எலும்பு மாலையை அணிந்தவராகிய சிவபெருமான் பூசும் கவசத்திருநீற்றை ஒளி கெடாமற்பூசி மகிழ்வீராயின், பண்டைய வினைகளும் உங்களிடம் தங்கா, சிவகதியும் உங்களிடம் வந்து பொருந்தும். ஆனந்தமயமான திருவடியை அடையலாம்.

"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே"

கங்காளம்—எலும்பு மாலை. சோதியை வெளிப்படுத்தும் சக்தி எலும்பில் உள்ளதென்பார். இவ்வொளி ஆகாயமயமானது. சமய மேல்நிலையடைந்தோர் தூல உரு அழிந்து, ஒளிவடிவாக மாறி, மீண்டும் புனருற்பவத்தில் தேவைக்கேற்ற உருப் பெறுவர் என்பர். இதுவே எலும்பை அணிந்த தத்துவம்.

11—ஞான வேடம்

ஞான வேடம் என்று ஞானப்பேற்றினை விரும்பி மேற்கொள்ளும் வேடம் உண்மைச் சிவஞானம் இல்லாதவர், உண்மைச் சிவஞானியர் போல் வேடம் தாங்கில், நரகத்தையே அடைவார். உண்மைச் சிவஞானமுடையோர், சிவஞானியர்க்குரிய வேடத்தைத் தாங்காவிடினும், நல்ல முத்துக்களேயாவர். சிவஞானப்பேறு உண்டாக வேண்டுமென்ற விருப்பமுடையோர், சிவத்தினிடம் என்றும் நீங்காத பேரொளியோடு பொருந்தி நிற்பர்.

"ஞானமில்லார் வேடம் பூண்டும் நரகத்தர்
ஞானமுள்ளார் வேடம் இன்றேனில் நன்முத்தர்
ஞானமுளதாக வேண்டுவோம் நக்கன் பால்
ஞானமுள வேடம் நண்ணி நிற்போரே"

நக்கன்—ஆடையற்றவன், அதாவது அவயவக் கூற்றாலாகிய மான அபிமானத்தைவிட்ட ஒளிவடிவினன்.

சிவஞானிகளுக்கும், சிவயோகிகளுக்கும், ஆராயின் பயனற்றதான புறச் சாதனங்கள் தேவைப்படா. அவர்களுக்குத் திருநீறு உருத்திராக்கம், சடைமுடி அஞ்செழுத்து ஆகிய நான்கு புறச்சாதனங்களும் வீணேயாகும். அவர்கள் உவமிக்க ஒண்ணாத பொருளோடு உள்ளே பொருந்தி வாழ்வர்.

"சிவஞானி கட்கும் சிவயோகி கட்கும்
அவமான சாதனம் ஆகாது தேரில்
அவமாம் அவர்க்கது சாதனம் நான்கும்
உவமானமில் பொருள் உள்ளுறலாமே"

மெய்யுணர்வுற்ற செப்படி வித்தைக்காரர்கள், கழுமரத்தின் அடியிலிருக்கும் நாய்போலக் கத்தித்திரிவார்கள். மேலும் கழுகுபோல் ஏமாளிகளைப் பிடுங்கித் திரிவார்கள். ஆனால் சிவஞானிகளோ, ஐம்பொறிகளும், உடலும் நுகர்ச்சிக்குத் தக்கவாக ஒத்திருந்தும் போகங்களை விரும்பாது செத்தாரைப்போலத்திரிவர்.

"கத்தித் திரிவர் கழுவடி நாய்போல்
கொத்தித்திரிவர் குரக்களி ஞானிகள்
ஒத்துப்பொறியும் உடலும் இருக்கவே
செத்துத் திரிவர் சிவஞானி யோர்களே"

கழுவடி நாய், கழுவேற்றப்பட்டவர்கள் ஊன் ஒட்டியுள்ள கழுமரத்தின் அடியில் நின்று கொண்டு, ஊனின் விருப்பால், கழுமரத்தின் மேல் தாவித்தாவி நின்று கத்தும். குரக்களி ஞானிகள்—குரங்குபோலத் தாவித்திரியும் மெய்யுணர்வற்றவர். யான் என தென்றும் அழுக்கற்ற தன்மையும் சிவனருளால் தான் சிவமாக உலகிலுள்ள எப்பொருள் களையும் சிவமேயாகக் காணுதலும் பக்குவ சீவர்களுக்கும் பார்வையாலோ பரிசத்தாலோ ஞானத்தை வழங்கும், ஆற்றலும் பிரணவ சித்தியும் சிவபதவி அடைந் தோர்க்கு உரியனவாம்.

"தானன்றித் தன்மையும் தானவனாதலும்
ஏனைய அச்சிவமான இயற்கையும்
நானறு சாதக முத்திரை சாத்தலும்
மோனமும் நந்தி பதமுத்தி பெற்றோர்க்கே"

12—சிவ வேடம்

சிவ வேடமாவது, சிவனுக்கு அடிமை என்றுணர்ந்திருப்போர் கொள்ளும் வேடம். இவ்வேடத்தர் தமக்கென ஒரு செயலுமே மற்றிருப்பர்.

திருவருளால் சிவனுக்கு உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணித்து அடிமையாகி மெய்ப்பொருள் வெளிப்படுதற்குரிய சிவம் தங்கும் அழகிய இடமே தனது உடல் என்னும் உண்மையுணர்வு வருதலால், அறியாமையாகிய இருள் நீக்கி தன்செயலற்றோர் அடிமை பூண்ட சிவவேடத்தரானவர்.

"அருளால் அரனுக்கு அடிமையதாகிப்
பொருளாந் தன்னுடன் பொற்பதி நாடி
இருளான தின்றி இருஞ் செயலற்றோர்
தெருளாம் அடிமைச் சிவ வேடத்தாரே"

தம்மையே சிவனுக்கு உடைமையாக்கி எல்லாம் அவன் செயலென்றிருப்பர்.

உடலில் புனைந்த புறவேடங்கள் ஒளிமயமான உயிருக்குப் பயன்படா. உடலை விட்டு உயிர் பிரிந்தபோது உடலைச் சார்ந்த அறிவற்ற சாதனங்களும் பிரிந்து விடும். உடல் அசத்துப்பொருள், உயிர் சத்துப்பொருள் என்ற உண்மையை அறியாதார் கடலில் அகப்பட்ட கட்டைபோல அலைக்கழிவர். கடலிடம் அகப்பட்ட கட்டை கரைக்கும் கடலுக்குமாக அலைக்கழிவது போல் உண்மை உணராதார் பிறவிக்கு வருவதும் போவதுமாக இருப்பர்.

"உடலில் துவக்கிய வேடம் உயிர்க்காகா
உடல் கழன்றால் வேடம் உடனே கழலும்
உடல் உயிர் உண்மையென்றோர்ந்து கொள்ளாதார்
கடலில் அகப்பட்ட கட்டை யொத்தாரே"

மனிதர்களே! பிராண ரூபமாக உங்களிடம் ஓடிக்கொண்டிருக்கும் குதிரையைக் கடிவாளம் கொண்டு உறுதியாகப் பற்றி நிறுத்துங்கள். வேடத்தை மட்டும் தாங்கி என்ன செய்வீர்கள்? வீணான வேடத்தை விடுங்கள். நந்தியாகிய சிவனை உளத்தில் நாடுங்கள். திருவருளால் நம்பெருமானை உணர்வின் கண் தேடுங்கள். தேடினால் அழியா உண்மை அறிவு இன்பப் பொருளாகிய சிவனார் திருவடி இன்பத்தினைச் சென்றெய்தி இன்புறுதல் கூடும்.

"ஓடும் குதிரைக் குசை திண்ணம் பற்றுமின்
வேடம் கொண்டென் செய்வீர் வேண்டாம் மனிதரே
நாடுமின் நந்தியை நம்பெருமான் தன்னைத்
தேடும் இன்பப்பொருள் சென்றெய்தலாமே"

குசை — கடிவாளம்

13-அபக்குவம்

அறியாமையை அறிவினாற் போக்கும் குருவினைக் கொள்ளமாட்டார். அறியாமையை நீக்காத குருவினைக் கொள்வர். அது குருடும் குருடும் சேர்ந்து குருட்டுத்தனமாக ஆடி, இரு குருடர்களும் அறியாமையால் குழியில் விழுவது போலாம்.

"குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவிழுமாறே"

ஞானம் இல்லாத குரு ஞானத்தை உபதேசிப்பது ஒரு குருடன் மற்றொரு குருடனுக்கு வழிகாட்டுவது போலாம். இருவரும் கெடுவர்.

சிசுவின் வாயில் தாயின் தனத்தை வைக்க அமுதம் ஊறும். ஆனால் எவ்வாறு தாயின் தனத்தில் அமுதம் ஊறுகிறது என்பதை நம்மவர் அறிவதில்லை. அவ்வாறு அமுதம் பெய்து ஊனில் உயிரை நிலைக்கச் செய்பவன், உருவில்லாத சிவனேயாம்.

உறுதி கொண்ட பெருந்தன்மையுடையவனே! வாய்ஏதோ ஒன்றைச் சொல்லவும் மனம் வேறொன்றைச் சிந்திக்கவும் நீ மற்றொன்றைச் செய்யாதே. முக்கரண சித்தியோடு இருப்பின் நீ தீயுருவினான சிவனென்றே கூறுவன். அவ்வாறு தெரிந்த பின்னர் எனது கூற்றுப் பித்தன் கூற்று என்று பிறர் கூறமாட்டார்கள்.

"வாயொன்று சொல்ல மனமொன்று சிந்தித்து
நீயொன்று செய்யல் உறுதி நெடுந்தகாய்
நீயென்றிங் குன்னைத் தெளிவன் தெளிந்தபின்
பேயென்றிங் கென்னைப் பிறர் தெளியாரே"

பஞ்சமா பாதகங்களைச் செய்பவரை அஞ்சும்படி தக்க சமயத்தில் அறிந்து ஓர் அரசன் மிகுதியான தண்டனையை அளித்து இந்த நாட்டிலிருந்து வெளியேற்றாவிட்டால் நாடு பஞ்சத்தில் அகப்பட்டு முழுவதும் பாழாகும்.

"பஞ்சத் துரோகத்து இப்பாதகர் தம்மை
அஞ்சச் சமயத்து ஓர் வேந்தன் அருந்தண்டம்
விஞ்சச் செய்து இப்புவி வேறே விடாவிடில்
பஞ்சத் துளாய்ப் புவி முற்றும் பாழாகுமே"

பஞ்சமா பாதங்களாவன, கொலை, களவு, கள், காமம், பொய்கூறல்.
பிறரைக் கோபித்தலும், உலகியற் பொருள் ஒன்றினை வேண்டுமென்று கருதி
நிற்றலும், வினைகளைத் தாமே செய்வதாக நினைத்துச் செய்தலும், மிதமின்றி
உண்ணுதலும், சுவைக்காக விரும்பி ஒன்றனைச் சுவைத்தலும், பிறர்க்குத் தீமை
செய்தலும் வறுமையுற்றபோது மனம் சோருதலும், செல்வம் வந்துள்ள போது
பெருமிதம் கொள்ளுதலும், தன்பெருமையைத் தானே கூறுதலாகிய இவை ஒன்பதும்
இறைவன் பால் உற்றவர்க்குக் கூடாவாம். காரணம் இவையொன்றும் வழிபடப்படும்
சிவத்தின் பால் இயற்கையாகவே என்று இன்மையால்:-

"கற்றாலும் கருதலும் கருமம் செய்தலும்
தின்றாலும் சுவைத்தலும் தீமை செய்தலும்
பின்றலும் பிறங்கலும் பெருமை கூறலும்
என்றிவை இறைபால் இயற்கை அல்லவே"

நிலையான ஆணவமாகி ஐம்மலங்களையும் நீக்கும் வகையை ஆராயான். பொருந்திய
காமம் முதலியவற்றில் மூழ்கும் தொழிலினின்றும் பிரியான். பொய்யைக் கலவாது
பேச அறியாதவன். பிறப்பு இறப்புகளுக்கு அஞ்சாதவன். இவன் தீட்சைக்குரிய
சீடன் அல்லன் என்று தள்ளத்தக்கவனாவான்.

மலம் - ஐந்து -ஆணவம், மாயை, மாயேயம், திரோதாயி.
காமாதியாவன - காமம் , குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம்.

"மன்னும் மலம் ஐந்தும் மாற்றும் வகை யோரான்
துன்னிய காமாதி தோயும் தொழில் நீங்கான்
பின்னிய பொய்யன் பிறப்பு இறப்பு அஞ்சாதான்
அன்னிய னாவான் அசற் சீடனாயே"

அசற் சீடன் என்பதனை அசத்சீடன் எனக்கொள்க.
பொய்மைச்சீடன் எனப்பொருள் கொள்ளுதல் வேண்டும்.

## 14-பக்குவம்

பக்குவன், தகுதியுடையவன், குரு உபதேசப்படி ஒழுகும் பக்குவமுடையவன். கொண்டால், நல்ல குருநாதனைக் கொள்க. உன்னிடம் உடைமையாகக் கருதப் பட்ட பொருளையும் உனது உடலையும், உனது உயிரையும், காணிக்கையாகக் கொடுக்கவும். எவ்வளவு காலமும் இடைவிடாது அவர் காட்டிய வழியே நின்று தெளிந்து உணரச் சிவபதம்தானே விளையும்.

"கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக
உள்ள பொருள் உடல் ஆவி உடன் ஈக
எள்ளத் தனையும் இடை விடாதே நின்று
தெள்ளி அறியச் சிவபதம் தானே"

உலகில் நித்தியமாய் அழியாத பொருள் எவை, அழியும் பொருள் எவை, என்று தான் சிந்தித்து உணர்ந்து சிவத்தையே சிந்தித்துச் சிவத்தின் சத்தி பதியப்பெற்றுச் சிவத்தை உணர்த்த உணர்த்த நித்தியப் பொருளான சிவத்தினிடம் சிவஞானத்தைப் பெறப் பணிந்து, ஆனந்தமே வடிவான சிவசத்தியின் இச்சைக்குத் தக்கவாறு, தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்பவனே நல்ல சீடனாவான்.

"சத்தும் அசத்தும் எவ்வாறெனத்தான் உன்னிச்
சித்தை உருக்கிச் சிவனருள் கை காட்டப்
பத்தியின் ஞானம் பெறப் பணிந்து ஆனந்தச்
சத்தியில் இச்சை தருவோன் சற்சீடனே"

சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்ற நான்கும் தன்னிடம் அமையப்பெற்றவனே சிவத்தை அடையும் தகுதிபெற்றவன். சீலம் என்பது ஒழுக்கம், நோன்பு என்பது சாதனம், செறிவு என்பது அன்பு, அறிவு என்பது ஞானம், சிவத்தை அடைய வேண்டுவார்க்குச் சிவத்தைப் பற்றிய ஞானம், சிவத்தின் மேல் காதல், செய்யத் தக்க சாதனம், இவை பொருந்தும் வகையான ஒழுக்கம் ஆகிய நான்கும் வேண்டும். 'உணர்த்தும் அதிபக்குவற்கே உணர்த்தி' எனத்தொடங்கும் பதினோராவது பாடலில் குரு சீடனுக்கு உணர்த்தும் முறை கூறப்படுகிறது.

குரு தனது உணர்வைக் குண்டலினியின் துணை கொண்டு துவாத சாந்தவெளிக்குச் செலுத்திச் சீடனது உணர்வையும் சிரசுக்கு மேலுள்ள சகஸ்ர தளத்தில் நிலைபெறச் செய்யும்.

இறுதியாகப் பக்குவமுள்ள சீடனின் இலக்கணம் கூறப்படுகிறது. நற்பண்பு, வாய்மை, இரக்கம், நல்லறிவு, பணிவு, உபதேச குருவின் திருவடியை நிழல்போல நீங்காமை உண்மையான பர ஞானத்தைச் சிந்தித்துத் தெளிந்து அறிதல், அனுபவத்தில் சிவம் பதிவதும், அதனால் சிவபோதம் கழுவுவதும்.

"சற்குணம் வாய்மை தயா விவேகம் தண்மை
சற்குரு பாதமே சாயை போல்நீங்காமை
சிற்பர ஞானம் தெளியத் தெளிவு ஓர்தல்
அற்புதமே தோன்றலாகும் சற்சீடனே"

அற்புதம் தோன்றல், உணர்வதன் பயனால், அனுபவத்தில் சிவம் பதிவதும், அதனால் சிவபோதம் கழுவுவதும்; முடிபுகள் சில. இத்தந்திரத்தைப் பொது நோக்காக நோக்கிய பின்னர் ஓரளவு சிறப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவற்றின் இறுதிக்கட்டமாக இத்தந்திரம் காட்டும் சில முடிவுகளைச் சிந்தித்தல், சாலவும் பொருந்தும்.

1. உண்மை ஞானம் பெற வேண்டுமாயின் ஒரு சற்குருவின் வழிகாட்டுதல் வேண்டும். இதனை நூலறிவாற் பெறுதல் இயலாது.

2. கொள்ளுதலாயின், அனுபவ ஞானமுடைய நற்குருவைக் கொள்க

3. அவ்வாறு கொண்ட பின், உடல், பொருள், ஆவி மூன்றினையும் அவர்க்கே அர்ப்பணம் செய்க.

4. சற்குருவானவர் தனது உணர்வைக் குண்டலினியின் துணைகொண்டு துவாத சாந்த வெளிக்குச் செலுத்திச் சீடனது உணர்வையும், சிரசுக்கு மேலுள்ள சகஸ்ர தளத்தில் நிலைபெறச் செய்தல்.

5. சீலம் என்பது ஒழுக்கம், நோன்பு என்பது சாதனம், செறிவு என்பது காதல், அறிவு என்பது ஞானம், இவை நான்கும் அமையப்பெற்றவனே சிவனை அடையும் தகுதி பெற்றவன்.

6. சத்தாகிய உண்மைப் பொருள் யாது? அசத்தாகிய பொய்ப்பொருள் யாது? என்பதனைச் சீடன் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

7. மனம் வாக்குக் காயம் ஒன்றுபட்டு இயங்கும் வாழ்வே நல்வாழ்வு. மனம் ஒன்றினைச் சிந்திக்க, வாக்கு வேறு ஒன்றினைச்சொல்ல, காயம் பிறி தொன்றினைச் செய்தல் ஆகாது.

8. இவ்வாறு நற்குண, நற்செயல்களை மேற்கொண்டு நான் என்றும், அவன் என்றும், இரண்டுபடுதல் ஒழிந்து எல்லாம் சிவன் செயலென்று, செயலற்று இருத்தல் வேண்டும்.

9. உலக இன்பங்களைப் படிப்படியாகத்துறந்து, சிவப்பற்றுப் பெருகுதல் வேண்டும்.

10. புண்ணிய பாவங்களுக்கு ஏதுவாகிய நல்வினை, தீவினையாக உருப்படும், வினை என்னும் வேரினை, ஞானநிலை எய்த முனைப்படுவார், அறவே களைதல் வேண்டும். அதாவது எச்செயலும் தன்செயலன்று, சிவன் செயலேயென்னும் தெளிவு நிலை.

11. இவ்வாறு முன்னேறிச் செல்லின், சிவனருளாலே சிவனும் தன்மை எய்தும் வாய்ப்பு உண்டு.

12. விபூதி , உருத்திராக்கம், குண்டலம், சடாமுடி என்னும் புறச் சாதனங்கள் வேதாகமங்களை ஓதியவர்சக்கு உரியன.

13. மேல் நிலையடைந்த சிவஞானிகளுக்கும், சிவயோகிகளுக்கும், இப்புறச் சின்னங்கள் தேவைப்படா.

14. ஞானிகள் போலப் பொய்வேடம் தாங்குபவரது பொய்வேடத்தைக் களைவித்து வீசுதல் வேண்டும்.

15. பஞ்சமா பாதகங்கள் செய்வார்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப்படல் வேண்டும். அவர்கள் இருந்தால் நாடு பஞ்சத்தின் பாற்பட்டுப் பாழாகும்.

16. நற்பண்பு, வாய்மை, இரக்கம், நல்லறிவு, பணிவு, முதலிய இலக்கணங்களை உடையவனாயிருத்தல் வேண்டும்,
சற்சீடன் என்பவன்.

திருமூல நாயனார் திருவடி வாழ்க!
************************

திரு. ஆ. குணநாயகம்

# திருமந்திரத்தில் அகப்புற உணர்வு

தோற்றுவாய் :

திருமுறைகள் பன்னிரண்டும் தமிழில் உள்ள மந்திர நூல்களாகவே திகழ்கின்றன. இவற்றில் தமிழ் மந்திரம் என்ற பெருமைக்குரிய நூல் தவயோகி திருமூல நாயனார் அருளிய திருமந்திரமாகும். இவரது நூலில் தர்மம், சமயம், தத்துவம் ஆகிய அனைத்தும் பேசப்படுகின்றது. ஆன்மீக வாழ்வில் சாதனைதான் முக்கிய இடம் பெறல் வேண்டும். ஆன்மா சாதனைகளின் ஊடாகப் பரம்பொருளின் பாதாரவிந்தங்களைப் பற்றிப் பிடிப்பதற்கு திருமந்திரம் ஒரு கலங்கரை விளக்காக அமைந்திருக்கின்றது. இந் நூல் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டும் வாழ்க்கை நூலாகும். இந் நூல் ஒன்பது தந்திரங்களாக வகுக்கப் பெற்றுள்ளது. இதில் ஏழாந்திருமந்திரத்தைப் பற்றி ஆய்வு செய்வதே இக் கட்டுரையின் நோக்கம். வேதாகமங்களிலே பேசப்படும் கொள்கைகளுக்கெல்லாம் இங்கே விளக்கம் தரப் படுகின்றது. ஏழாந்தந்திரம் முப்பத்தெட்டு உபதலைப்புக்களாகப் பிரிக்கப்பட்டு நானூற்றுப்பதினெட்டுப் (418) பாடல்களைக் கொண்டு விளங்குகின்றது.

ஏழாந்தந்திரத்தில் ஆறு ஆதாரங்கள் பற்றிய விளக்கங்களோடு அண்டலிங்கம் (உலகசிவம்), பிண்டலிங்கம் (உடற்சிவம்), சதாசிவலிங்கம் (உலக முதற் சிவம்), ஞானலிங்கம் (உணர்வுச்சிவம்), சிவலிங்கம் (சிவகுரு) ஆகிய ஆறு லிங்கங்களும் சமய சிறப்புப் போதனை, ஆன்மாவில் கலந்துள்ள சிவனுக்கு இயற்றும் வழிபாடு, குருவாகிய சிவனுக்கு இயற்றும் வழிபாடு, மகேசுரப் பூசை, அடியார் பெருமை, உணவுவிதி, பல்வகையான முத்திரைகள், பலவகைப்பட்ட யோகிகள் சிறப்பிற்குப் பின் அடையத்தகும் உலகங்கள், அவர்கள் தங்கள் உடல்களை விடும் முறை, இடகலை, பிங்கலை நாடிகள், புலன்களை அடக்கும் முறை, குருவின் தன்மை, கூடா ஒழுக்கம் முதலிய யாவும் விளக்கப்பட்டுள்ளன.

ஏழாந் தந்திரத்தின் ஆரம்பத்தில் ஆறு ஆதாரங்கள் பற்றி விளக்கப் படுகின்றது. உடலின் சூக்கும வடிவாகவுள்ள மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்ற ஆறு ஆதாரங்களைப் பற்றியும் விளக்கி இவ் ஆதாரங்களில் இறைவனைத் தியானித்து முறையே மேல்சென்று அப் பெருமானை அடையவேண்டும் என்பவற்றை இப் பகுதியில் வரும் பாடல்கள் விளக்கு கின்றன. பகவத் குணங்களான அவாவின்மை, ஈசுவதத் தன்மை, கீர்த்தி, செல்வம், ஞானம், வீரியம் ஆகியவற்றை இந் நெறியில் நிற்பவர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கூறப்படுகின்றது. சூக்கும உடம்பின் விளக்கமாக அமைவதே தூல உடம் பாகும். சூக்கும உடம்பின் பக்குவத்திற்கேற்பத் தூல உடல் அமையும்.

உலகமே சிவனை அடையாளமாக இலிங்க வடிவமாகக் காட்சி தருகின்றது. எட்டுத் திசைகளிலும் வியாபித்திருக்கும் அண்டலிங்கம் சிவமேயாகும். சிவன் நடத்த நிலையில் காட்சி தருகின்ற வடிவமே சதாசிவ வடிவமாகும். யோகம் முதல் வீடுபேறுவரை அனைத்தையும் அருளுவது சிவமேயாகும்.

"போகமும் முத்தியும் புத்தியும் சித்தியும்
ஆகமும் ஆறாறு தத்துவத் தப்பாலாம்
ஏகமும் நல்கி யிருக்குந் சதாசிவம்
ஆகம வத்துவா வாறுஞ் சிவமே"

– திருமந்திரம் 1714 –

போகத்தையும் வீடுபேற்றையும் அதற்குரிய ஞானத்தையும் அதன் பயனாகிய இன்பத்தையும் ஆன்மாக்களுக்குத் தருவது சதாசிவ வடிவமாகிய சிவ லிங்கமேயாகும். சிவலிங்க வடிவினனாகக் காட்சிதருதல் போலக் குண்டலினியாக இருந்தும் அருள் செய்வான்.

இலிங்கம் அமைக்கக்கூடிய பொருள்கள்.

முத்து, மாணிக்கம், பவளம், செதுக்கிய மரக் கொம்பு, கல், திருநீறு, மரகதம், சாதம், அரிசி, பூ, மலர் ஆகியவை சிவலிங்கம் அமைத்தற் குரிய பொருள்களாகும். கீழே தரப்படும் திருமந்திரப் பாடல் மேற்கூறிய பொருள்களால் சிவலிங்கம் அமைக்கலாம் என்பதை நமக்கு விளக்குகிறது.

"முத்துடன் மாணிக்கம் மொய்த்த பவளமும்
கொத்துமக் கொம்பு சிலைநீறு கோமளம்
அத்தன்றன் னாகம மன்ன மரிசியாம்
உய்த்ததின் சாதனம் பூமண லிங்கமே."

– திருமந்திரம் 1719 –

இவற்றோடு கட்டித்தயிர், நெய், பால், தூய்மையான பசுஞ் சாணம், விளக்கிய செம்பு, அக்கினி, பாதரசம், நன்றாக வெந்த செங்கல், வில்வம் பழம், அல்லது வில்வ மரத்தால் செய்யப்பட்ட இலிங்கம் ஆகிய பொருள் களிலும் இலிங்கம் அமைத்து வழிபடலாம்.

உடம்பே சிவலிங்கமாகும்.

சிவனுடைய அகண்ட வியாபகத்தை உணர்ந்தபோது சீவனது உடம்பே சிவனாரது கோயிலாக மாறுகிறது. மானிட உடம்பின் வடிவம் சிவலிங்கம் ஆகும். மானிடனின் உடலும், உடலைச் சூழவுள்ள பகுதியும் அறிவாகாயம் ஆகும். மானிடனின் உடல் சதாசிவ வடிவமாகிய சிவபெருமானின் உருவத்திருமேனியாகும். மானிடரின் உடம்பிலுள்ள அசைவெலாம் கூத்தப்பெருமானின் திருநடனமாகக் காட்சி தருகிறது. இங்கே கூறிய உண்மைகளை எல்லாம் கீழே வரும் பாடல் தெளிவாகக் காட்டுகிறது.

"மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானுட ராக்கை வடிவு சிதம்பரம்
மானுட ராக்கை வடிவு சதாசிவம்
மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே."

– திருமந்திரம் 1726 –

இறைவன் ஒலி வடிவாகவும் ஒளி வடிவாகவும் காட்சி தருவான் என்றே வேதங்கள் கூறுகின்றது. நாதப் பிரம்மமாய் இருக்கின்ற இறைவனை நாதோபாசனை மூலம் வழிபடலாம் என எமது சமயத் திருநூல்கள் கூறுகின்றன. சிவனுடைய அட்ட மூர்த்தங்களுள் ஒன்றாகிய சிவசூரிய வடிவத்தை பாட்டினால் 'நான் ப ்ணிய அவன் ஒலியினால் என்னுடன் ஒன்றியிருந்தான்' என்பதை,

"பணிந்தேன் பகலவன் பாட்டு மொலியே"

எனத் தவயோகி திருமூல நாயனார் தமது தமிழ் மந்திரத்திலே குறிப்பிடுகிறார்.

சிவஞானிகளின் உடம்பே சிவலிங்கமாகும். அவ் உடம்பே சதாசிவ மாகும். அவ் உடல் சத்தி சிவம் பொருந்திய சிவானந்த நிலையாகும். அவ் உடலே எல்லாவற்றிற்கும் ஒளிப்பிழம்பாக, சிவலிங்கமாகக் காட்சிதரும்.

"தன்மேனி தற்சிவ லிங்கமாய் நின்றிடுந்
தன்மேனி தானுஞ் சதாசிவ மாய்நிற்குந்
தன்மேனி தற்சிவன் தற்சிவா னந்தமாந்
தன்மேனி தானாகுந் தற்பரந் தானே."

– திருமந்திரம் 1750 –

எல்லாவற்றிற்கும் மேலானவனும் தந்தையைப் போன்றவனும் குளிர்ந்த பிறைச் சந்திரனைத் தன் தலையிலே சூடியவனும் உலகனைத்தையும் தாங்குபவனும் தனது அடியாரது மனமாகிய கோயிலின் உச்சியில் விளங்குபவனும் தேவர்களுடைய சிந்தையில் ஒளிமயமாக விளங்குபவனுமாகிய இறைவன் என் மனத்துள் நீங்காது எழுந் தருளியுள்ளான் என்பதைக் கீழே வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது.

"பராபரன் எந்தை பனிமதி சூடி
தராபரன் தன்னடி யார்மனக் கோயிற்
சிராபரன் தேவர்கள் சென்னியின் மன்னு
மராமரன் மன்னி மனத்துறைந் தானே."

– திருமந்திரம் 1760 –

ஞானலிங்கமாகிய ஒளி மயமான சதாசிவ வடிவத்தை அறியில் உலகமெல்லாம் அங்கு சூக்கும வடிவமாகத் தோன்றும். இவ் உலகில் என்றுமே சிரஞ்சீவியாக வாழும் பேறு கிடைக்கும். ஆன்மா இறைவனை உறுதியாகப் பற்றி னால் சிவம் நமது சிந்தையுள் விளங்கிக் காட்சிதரும்.

"பொழுந்தினைக் காணிற் குவலயந் தோன்றும்
எழுந்திடங் காணில் இருக்கலு மாகும்
பரந்திடங் காணிற் பார்ப்பதி மேலே
திரன்டெழக் கண்டவன் சிந்தையு ளானே."

– திருமந்திரம் 1769 –

குருவினுடைய அருட்பார்வை.

உடல், பொருள், ஆவி மூன்றையும் சீடன் நீரோடு தத்தஞ் செய்கின்ற பொழுது ஏற்றுக்கொண்டு வினைப் பயன் முழுவதும் அவனை விட்டு நீங்கும்படி தனது அருட் பார்வையைச் சீடன்மேல் செலுத்தி அவனுடைய சிரசிலே தனது கையை வைத்து திருவடி ஞானத்தைக் குரு சீடனுக்கு அருளுகின்றார்.

"உடல் பொருள்ஆவி உதகத்தால் கொண்டு
படர்வினை பற்றறப் பார்த்துக் கை வைத்து
நொடியின் அடிவைத்து நுண்ணுணர் வாக்கிக்
கடியப் பிறப்பறக் காட்டினன் நந்தியே."

– திருமந்திரம் 1778 –

அனுபவமின்றி வாய் ஞானம் பேசிக்கொண்டிருந்த என்னிடம் உள்ள குற்றங்களையெல்லாம் நீக்கி என்னையும் தன்னைப்போல எனது குருநாதன் ஆக்கினான். தனக்கும் குருவுக்கும் இடையே நடந்த பண்டமாற்று வியாபாரம் சிறப்பாக நடந்தது என்பதையும் குருவினது அருளால் குற்றம் எல்லாம் நீங்கித் தூய்மை உண்டாகும் என்பதையும் தவயோகி திருமூல நாயனார் தனது நிலைமையே சான்றாக வைத்து விளக்குகிறார்.

"பிட்டடித் தெங்கும் பிதற்றித் திரிவேனை
யொட்டடித் துள்ளமர் மாசெலாம் வாங்கித்
தட்டொக்க மாறினன் தன்னையும் என்னையும்
வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே."

– திருமந்திரம் 1781 –

ஆன்மா தன்னை அறிகின்ற உயர் நிலையை அடைந்துவிட்டால் இறைவனை அடைவதற்கான தடைகளை நீக்கி இறைவனை அடைந்து விடும். சிவனுடைய திருவருளால் உடற்பற்று நீங்கி, ஆன்மா சிவமாந்தன்மையை அடைந்து விடும். உயிர், பொருள், உடலின் கருவிக் கூட்டம் ஆகிய அனைத்தையும் நமக்குத் தந்த இறைவனே நம்மிடமிருந்து மீண்டும் பெற்றுக்கொள்வான். உடம்புள்ள போதே உடம்பின் இயல்பை உணர்ந்து தேகத்தை நீக்கிநிற்கும் ஆற்றலைப் பெற்றவன் ஞானியாகிறான். உடம்பையும் உயிரையும் பிரித்து அறியமுடியாமல் வாழ்பவர்கள் பேய் போல அலைபவர்கள் என்பதை,

"குறிக்கின்ற தேகமுந் தேகியுங் கூடி
நெறிக்கும் பிராணன் நிலைபெற்ற சீவன்
பறிக்கின்ற காயத்தைப் பற்றிய நேர்மை
பிறக்க அறியாதார் பேயுடன் ஒப்பரே."

– திருமந்திரம் 1785 –

என்று திருமந்திரப் பாடல் விளக்கி நிற்கின்றது. சிவனோடு சீவன் பிரிவின்றிக் கலந்துள்ளான் என்பதை உயர்ந்த சீவன் சிவமாந் தன்மையை எய்துதற்கு குருவினுடைய துணை வழிகாட்டி நிற்கிறது.

### திருவருளின் தன்மை.

ஞானத்தைத் துணையாகக் கொள்வோரது அறிவில் சிவன் நீக்கமறக் கலந்து நிற்பான். ஊன் உருகி இறைவனை உணர்கின்ற அடியவர்களுக்கு சிவன் பாசத்தை நீக்கித் திருவருளை அருளுவான். திருவருளானது சீவனின் தகுதிக்கேற்ப எல்லாவற்றையும் அருளும். ஆனந்தமே வடிவான சிவன் சீவனுள்ளே புகுந்தமையால் சீவனும் ஆனந்த வடிவாக, திருவருள் மயமாக மாறியது. கண்ணிலே ஒளியுள்ளவர்கள் காட்சிப் பொருள்களைக் காண்பது போல அருள் உடையவர்கள் இறைவனைக் காண்பர்.

ஞான விளக்கினை ஏற்றினால்தான் எல்லையில்லாப் பரம்பொருளை அறிய முடியும். இறைவனுடைய அருள் ஒளி ஆன்மாவில் படியுமானால் மலங்களாகிய உடம்பின் துன்பம் அனைத்தும் நீங்கும். பேரொளியை வெளிப்படுத்தும் ஒளியை உடையவர்கள் சிவனொளியும் தன்னொளியும் கலந்து விளங்குவார்கள் என்பதை,

"விளக்கினை யேற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே."

– திருமந்திரம் 1818 –

என்ற பாடல் நன்கு விளக்குகின்றது.

உள்ளமாகிய கோயிலே சிவன் வீற்றிருக்கும் கருவறையாகும். ஆலய அமைப்பு, ஆண்டவன் இருப்பு ஆகிய யாவும் நமது உடம்பிலேயே இருக்கின்றன. அன்பர்களின் குறிப்பறிந்து கொடுத்தருளும் இறைவனுக்கு வாயே கோபுர வாசல். நன்கு அறிந்த ஞானிகளுக்கு ஆன்மாவே சிவலிங்கமாகும். மனத்தை திருட்டு வழியில் இழுத்துச் செல்லும் புலன்கள் ஐந்தும் அழகிய பஞ்சவிளக்காகும். சீவனே சிவத்துடன் பொருந்தியபோது பெருஞ்சோதியாக அமையும் என்பதைக் கீழ்வரும் பாடல் நன்கு தெளிவாக்கி நிற்கிறது.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளித் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காள மணிவிளக்கே."

– திருமந்திரம் 1823 –

ஒளி வடிவில் எங்கும் உள்ள சிவத்தை வழிபடும் முறையைக் கூறும் பகுதி குரு பூசையின் கீழ் வருகிறது. குருமண்டல பூசை குரு பூசை எனப்பட்டது.

சிறந்த சந்தனக் கட்டையாலாகிய சாந்தாலும் சிறந்த மலர்களாலும் வழிபட்டாலும் உடற் பற்றை நீக்காவிட்டால் இறைவன் திருவடியை அடைய முடியாது.

"காணுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுற மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி யுணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே."

— திருமந்திரம் 1848 —

மகேசுர பூசை.

நடமாடும் கோயிலாகவுள்ள அடியவர்களுக்கு செய்யும் பூசை படமாடும் கோயிலுக்குச் செய்யும் பூசையாகும். ஆண்டவனுக்கு ஈவதை அடியார்களுக்கு ஈந்தால் அது ஆண்டவனையே சாரும்.

"படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயிற் பகவற்க தாமே."

—திருமந்திரம் 1857 —

தானங்களில் சிறந்த தானமாக அன்னதானம் போற்றப்படுகிறது. நிறைஞானிகளுக்கு உணவளிப்பது தானங்களில் எல்லாம் சிறந்த தானமாகும். அந்தணர் வாழ்வதற்குப் பல குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதாலேயோ பல ஆயிரம் கோயில்களைக் கட்டி முடிப்பதாலேயோ ஏற்படுகின்ற பயன்பாட்டிலும் பார்க்க ஞானிகளின் பசிப் பிணியைப் போக்குவது தர்மங்கள் அனைத்திலும் உயர்ந்த தர்மங்கள் என்பதே தவயோகி திருமூல நாயனாரின் கருத்தாகும். இக் கருத்தைப் பின்வரும் அவருடைய பாடல் உறுதிசெய்கின்றது.

"அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம் ஆயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை என்பது நிச்சயந் தானே."

— திருமந்திரம் 1860

சிவனடியாரைச் சிவன் எனவே கருதி வழிபடில் வினைகள் அனைத்தும் நம்மைவிட்டு நீங்கிவிடும். சிவனடியார்கள் உண்ட ஊணின் மீதியை உண்டாலே நமக்கு முத்தி கிடைத்துவிடும். மகேசுவரர்களாகிய சிவனடியார்களுக்குச் செய்யும் தொண்டு சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் ஆகிய மூன்று வினைகளையும் நீக்கி ஞானத்தைக் கொடுக்குந் தன்மை வாய்ந்தது. சிவனடியார் சிவத்தையே நாடியிருத்தலின் அவர்களை நாடுபவர்களும் சிவனையே அடைவார்கள். உடம்பைச் சிவாலயமாகக் கருதும் அடியார்கள் உண்ணும் உணவை அமிர்தமாகப் போற்றுவர்.

**ஞானிகளின் நிலை.**

வாக்கும் மனமும் தொழிலின்றி இருத்தல் மௌன நிலையாகும். வாய் மட்டும் பேசாதிருந்தால் நாம் ஊமையாகிவிடுவோம். வாக்கோடு மனமும் தொழிற்படாதவர்களே தூய்மை உடையவர்களாவர். சிவயோகமும் சிவஞானமும் கைவரப்பெற்றவர்கள் தேவராலும் போற்றப்படுவர். சிவயோகம் கைவரப் பெற்ற சிவஞானிகள் மௌனச் சமாதியில் தங்கி வீடுபேறடைவார்கள். உடலுடன் பொருந்தி மும்மலங்களையும் விட்டவர்கள் சிவப்பேறு பெற்ற சித்தராவர்.

**சமாதி வைத்தல்.**

சிவப்பேறு பெற்ற ஞானியின் உயிர் நீங்கிய பின்பு உடலை எரிக்கக் கூடாது. ஞானியின் உடல் சமாதி செய்யப்பட வேண்டும். ஞானியின் உடலை எரிப்பது சிவஞானத்தைத் தீயினால் கொழுத்துவதை ஒக்கும். இப்படிச் செய்தால் வானம் வறண்டு பஞ்சம் தலைவிரித்தாடும். ஞானியின் உடலை திருவெண்ணீற்றுக் கவசமிட்டு மலர் முதலியவை அணிவித்து சமாதிக் குகையுள் வைக்க வேண்டும். ஞானியின் சமாதியின் மேல் சிவலிங்கம் அல்லது அரசமரம் வைத்து வழிபடல் வேண்டும்.

**உணவும் குணமும்.**

நாம் உண்ணும் உணவிற்கேற்பவே நமது உடலின் தன்மை தோன்று கிறது. உணவின் தன்மைக்கேற்ப உடலோடு உள்ளமும் அமைகிறது. சாத்வீக உணவை உண்பவர்களுக்கு நல்ல உடல் உறுதியும் மன அமைதியும் கிடைக்கும். மனம் ஒரு நிலைப்பட்டாலே ஆன்மா இறையருளைப் பெற முடியும். பிற உயிரின் ஊனை உண்டு தனது ஊனை வளர்ப்பவர்களிடம் இராஜத குணம் மேலோங்கி நிற்கும். புளிப்ப டைந்த உணவை உண்பவர்களிடம் சோம்பலோடு கூடிய தாமசகுணம் மேலோங்கி நிற்கும்.

**விந்துவின் தோற்றமும் விந்துவைக் காத்தலும்.**

தூல விந்து கெடாமல் பாதுகாத்தவருக்கு இறைவன் அவர்களுடைய இதயத்திலே நின்று நடனம் புரிவான். சிவத்தை நாடிச் செல்வோருக்கு விந்து செயமும், மாயப் பொருள்களை நாடி அடைவோருக்கு விந்து நீக்கமும் உண்டாகும். தன்னிடமிருந்து அழிகின்ற விந்துவின் அளவையும் அறியாமல் தன்னைக் காத்துக் கொள்ள வும் தெரியாமல் மானிடர்கள் அனைவரும் தவிக்கிறார்கள். விந்து நீக்கம் நமக்கு அழிவையே தரும்.

"அழிகின்ற விந்து அளவை அறியார்
கழிகின்ற தன்னையுட் காக்கவுந் தேரார்
அழிகின்ற காயத் தழிந்தயர் வுற்றோர்
அழிகின்ற தன்மை யறிந்தொழி யாரே."

— திருமந்திரம் 1936 —

விந்துவைக் காத்தால் யோகியாகலாம். யோகியும் ஞானியும் சித்தர்களும் விந்து சக்தியை வென்ற வீரர்களாவர். விந்துவை அழித்தவர்கள் குண்டலினி மேலெழும் இன்பத்தை அறியமாட்டார்கள்.

**சிவசூரிய விளக்கம்.**

அண்டத்தில் விளங்குஞ் சூரியன், உடம்பில் விளங்குஞ் சூரியன், மன மண்டலத்தில் விளங்குஞ் சூரியன், ஞான சூரியன், சிவ சூரியன் எனச் சூரியன் பல் வேறு நிலைகளில் காட்சி தருவான் என்று விளக்கப்படுகின்றது. ஒளித்தன்மை உடைய சூரியன் முதலாய தெய்வங்கள் எல்லாம் சிவத்தை வழிபட்டே ஒளியைப் பெற்றார்கள். கண்ணால் காணும் தெய்வமாகிய சூரியன் எவ்வாறு உலகம் முழு வதற்கும் ஒளியை வழங்குகின்றதோ அவ்வாறே அண்டலோகத்தில் விளங்கும் ஆத்ம சூரியன் சிவமாகவும் சக்தியாகவும் உலகனைத்திற்கும் நன்மையைச் செய்கிறான். காமசெயம் பெற்றவர்கள் பேரண்டத்தில் விளங்கும் ஒளியை அறியும் தன்மையைப் பெறுவார்கள். சிவஒளிக்கு மாறுபட்ட பாச இருளும் அதனால் விளையும் அஞ்ஞா னமும் சிவம் பிரகாசித்ததும் ஆன்மாவை விட்டு நீங்கிவிடும். சிவ சூரியனின் முன்பு அஞ்ஞானத்தின் ஆற்றல் முற்றாக அழிந்துவிடும்.

**ஆன்மாவின் தன்மை.**

ஆலம் விதையில் படர்ந்து வளரும் மரத்துக்குள்ள அத்தனையும் அடங்கி இருத்தல் போல ஆன்மாவின் பாசங்களும் பாச நீக்கத்திற்குரிய தன்மைகளும் அடங்கி இருக்கின்றன. ஆன்மாவில் சிவனும் சிவனில் ஆன்மாவும் விரிவின்றிக் கலந்திருத்தலை உணர்ந்தவர்கள் அவனது வியாபகத்தை உணர்வார்கள். ஒப்பற்ற இறைவன் எங்கும் நிறைந்து எல்லாப் பொருட்களையும் இயக்குகிறான்.

"அணுவுள் அவனும் அவனுள் அணுவுங்
கணுவற நின்ற கலப்பது உணரார்
இணையிலி யீச னவனெங்கு மாகித்
தணிவுற நின்றான் சராசரந் தானே."

— திருமந்திரம் 2010 —

ஆன்மா தான் செய்யும் தவத்தின் தன்மைக்கேற்பவே இறைவனை அடைய முடியும். குருவுபதேசத்தால் இப்பிறவியில் யோக சித்தி உண்டாகும்.

**அனுபூதி ஞானத்தின் சிறப்பு.**

வேதஆகமங்களை வெறும் ஏட்டுப் படிப்பாகப் படித்துவிட்டு அனுபூதி ஞானம் சிறிதுமில்லாமல் புலம்புவதால் எதுவித பிரயோசனமும் இல்லை. அரச போகங்களை அனுபவிப்பவர்கள் விருதுகளைக் கட்டிக்கொண்டு பலதும் தெரிந்தவர்கள் போலத் தம்மைக் காட்டிக் கொண்டாலும் இவர்களுடைய வார்த்தைகளால் எவ்வித

பயனும் ஏற்படப் போவதில்லை. முதிர்ந்த அனுபவம் உடையவர்களது ஒரு சிறிது ஞானமே உலகம் முழுவதற்கும் ஒளிவிளக்காகப் பயன்படும் என்ற உண்மையை கீழ் வரும் பாடல் விளக்குகின்றது.

"கற்ற பசுக்கள் கதறித் திரியினுங்
கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினு
முற்ற பசுக்கள் ஒரு குடம் பால்போது
மற்றைப் பசுக்கள் வறள்பசு தானே."

சிவஞானத்தை அனுபவத்திற் கண்ட சீவர்கள் சிவமாகிவிடுவார்கள். உயிர் சீவத் தன்மையில் இருக்கும்வரை சிவனைக் காணமுடியாது. சீவத் தன்மை மாறி உண்மையான ஞானத்தைப் பெற்ற பின்பு சீவன் சிவமாகிவிடும்.

"சீவ னெனச்சிவ னெனவே றில்லை
சீவ னார்சிவ னாரை யறிகிலர்
சீவ னார்சிவ னாரை யறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே."

– திருமந்திரம் 2017 –

தில்லையிலே நடமாடும் கூத்தப்பெருமான் உயிர்க் கூட்டத்திற்கு ஒளியைத் தரும் மேற்பார்வையாளன் ஆவார். நல்லறிஞர்கள் இறைவனின் திருவருட் கடாட்சத்தை உணர்வார்கள்.

**இந்திரியங்களை அடக்கும் முறை.**

மிகவும் மதம் பொருந்திய ஐந்து இந்திரியங்களாகிய யானைகள் நமது அகத்தே உள்ளன. நமது இந்திரியங்கள் செம்மையாகச் செயற்படும்போதே ஆன்மா யோகம் செய்தல் வேண்டும். இந்திரியங்கள் யாவும் செயலற்ற பின்பு செய்யப்படும் யோகம் எதுவும் சித்தியாது. இந்திரியங்கள் புறத்தே சென்று பற்றும் வாய்ப்பை அடக்குவது மிகச் சிரமமானது. உடம்பாகிய கட்டிலுள்ள இந்திரியங்களாகிய சிங்கங்கள் ஐந்தும் புறப் பொருள்களையே பற்றி நிற்கிறது. உலக விஷயங்களைப் பற்றி நிற்கும் மனத்தையும் விஷயங்களில் ஈடுபடும் கருவிகளையும் தடுத்துவிட்டால் ஆன்மா இறைவனை இலகுவில் அடைய முடியும்.

ஐந்திரியங்கள் ஐந்தையும் அடக்குவதால் எவ்வித பிரயோசனமும் இல்லை. அவற்றை அடக்கிவிட்டால் நாம் அறிவற்ற சடப்பொருள்களாகிவிடுவோம். எனவே ஐந்தையும் அடக்காது இயங்கச் செய்து அறிவு மயமான சிவத்தை அறிவினால் நாடுவதே சிறந்த உபாயமாகும்.

"அஞ்சு மடக்கடக் கென்பர் அறிவிலார்
அஞ்சு மடக்கும் அமரரும் அங்கில்லை
அஞ்சு மடக்கில் அசேதன மாமொன்றிட்
டஞ்சு மடக்கா அறிவறிந் தேனே."

– திருமந்திரம் 2033 –

மனம் சிவத்தைப் பற்ற உலகத்தைப் பற்றிய சிந்தனை சுருங்கிவிடும். நமது கருவி கரணங்கள் அனைத்தையும் சிவன்பால் செலுத்திவிட்டால் உலகப் பொருள்கள் அனைத்தும் நீர்மேல் எழுத்துப் போல அழிவனவாகத் தோன்றும். புலன்களின் மேல் செல்லும் விருப்பம் விடுபட்டு விடும். மலை போன்ற துன்பம் வந்தாலும் தாங்கும் பக்குவம் ஆன்மாவிற்கு ஏற்பட்டுவிடும்.

சன்மார்க்கம் அறியாத குரு.

சிவ உணர்வு இல்லாத மூடனும் உண்மைப் பொருளை ஆராயாதவனும் வேதாகமங்கள் உணர்த்தும் நெறியினைக் காணாதவனும் அடக்கமில்லாதவனும் பிறரை நிந்திப்பவனும் உடற்பற்றுடையவனும் சற்குருவாகமாட்டார்கள். நன்மை தீமைகளை அறியாதவன் மூடன் என்றால் இவற்றை அறிந்துகொண்டு செய்பவனை அதி மூடன் என்றே திருமூலநாயனார் குறிப்பிடுகின்றார். உலகபோகத்தில் திளைத்திருப்பவர்கள் ஒருபோதும் நல்ல குருவாக மாட்டார்கள். சிவத்தியானமும் உலக போகமும் ஒன்றுக்கொன்று முரண் ஆனவை.

இரண்டு கண்ணிலும் பார்வை ஒளி இல்லாத குருடனுக்கு இன்னொரு குருடன் பாதை காட்ட முற்பட்டால் இருவரும் படுகுழியில் விழும் நிலை ஏற்படும். இவ்வாறே ஞானத்தை உணராத சீடரும் அசற்குருவோடு சேர்ந்து இருவருமாக அஞ்ஞான இருளில் வீழ்வர்.

"குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லுங் குருடர்
முரணும் பழங்குழி வீழ்வர்கள் முன்பின்
குருடரும் வீழ்வர்கள் முன்பின் அறவே
குருடரும் வீழ்வார் குருடரோ டாகியே."

- திருமந்திரம் 2048 -

உண்மையை உணர்த்தும் குரு.

உண்மையான சற்குருவானவர் சீடனது பாசத்தை நீக்கி அவனுக்கு ஞானத்தை அருளுவார். சீடனின் வினைகளைக் களைந்து பிறவித் துன்பத்தை நீக்குவார். சிவானுபவம் ஏதும் இல்லாது வாய்வாதம் பண்ணுவோர் உண்மையான குருவாகமாட்டார்கள். சீடனது குணத்தை அறிந்து மெய்ப்பொருளை உணர்த்த வல்லவனே உண்மையான குருவாவான். சற்குருவினுடைய திருவடிதீட்சையைப் பெற்றவர்கள் மும்மலங்களும் நீங்கிச் சிவகதி அடைவர்.

சத்தாகிய சிவத்தையும் அசத்தாகிய மாயையும் சதசத்தாகிய ஆன்மாவினதும் இயல்புகளை உணர்த்தி ஆன்மாவையும் முப்பத்தாறு தத்துவங்களையும் சிவத்தோடு சேர்த்து இன்ப வடிவான பிரணவ உபதேசம் செய்யும் தலைவனே அருட்குரு என்று போற்றப்படுகிறான், என்பதைக் கீழ்வரும் திருமந்திரம் காட்டுகிறது.

"சத்தும் அசத்துஞ் சதசத்துந் தான்காட்டி
சித்தும் அசித்துஞ் சிவபரத் தேசேர்த்துச்
சுத்த மசுத்த மறச்சுக மானசொல்
அத்தன் அருட்குரு வாமவன் கூறிலே."

– திருமந்திரம் 2058 –

பரமசிவமாகிய குரு பாசத்தையும் இருளையும் போக்கி ஒளியாக வீட்டின்பத்தினை நல்குவான்.

## ஆன்மாவின் வஞ்சகச் செயல்களும் அதன் விளைவுகளும்.

இறைவன் எல்லா இடமும் நீக்கமற நிறைந்திருக்கின்றான். என்பதை உணராத ஆன்மாக்கள் தாம் செய்யும் நன்மை தீமைகளை மேற்பார்வை செய்கின்ற அதிகாரி இல்லை என்ற காரணத்தினால் பலவிதமான வஞ்சகச் செயல்களைச் செய்வார்கள். எல்லாவற்றையும் மேற்பார்வை செய்யும் கங்காணியாகிய இறைவன் இல்லாத இடமே இல்லை. எங்கும் எதிலும் நிறைந்திருக்கின்ற இறைவனின் வியாபகத் தன்மையை உணர்ந்தவர்கள் தீமையினின்றும் விலகியே வாழ்வார்கள்.

"கங்காணி யில்லென்று கள்ளம் பல செய்வார்
கங்காணி யில்லா விடமில்லை காணுங்கால்
கங்காணி யாகக் கலந்தெங்கு நின்றானைக்
கங்காணி கண்டார் களவொழிந் தாரே."

– திருமந்திரம் 2067 –

மெய்ப்பொருளை சிவத்தை உணர்ந்திருந்தால் நம்மை இறைவன் விண்ணோரும் தொழும்படி செய்வான். பக்தியை விலைபேசி விற்றுண்டு பொழுதைக் கழிப்பவர்களுக்குப் பிறவி நோய் தீராது. பொருட்பித்து உடையவர்களுக்கு பிறவி நோய் தொடரும். இறைப்பித்து உடையவர்களுக்குப் பிறவி நோய் நீங்கும். கற்றோரும் மற்றோரும் அநுபவமின்மையால் இறைவனை உணரமாட்டார்கள்.

காமத்துக்குக் காரணமான கன்னியர் வலையில் வீழ்ந்து ஒரு பகுதியினர் சிறைப்படுவர். வேதங்களை ஓதுபவர்கள் ஒருவகையிலும் உடலை வருத்தித் தவம் செய்பவர்கள் இன்னொரு வகையிலும் சிறைப்படுவார்கள். இறை அநுபவம் இன்றித் தன்னையுந் தலைவனையும் உணர முற்படுகிறவர்கள் இன்னொரு வகையிலும் சிறைப்பட்டவர்கள் ஆவர். இவர்கள் வெவ்வேறு வலைகளில் சிக்குப்பட்டு இறைவனை அடைய முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

"கன்னி யொருசிறை கற்றோர் ஒருசிறை
மன்னிய மாதவஞ் செய்வோர் ஒருசிறை
தன்னையுந் தன்னை யுணர்ந்தோர் ஒருசிறை
என்னிது ஈசன் இயல்பறி யாரே."

– திருமந்திரம் 2073 –

வாழ்நாள் உள்ளபொழுதே வினையை நீக்கிக்கொள்ள உணராது பாவிகள் கெடுகிறார்கள். அறிவில்லாதவர்கள் இறைவனை நினைந்து போற்றிக் கெடுகிறார்கள். பெறுதற்கரிய மானிடப் பிறப்பை இறையருளால் பெற்றிருந்தும் விலங்கினைப் போன்று மக்கள் பிறவியின் மாண்பினை உணராது வாழ்கிறார்கள். உடற்பலம் உள்ள காலத்திலே யோகப் பயிற்சி செய்து வந்தால் உடம்புக்கு நரை, திரை, மூப்பு எதுவுமே உண்டாகாது.

**உயிருக்கு உறுதி பயக்கும் நன்மொழிகள்.**

இறக்கும் காலத்திலும் இறைவனை நினைக்க வேண்டும். இறைவனை இடைவிடாது எண்ணுவதோடு முடிந்தளவு அவனது தன்மையையும் இயம்ப வேண்டும்.

சாதி, சமய, இன, மொழி வேறுபாடுகள் எதுவுமின்றி நோக்கு வார்க்கு மனிதஇனம் அனைத்தும் ஒன்றாகவே காட்சிதரும். பிறப்பால் எல்லா மனிதர்களும் ஒன்றாகவே இருக்கின்றார்கள். தெய்வங்களும் பல இல்லை, ஒன்றே ஆகும். நல்லனவற்றையே சிந்தித்து இறைவனையும் நமது உள்ளத்தில் நிறுத்திவிட்டால் இயமபயமே நமக்கு வாழ்வில் ஏற்படாது. நம்மை அழைத்துச் செல்ல இயமன் வரமாட்டான். என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகின்றது.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே."

– திருமந்திரம் 2104 –

வீடுபேற்றை நல்கும் ஞானமயமான சிவத்தை அகத்தே கண்டு வழி படவேண்டும். சற்குரு வழிபாடே சிவகதியை அடைவிக்கும் சிறந்த சாதனமாகும். "நீ அது ஆகிறாய்" (தத்துவமசி) என்ற உபநிடத வாக்கிற்கு அமைய ஆன்மா பரம்பொருளாக மாறிவிடுகிறது. இவ்வாறானதொரு உயர்நிலை குருவருளால் சீடனுக்கு ஏற்பட்டுவிடும். சிவனே குருவாக எழுந்தருளிவந்து நமது வினைகளை நீக்குவார்.

**ஏழாந் தந்திரத்தின் சாரம்.**

தமிழ் மூவாயிரம் என்ற திருமந்திர நூல் ஒன்பது தந்திரங்களால் அமைந்தது. ஒன்பது தந்திரங்களும் ஒன்பது ஆகமங்களாகிய காரணம், காமிகம், சிந்தம், வாதுளம், காலோத்தரம், சுப்பிரபேதம், மகுடம், வியாமளம் என்ற நூல்களின் சாரமாகும். சதாசிவ நாயனாரால் வெளியிடப்பெற்ற ஆகமங்கள் இருபத்தெட்டில் ஒன்பது ஆகமங்களே நந்தியம் பெருமானுக்குக் கிடைத்திருக்கின்றன. நந்தியப் பெருமானின் குருகுலத்தில் கல்வி பயின்ற திருமூலரும் அந்த ஒன்பது ஆகமங் களின் சாரத்தையே ஒன்பது தந்திரங்களாக வகுத்துத் திருமந்திரமாக அருளியுள்ளார். இதில் கலோத்தர ஆகமத்தின் சாரமாக அமைவதே ஏழாந் தந்திரம்.

மெய்கண்ட சாஸ்திரங்கள் தோன்றுவதற்கு முன்பு தமிழ் நாட்டில் அறிவு நூலாகத் திகழ்ந்தது திருமந்திரமே. தமது புகழை தமிழிற் புலப்படுத்து மாறே இறைவன் தன்னைப் படைத்தார் என்பதை,

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே."

- திருமந்திரம் 81 -

என்ற அவரது வாக்கால் அறிய முடிகிறது. திருமந்திரம் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய புருஷார்த்தங்கள் நான்கையும் விளக்கி நிற்கிறது. பலவகைக் கலைஞானங்களுக்கும் மூலாதாரமாக இருக்கிறது. இந்நூல் உலகப் பொது நூலாகவும் நம் செந்தமிழ்ச் சைவ உலகிற்குச் சிறப்பு நூலாகவும் விளங்குகிறது. ஏழாந் தந்திரத்தில் ஆறாதாரங்களின் விளக்கமும் கூறப்படுவதுடன் உலகத்தை அண்டலிங்கம் எனவும் மானுடயாக்கையைப் பிண்டலிங்கம் எனவும் சதாசிவ மூர்த்தியைச் சதாசிவலிங்கம் என்றும் ஆத்மாவை ஆத்மலிங்கம் எனவும் சதாசிவ நிலையைக் கடந்து விளங்கும் சோதியை ஞானலிங்கம் என்றும் மூலாதாரம் முதல் ஆக்ஞை வரையுள்ள ஒளியைச் சிவலிங்கம் எனவும் வகைப்படுத்தி திருமூலதேவர் தனது திருமந்திரத்தில் காட்டுகிறார். இறைவன் குருவாக எழுந்தருளித் தீட்சை செய்த லையும், அருட்சக்தி ஆன்மாமீது பதிதலையும் தொடர்ந்து விளக்குகிறார். சிவபூசை என்ற பகுதியில் சிவத்தை எவ்வாறு வழிபடவேண்டும் என்பது விளக்கப்பட்டுள்ளது. சிவனை ஒளிவடிவில் வழிபடுவது சிவபூசையாகும். சிவனடியாரைச் சிவனென வழி படுதல் மகேசுவர பூசையாகும். அடியார்கள் தமது உடம்பு சிவன் வீற்றிருக்கும் ஆலயம் என்றெண்ணி அதனைப் பேணுவார்கள்.

சிவனடியார்களிடம் முத்திரையால் மனவோட்டமும் பிராணவோட்டமும் நிற்கும் நிலையை நன்றாக விளக்குகின்றார். ஞானிகள் சமாதியில் தங்கி மோனமாய் நிற்கும் நிலையை பூரண குகைநெறிச் சமாதி என்ற தலைப்பில் கூறுகிறார். பிண்டத் துக்காரணமான விந்துவைக் காப்பாற்றினால் பல்லூழி காலம் வாழலாம் என விளக் குகிறார். அண்டத்தில் விளங்குஞ் சூரியன், பிண்டத்தில் விளங்குஞ் சூரியன், மனமண் டலத்தில் விளங்குஞ் சூரியன், ஞானமேயாகவுள்ள சூரியன், சிவசூரியன் என ஐந்து வகையாக விளங்குகிறார். சீவன் கட்டுப்பட்ட நிலையில் பசு என்றும், அகண்ட அறிவியல் நிலையில் போதன் என்றும் விளக்குகிறார். மனத்தைச் சிவன்பால் வைத்தி ருந்தால் இந்திரியங்களை அடக்கலாம் என்பதையும் விளக்குகிறார். இந்திரிய அடக் கத்தின் அருமையும் பெருமையும் இங்கே சிறப்பித்துப் பேசப்படுகின்றது.

குருவின் இலக்கணத்தையும் தகுதியையும் ,விளக்கிச் சீடனது பக்குவத்தை அறிந்து உணர்த்த வல்லவனே சற்குரு எனவும், அக் குருவின் உபதேசமே உயிர்க்கு உறுதி பயப்பதென்றும் அவ் உபதேச வழி நிற்றலே ஞானத்தைப் பெறுதற்கு மார்க்கம் என்றும் தவயோகி திருமூல நாயனார் இத்தந்திரத்தினூடாகத் தெளிவாக விளக்குகிறார்.

**திருமூல தேவர் திருவடிகள் வாழ்க.**

திரு. சிவ. மகாலிங்கம் B.A - Dip - in - Ed (விரிவுரையாளர் பலாலி ஆசிரிய கலாசாலை

# திருமந்திரத்தில் அருள் நுகர்வு

திருமந்திரம் என்னும் தத்துவஞானக் கருவூலம் சைவத்தை, உண்மையை, விரிவாக எடுத்துக் கூறுகின்றது. சிவமெனும் செம்பொருளை யோகத்தினாலும் ஞானத்தினாலும் உடலுயிர் நுகர்வாலும், தத்துவங்களினாலும் எவ்வெவ்வாறு அருள் நுகர்வாக அநுபவிக்கலாம் என்பதனை எடுத்து விளக்கும் செந்தமிழ்ப் பனுவல் திருமந்திரமாகும். இந்நூல் தோத்திர நூலாகவும், சாத்திர நூலாகவும் மிளிரும் சிறப்புடையது. இது பத்தாவது திருமுறைச் செல்வமாகும்.

இவ்வாய்வுக் கட்டுரை திருமந்திரத்தில் 'எட்டாந்தந்திரம்' பற்றியது. இதில் மொத்தம் 526 திருபாக்கள் உள. இதில் உடலிற்பஞ்சபேதம், உடல்விடல், அவத்தை பேதம் – கீழாலவத்தை, அத்துவாக்கள், சுத்த நனவாதி பருவம், கேவல சகல சுத்தம், பராவத்தை, முக்குணநிர்க்குணம், அண்டாதி பேதம், பதினொராந்தானமும் அவத்தையெனக் காணல், கலவுசெலவு, நின்மலாவத்தை, அறிவுதயம், ஆறந்தம், பதி.பசு.பாசம் வேறின்மை, முப்பதம் முப்பரம், பரலட்சணம், முத்துரியம், முச்சொருபம், முக்கரணம், முச்சூனிய தொந்தத்தசி, காரிய காரண உபாதி, உபசாந்தம், நவாவத்தை நவாபிமானி, புறங்கூறாமை, அஷ்டதள கமல முக்குண அவத்தை, சுத்தாசுத்தம், மோட்ச நிந்தை, இலக்கணாத்திரயம், தத்துவமசிவாக்கியம், வாய்மை, ஞானிசொல், அவாவறுத்தல், பத்தியுடைமை, சோதனை எனும் பகுதிகள் உண்டு.

திருமூலர் யோக சிரேஷ்டர். அவரது திருப்பாடல்கள் அனைத்தும் தூய மந்திரங்களேயாகும். 'மந்திரம்' என்பது உள்ளமும், உடலும், சிந்தனையும், செயலும் 'ஒருமை'யடைந்து தியானத்தின் வழி குவிக்கொள்ளொன்றுடன் சங்கமமாக்கும் சாதனம் என்று விளக்குதல் பொருந்தும். எங்கும் வியாபிதமாகப் பரந்து செறிந்துள்ள பேரருளைத் தம்முட் காணுவதற்கு முயலும் உபாயங்களையேஅருள் நுகர்வு உபாயம் என்கிறோம். பசுவின் பாலை அதன் மடியிலிருந்து பெறுவதுபோல, இறைவனது பேரருளைச் சிவாலயங்களிலே பக்தி செலுத்திப் பெறும் வழிபாட்டு மரபு ஒருபுறம் அமைய, ஞானிகளும் சித்தர்களும் ரிஷிகளும் தமக்குள்ளேயே 'மனத்தின் ஒருநிலைத் தியானத்தின்' மூலமாக அருள் நுகர்வநுபவத்தையுணர்ந்து அதனைப் பிறருக்கும் உணர்த்தியுள்ளார்கள் என்பதனைத் திருமந்திரம் தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

திருமந்திரம் உடலினைக், 'காயப்பை' என்று அழைக்கின்றது. 'காயம்' 'காயகல்பம்' என்பது சில நோய்களுக்கு மருந்தாகின்றது. அதிலே பலவகையான மருந்துச் சரக்குகள் இட்டு மருந்தாக்கிக் கொடுப்பார்கள்.. எட்டாந் தந்திரத்தின் முதற்பாடல் 'காயப்பை யொன்று சரக்குப் பலவுள' என்று அற்புதமாகக் குறிப்பிடப்படுகின்றது. தேடல் முயற்சியால் அருள் நுகர்வினை எவ்வாறு அநுபவிக்கலாம் என்பதனைத் திருமந்திரம் செப்புகின்றது.

'......காயப்பைக்குள் நின்ற கள்வன் புறப்பட்டால்
மாயப்பை மண்ணா மயங்கிய வாறே'

உடலே ஆலயம் என்றுரைக்கும் திருமந்திரம் பஞ்ச பூதங்களாலானதாக அதனை 'அத்தன் அமைத்தான்' என்று குறிப்பிட்டு,

'.....சத்த பரிச ரூப ரச கந்தம்
புத்தி மானாங் காரம் புரியட்ட காயமே'

எனக் கூறும்.

மேனி, மெய், உடல், காயம், காயப்பை, மாயப்பை என்றெல்லாம் இவ்வுடம்பு அழைக்கப்படுகின்றது. 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்று பிறிதோரிடத்தில் குறிப்பிடும் திருமூலர் உடலிலுள்ளவற்றைப் பின்வரும் செய்யுளிலே குறிப்பிடுகின்றார்.

'இரதம் உதிரம் இறைச்சி தோல் மேதை
மருவிய அத்திலமும் பொரு மச்சை
பரவிய சுக்கிலம் பாழாம் உபாதி
உருவ மாலா வுடல் ஒன்றெனலாமே'.

உடலும் உயிரும்கூட, அருள் நுகர்வினை அறியாததாயிருப்பதனையும், எவருமே அறியாத மலர்ப் பாதமான திருவடிப் பெருமையினைத் தேடும் பக்குவம் ஏற்பட்டால் அருளை நுகர முடியும். சிவனாகிய கள்வனைச் சீவனாகிய உயிரும் உடலும் இணைந்து தேடவேண்டும். உடம்பின் வரலாறு யார் தான் அறிவார்? உயிரின் வரலாறும் யாரறிவார்? இந்த நிலையைத் திருமந்திரம் பின்வருமாறு கூறும்.

'ஆரே அறிவார் அடியின் பெருமையை
யாரே அறிவார் அங்கவர் நின்றது
யாரே அறிவார் அருபத் தெட்டாக்கையை
யாரே அறிவார் அடிக் காவலானதே.'

உயிர்க்குறிதி பயப்பது சிவனது திருவடி மலர்கள் என்பது இதன் பொருள். அருளை நல்குபவர் குரு. இதனாலேயே குரு, லிங்க, சங்கம வழிபாட்டு மரபு சைவநெறியில் சிறப்பிடம் பெறுகின்றது. ஆனால், உயிர்கள் மல பந்தத்தினாலும், பிற மாயைகளினாலும் திருவருளை — அருள் நுகர்வனுபவத்தை அறிவதில்லை.

அரனருளே உடலின் தோற்றத்திற்கு ஆதாரம். நாகமானது உடலிலிருந்து தோலைக் கழற்றிடும் தன்மைபோல, உயிரானது உடலாகிய தோலைக் கழற்றி விட்டுச் 'சென்றேகுமிடஞ் சென்றிடு பயன் அடையும்' என்று குறிப்பிடுகின்றார் திருமூலர்.

'நாக முட்டுரி போது நல்லண்டச
மாக நனாவிற் கனா மறந்தல்லது
போகது மாறும் அரனருளாலே சென்
றேகு மிடஞ் சென்றிடு பயன் உன்னுமே.'

ஆன்மா வர்க்கங்களைப் பாகுபடுத்துப் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்று கூறுவர். மலபந்தங்களை வைத்துக் கொண்டே இப்பாகு அமைக்கப்பட்டுள்ளது. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் அவை பொருந்தியுள்ள பொருத்தப்பாடு கருதியே உயிர் வர்க்கம் தத்துவ தரிசனத்தில் பாகுபடுத்தப்பட்டுள்ளது.

திருமந்திரம் ஞானிகளது தன்மையைப் பின்வருமாறு புகலும். 'ஞானிக்குக் காயம் சிவமே..' அஞ்ஞானம் மெய்ஞானம் என்று பாகுபாடு செய்து 'மெய்ஞானத்தோர்க்குச் சிவதனு மேவுமே'. என்று திருமந்திரம் கூறும்.

'ஞானிக்குக் காயஞ் சிவமே தனுவாம்
ஞானிக்குக் காயம் உடம்பே யதுவாகும்
மேனிற்கும் யோகிக்கு விந்துவும் நாதமும்
மேனிக்குக் காயமுப்பாழ் கெட்ட முத்தியே.'

'உடலாக சொல்லில் இருபத்தைஞ் சாலை
படுபரசேனையும் பாய்பரி ஐந்தும்
உடையவன் மத்திமை உள்ளுறு நால்வர்
அடைய நெடுங்கடை ஐந்தொடு நான்கே'.

ஆத்ம தத்துவங்கள் இருபத்தைந்து என்று மேற்பாடல் கூறும்.

'உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற உயிரை அறியார்
உடம்பொடு யிரிடை நட்பறியாதார்
மடம் புகு நாய் போல் மயங்குகின்றாரே.'

என்று உடம்புக்கும் உயிருக்கும் இடையிலுள்ள நட்பு உரைக்கப்படுகின்றது. பிறவியின் இழி தகைமையை திருமூலர் நாயின் தன்மை போல என்று உவமித்துள்ளார். 'அடுக்களை நாய் போல் மயங்கும் பிறவி' என மேலும் கூறுகின்றார்.

'முன்னிக் கொருமகன் மூர்த்திக் கிருவர்
வன்னிக்கு மூவர் வதுவைக்கு நால்வர்
கன்னிக்குப் பிள்ளைகள் ஐவர் முனாளில்லை
கன்னியைக் கன்னிலே காதலித்தானே'.

'கன்னிக்குப் பிள்ளைகள் ஐவர்' – பஞ்சபூதங்களில் வரும் சுவைகள் 5.
'முன்னிக் கொழுநன்' – ஆகாயத்திலிருந்து ஓசை
'மூத்தக்கு இருவர்' – காற்றிலிருந்து ஓசையும் ஊறும்
'வன்னிக்கு மூவர்' – தீயிலிருந்து ஓசை, ஊறு, ஒளி
'வதுவைக்கு நால்வர்' – நீரிலிருந்து ஓசை, ஊறு, ஒளி, சுவை
'கன்னிக்கு ஐவர்' – நிலத்திலிருந்து ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்.

உடம்பிலேயுள்ள இந்திரியங்களைச் செயலிழக்கச் செய்வது இறை அருளாகும்.

'துரிய மிருப்பதுஞ் சாக்கிரத்துள்ளே
நரிகள் பதினாறு நஞ்சுண்டு செத்தன
பரிய புரவியும் பாறிப் பறந்தது
துரிய மிறந்திடஞ் சொல்ல வொண்ணாதே'.

சிலந்தியானது தனது கூட்டின் நடுவிலிருந்து அதில் அகப்படும் பிராணி களை அனுபவித்துண்ணும். அது போல் ஐம்பொறி வலையினுள் உடல் – உயிர் அமர்ந்து ஐம்புலனும் உலக இன்பத்தை உண்ணும்.

'மத்திம மொத்த சிலந்தி வலயத்துள்
ஒத்தங் கிருந்து உயிருண்ணுமாறு போல்
அத்தனும் ஐம்பொறி யாடகத்துள் நின்று
சத்தமுதல் ஐந்துந் தானுண்ணு மாறே.'

மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலை ஆகிய அத்துவாக்களை – பெருநெறிகளாக வகுத்துள்ளார் திருமூலர். அருள் வெளிப் படும் இடம் இறைவனின் திருவுருவங்களாகும். இறைவனின் வடிவங்கள் அருவம், உருவம், அருவுருவமெனப்படும்.

அருவத் திருமேனி – சிவம், சத்தி, நாதம், விந்து
உருவத் திருமேனி – மகேஸ்வரன், உருத்திரன், மால், அயன்
அருவுருவத் திருமேனி – சிவலிங்கம்

ஆதிபரஞ் சிவம் சத்தி சதாசிவம்
ஏதமில் ஈசன் நல்வித்திய தத்துவம்
போதங் கலை கால நியதி மாயாயை
நீதியீறாக நிவுத்தினன் என்னே.'

கனவு, நனவு, சுழுத்தி, துரியம் என்பன சீவனுக்குள்ள நிலைப்பாடுக ளாகும்.

'புரியட்டகமே பொருந்தல் நனவு
புரியட்டகந் தன்னில் மூன்று கனவு
புரியட்டகத் திரண்டு சுழுத்தி
புரியட்டகத் தொன்று புகல் துரியமே.'

உயிர் வர்க்கங்களை கட்டிப்படைக்கும் பாம்புகளை திருமூலர் பின்வருமாறு கூறுகின்றார்.

'திகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள் மூன்று
நகைக்கின்ற நெஞ்சுள் நரிக்குட்டி நான்கு
வகைக்கின்ற நெஞ்சினுள் ஆனைக்கன்றைந்து
பகைக்கின்ற நெஞ்சுக்குப் பாலிரண்டாமே.'

| | | |
|---|---|---|
| சிங்கங்கள் மூன்று | – | காமம், வெகுளி, மயக்கம் |
| நரிக்குட்டி நான்கு | – | மனம், புத்தி, சித்தம், அகங்காரம் |
| ஆனைக்கன்று ஐந்து | – | மெய், வாய், கண், மூக்கு, செவி |
| பாலிரண்டு | – | ஆண், பெண் |

திருமந்திரம் சித்தாந்தம், வேதாந்தம் பற்றி விரிவாகப் பல பாடல்களில் கூறுகின்றது.

பாடல் எண் – 2385, 2386, 2393, 2394.

தத்துவத் தன்மை பெற்றவர்கள் சிவனைத் தவத்தினால் உணர்பவர்கள்.

'சிவனைப் பரமனுட் சீவனுட் காட்டும்
அவமற்ற வேதாந்த சித்தாந்த மானான்
நவமுற்ற வத்தையில் ஞானஞ் சிவமாம்
தவமிக் குணர்ந்தவர் தத்துவத்தாரே.'

சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்று முத்திகள் நால்வகைப்படும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என நெறிகள் நால்வகைப்படும். எல்லா நெறிகளையும், நிலைகளையும் கடந்து திருமூலர் கூறுவது, நிஷ்டையை, சமாதியை, செயலற்றதை, சித்தமற்றதை ஆகும்.

'பெத்தமும் முத்தியும் பேணுந் துரியமுஞ்
சுத்த வதீதமும் தோன்றாமற் றானுணும்
அத்தன் அருளென்ற ருளால் அறிந்தபின்
சித்தமும் இல்லை செயலில்லைத் தானே.'

அநுபூதி நிலை, சாந்தி நிலை, சமாதி நிலை, இறை ஐக்கியம் தவத்தினால் நிகழ்வது. கூடுவதென்பதும், கூட்டுவதென்பதும் திருவருட் குறிப்பின்றி நிகழமுடியாதவை.

பாம்பின் கால் பாம்பறியும். அருளை அருளே அறியும். கள்வனைக் கள்வன் அறிவான்.

சத்தி சிவமாகிய செம்பொருளை வெளிப்படுத்துகின்றது. திருவருளாகிய ஒளி உண்மையை உணர்த்தும். உண்மையே சிவம். உண்மையே சைவம். உண்மையே அருள். உண்மையே ஆனந்தம். உண்மையே முத்தி.

அருள் நுகர்வு ஏற்படும்பொழுது, பொய்மையெல்லாம் மறைந்து போகின்றது. பொய்மையெல்லாம் எரிந்து சாம்பராகின்றது. அன்பு அருளினை அறியும். அன்பு ஆர்வத்தைத் தூண்டும். ஆர்வம் அருளுடன் ஐக்கியப் படுத்தும்.

இறைவனை அம்மை அப்பனாக வழிபாடு செய்கின்றோம். ஆன்மா சத்தியின் உதவியுடன் அருள்நிலையில் தாக்கம் அடைகின்றது.

'அஞ்சொடு நான்கும் கடந்தக மேபுக்குப்
பஞ்சணி காலத்துப் பள்ளி துயில்கின்ற
விஞ்சையர் வேந்தனும் மெல்லியலாளொடு
நஞ்சுற நாடி நயஞ் செய்யுமாறே.'

மரத்தினால் யானையைச் செய்தால் அது மர யானை. மரமென் பார்க்கு அது மரமாயும், யானை என்பார்க்கு அது யானையாயும் புலப்படும். உலகம் பரம்பொருளிலும், பரம்பொருள் உலகத்திலும் தெரியும்.

'மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதமே.'

சிவனையும் சிவனருளையும் கண்டனுபவித்தவர்கள் தத்தமது அனுபவ நுகர்ச்சியைப் புலப்படுத்திச் சென்றுள்ளனர்.

ஐம்புலனை வென்று கொள்வதாலும், அறிவென்னும் ஞானத் திரியைக் கொளுவி இருளற நோக்கும் ஒருவருக்கு வானகமாகிய தேவருலகுக்குச் செல்லலாம்.

'ஆனைகள் ஐந்தும் அடக்கி அறிவென்னும்
ஞானத் திரியைக் கொளுவி அதனுட்புக்
கூனையிருளற நோக்கும் ஒருவற்கு
வானக மேற வழியெளி தாமே.'

யோக நிஷ்டையின் மூலம் ஞானானந்தப் பெருநிலை எய்தப் பெற்ற திருமூலர் தூக்கிய திருவடியையும், டமருகத்தின் ஓசையையும், வேதாகமங் களின் ஓசையையும் நாடியூடாகக் காண்கிறார்.

'ஆடிய காலில் அசைகின்ற வாயுவும்
நாடித் தெழுந்த நமருக ஓசையும்
பாடியெழுகின்ற வேதாகமங்களும்
நாடியினுள்ளாக நான் கண்டவாறே.

என்னை நானே எப்படி அறிவேன் என்ற தவிப்பு நிலை தான் திருவருள் வேட்கையின் முதல் வெளிப்பாடு.

'முன்னை அறிவினில் செய்த முதுதவம்
பின்னை அறிவினைப் பெற்றால் அறியலாம்
தன்னை அறிவது அறிவாம் அஃதன்றிப்
பின்னை அறிவது பேயறி வாகுமே.'

புலனடங்கலும், தியானமும், ஒருமைப்பாடும், யோகமும் கைகூடினால் மனம் தானாகவே அடங்கும். 'உடம்பின் பிணிகள், நோய்கள் அனைத்தும் ஒழியும். செயலற்ற நிலை உருவாகும்.

'செயலற்றிருக்கச் சிவானந்தமாகும்
செயலற்றிருப்பார் சிவயோகந் தேடார்
செயலற்றிருப்பார் செகந்தொடுங் கூடார்
செயலற்றிருப்பார்க்கே செய்தியுண் டாமே.'

இருளினுள்ளே காணும் பொருட்களை ஒளியின் துணையுடன் கண்டறிவது போல, திருவருட் காட்டக் கண்டறியும் தன்மை உயிருக்குண்டு.

'அறிவிக்க வேண்டாம் அறிவற்றயர் வோர்க்கும்
அறிவிக்க வேண்டாம் அறிவிற் செறிவோர்க்கும்
அறிவுற்றியாமை யெய்தி நிற்போர்க்கே
அறிவிக்கத் தம்மறி வாரறி வோரே.'

தன்னில் தன்னை அறிபவரே தலைமகன்.

'தன்னினில் தன்னை அறியும் தலைமகன்
தன்னினில் தன்னை அறியத் தலைப்படும்
தன்னினில் தன்னைச் சார் சிவனாகில்
தன்னினில் தன்னையுஞ் சார்தற் கரியவே.'

நந்தி எனும் பதம் திருநந்தி தேவரையும், சிவனையும் குறிக்கும். நந்தி எம்பெருமானின் தவமேன்மை மிகவும் வியக்கத் தக்கது. நந்தியே ஆன்மாவென்றும் கூறப்படும்.

திருவடிகளிலே பற்று வைத்துத் தொழும் மரபு சைவத்தின் தனித்துவமாகும்.

'பற்றறப் பற்றிற் பரம்பதி யாவது
பற்றறப் பற்றிற் பரனறி வேபரம்
பற்றறப் பற்றினிற் பற்ற வல்லோர்கட்கே
பற்றறப் பற்றிப் பதம் பரமாமே.'

அருளைத் தரும் சிவன் ஆதியும் அந்தமுமில்லாத சோதிப்பரஞ்சுடர். அது நீதியாய் நிற்கும். புண்ணியத்தோரே அதனை உணர்வார்கள்.

'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பதி
சோதிப்பரஞ்சுடர் தோன்றத் தோன்றாமையின்
நீதிய தாய் நிற்கும் நீடிய வப்பர
போதம் உணர்ந்தவர் புண்ணியத் தோரே.'

அரனை அர்ச்சிப்பார்க்கும், அருமறை ஞானிக்கும் ஆருசயில்லை என விளம்புகின்றார் திருமூலர்.

உள்ளுக்குள்ளிருக்கும் இறையருளை நாம் அறியாமல் இருப்பது தான் அருள் நுகர்வுக்கு ஏற்படும் தடை. தனக்குள்ளமைந்துள்ள அருளின்பத்தை அநுபவிக்கத் தெரிந்தவன் ஞானி. உள்ளொளி பெருக்கி நிற்பது ஞானநிலை.

பிறவி கடந்து, கலை நின்ற கள்வனைத் திருமூலர் பெருமான் கண்டு கொண்டார்.

'தலைநின்ற தாழ்வரை மீது தவஞ் செய்து
முலைநின்ற மாதறி மூர்த்தியை யாலும்
புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து
கலைநின்ற கள்வனைக் கண்டுகொண்டேனே.

'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்' என்று கூறித் திருமூலர் பெருமான் வியக்கின்றார்.

'வாசியு மூசியும் பேசி வகையினால்
பேசியிருந்து பிதற்றிப் பயனில்லை
ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்
ஈசன் இருந்த இடம் எளிதாமே.'

எல்லாத் துன்பத்திற்கும் ஆசையே காரணம்.

'ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே.'

பற்றுக்கள் அனைத்தும் அறந்த நிலையே துறவு ஆகும்.

'நந்தி பெருமான் நடுவுள் வியோமத்து
வந்தென் அகம்படி கோயில் கொண்டான் கொள்ள
எந்தை வந்தானென் றெழுந்தேன் எழுதலுஞ்
சிந்தையி னுள்ளே சிவனிருந்தானே.'

அருள் துகர்வு இறை அருளினை ஆன்மா அநுபவிக்கும் நிலையாகும். சீவனின் இயக்கம் சிவனின் இயக்கமாகும். 'உள்ளத்தினுள்ளே உறைகின்ற' இறைவன் தான் முழுமையாக உரைப்படுகின்றது. திருமந்திரம் இவற்றையெல் லாம் தெளிவுபட மிகவும் ஆழமாக எடுத்துரைக்கின்றது.

* * * * * * * * * *
* * * * * *
* *

அருள் மொழிச் செல்வர்,
திரு. கனகசபாபதி நாகேஸ்வரன்., எம். ஏ,
தமிழ் விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# திருமந்திரத்தில் பேராப்பெருவாழ்வு

உலகியற் பற்றுள்ள வாழ்க்கை செயற்கையான இருமை வகை உடைய மனச் செயற்பாட்டினால் ஆக்கப்படுவதாகும். அது நரை, திரை, நோய்நொடி, முதுமை, மரணம், நன்மை தீமை, பாவ புண்ணியம், அறிவு அறியாமை சுவர்க்க நரகம் முதலிய இருமைகளுக்கு உட்பட்டதாகும். பேராப் பெருவாழ்வு என்பது இவற்றைக் கடந்த இயற்கையான ஒருமைப் பாடுடைய திருவருட் செயற்பாட்டினால் சுயமாகவே நிகழ்வதாகும். இதை மோட்சம், வீடுபேறு, பேரின்பம், நிருவாணம், கைவல்யம், அமரத்துவம் எனப் பல்வேறு பதங்களாகக் குறிப்பிடுவர். இந்தப் பேராப் பெருவாழ்வை இறந்த பின்புதான் பெற முடியுமெனத் திருமூலர் உபதேசிக்கவில்லை. பக்குவ நிலை அடைந்தவர்கள் இவ்வுலகிலேயே வீடுபேறு பெற்றுப் பேரின்பமாக வாழலாம். இப் பக்குவ நிலை அடைந்தவர்களைத் திருமூலர் அணைந்தோர் என வாழ்த்தி அவர்களுடைய பெருமையைப் பாடிப் போற்றுகிறார். அவர்களை நீத்தார் எனவும் சீவன் முக்தர் எனவும் சைவ சித்தாந்தம் கூறும். அவர்கள் இல்வாழ்க்கையைக் கட்டாயமாக நீத்தல் வேண்டும் என்பது இல்லை.

ஒன்பதாம் தந்திரத்தை மகுடாகமம் என வழங்குதல் மரபாகும். மகுடம் என்பது மன்னர் தலையில் அணியும் கிரீடமாகும். அது இங்கே வாழ்க்கைச் சிகரமாகிய பேரின்பத்தை எடுத்துக் காட்டுவதாகும். இத்தகை சீரிய உயர்ந்த வாழ்க்கையை எங்ஙனம் பெறுதல் வேண்டும்? என்பதற்கு உத்தம வழிகாட்டியாகவும் அதனால் மேலும் அடையக் கூடிய பெறுபேறுகளையும் நன்கு இயம்பிச் சாதகர்களுக்கு ஒரு சிறந்த தூண்டுகோலாகவும் உள்ளதே திருமந்திரத்தின் கடைசியான ஒன்பதாவது தந்திரமாகும். இதன் பொருள் அடக்கம் இருபத்து இரண்டாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் எல்லாமாக 399 பாடல்கள் அடங்கியுள்ளன. இந்த 22 அத்தியாயங்களையும் ஒழுங்காக நிரைப்படுத்தி விரிவான விசேட ஆய்வுரை செய்தல் இங்கு அசாத்தியமாகும். எனினும் சாதகர்களுக்கு உத்தம வழிகாட்டியாக அமைந்துள்ளவற்றிற்கு மறைஞான விளக்கம் கூறுதல் பெரும் பயனுடையதாகும் எனக் கருதிச் சுருக்கமான ஆய்வுரையை மேற்கொள்கிறோம்.

நான்கு வேதங்களையும் சதுர்மறை எனக் கூறுதல் மரபாகும். அவற்றுட் பொதிந்துள்ள ஆழமான பொருள் மன இந்திரியங்களுக்குச் சரிவரப் புலப்படாது மறைந்துள்ளபடியால் அவற்றைப் பொதுவாக மறை என

வழங்குவர். வேதங்களின் மறை பொருளை விளக்குவதே ஆகமங்களாகும். சிவாகமங்கள் வடமொழியில் 28 ஆக உள்ளன. மறை பொருள் விளக்கத்தைச் சிவயோகிகள் மறைஞானம் எனக் கூறுவர். இந்த 28 ஆகமங்களையும் திருமூலர் தூயதமிழில் 09 ஆகத் தொகுத்துத் திருமந்திரம் எனும் நூலாக மூவாயிரம் பாடல்களில் ஆக்கியுள்ளார். இந்துமதம் பொதுவாக மறை ஞானத்தைத் தரிசனம் எனக் கூறும் வேதங்களுக்கு விளக்கம் ஏழு தரிசன நூல்கள் கொண்டுள்ளன. சைவசித்தாந்தத் தமிழ் முதற்தரிசன நூல் திருமந்திரமாகும். இதைப் பயின்று மறைஞானம் பெறச் சாதனை செய்பவர்கள் மிகவும் குறைவாகும். ஒளியைக் கண்டு அஞ்சும் ஆந்தை போலச் சைவ மக்கள் மறைஞானத்தைக் கண்டு விலகுவாராயின் சந்திய சிவதரிசனம் பெறுதல் எங்ஙனம்?

மறைஞானத்தைப் பண்டைத்தமிழர் மாசறுகாட்சி என வழங்கினர். காட்சிகள் நால் வகைப்படும். அவையாவன, இந்திரியக் காட்சி, மானதக் காட்சி, ஆன்மீகக் காட்சி, சிவக் காட்சி அல்லது மாசறு காட்சி என்பனவாகும். ஆன்மீகக் காட்சியை சிலர் சிவக்காட்சி என மயக்குறுகின்றனர். ஆன்ம விசாரணை ஒன்றே சிவக் காட்சி பெறுவதற்குப் போதுமென வாதாடும் சித்தர்களும் உள்ளனர். ஆன்மீகக் காட்சியில் மனவாசனை உள்ளபடியால் அதை மாசறு காட்சியாகக் கொள்ளுதல் பொருந்தாது. சாதகர்கள் பெரும் பாலும் சிவதரிசனத்தைச் சரிவரப் பெறுவதற்குத் தவறும் காரணம் முதல் மூன்று காட்சிகள் மூலமாக அதைப் பெற முயற்சித்தலாகும். ஆன்மாவின் இயல்பு சார்ந்ததன் வண்ணம் விளங்குதலாகும். மனஇந்திரியக் காட்சியையும், சிவக்காட்சியையும் ஒரு வேளையில் காணும் ஆற்றல் ஆன்மாவுக்கு இல்லை. இதை வழுவற விளக்கி மன இந்திரியச் சார்பும், மனவாசனைச் சார்பும் நீங்கி மறைஞானம் மூலம் திருவருள் கொண்டு சிவதரிசனமும் பேராப் பெருவாழ்வும் பெறுவதற்கு உரிய சிறந்த வழி காட்டுவதாக அமைந்ததே திருமந்திரத்தின் ஒன்பதாவது தந்திரமாகும். சாதகர்கள் கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்னும் மனப்பான்மையை விட்டு மனஇந்திரிய தரிசனத்தை நீக்கி சிவதரிசனம் பெறும் சாதனையில் வெற்றி காணுவதல் வேண்டும்.

சாதாரணமான கேள்வி அறிவிலும் பார்க்கக் காட்சி அறிவு தெளிவு கூடியதாகும். செவிக்கும் மூளைக்கும் தொடர்புள்ள மூளை நரம்புகளிலும் பார்க்க கண்ணுக்கும் மூளைக்கும் தொடர்புள்ள நரம்புகள் அறுபது பங்கு சக்தி கூடியவை என நரம்பியல் நிபுணர்கள் ஆய்ந்து கண்டுள்ளனர். கல்வி கேள்வி அறிவு மூலம் பெறும், மனவாசக உண்மை விளக்கத்தைவிட மாசறு காட்சி மூலம் பெறும் சத்தியப்புலப்பாடு ஆயிரம் பங்கு தெளிவு கூடியதென விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். திருமந்திரத்தின் ஒன்பதாம் சூத்திரம் சிவதரிசனமாகிய மாசறு காட்சிக்கே முதலிடம் கொடுக்கின்றது. குருமட தரிசனத்துடன் ஆரம்பமாகும். ஒன்பதாம் தந்திரம் படிப்படியாக ஞானகுரு தரிசனம், திருக்கூத்துத் தரிசனம்,

சிவதரிசனம், சிவசொரூப தரிசனம், மோன சமாதி என உயர்ந்து செல்கிறது. மோன சமாதி இன்றி மாசறு காட்சி பெறுதல் சாத்தியமில்லை. சிவசொரூப தரிசனமே மகுடாகமத்தின் சிகரமாக விளங்குகிறது. மறைஞான விளக்கம் மனவாசக விளக்கத்தைக் கடந்ததாகும். காலம், இடம், காரணம் ஆகிய மூன்று பரிமாணங்களுக்கும் உட்பட்ட கொள்கைகளும், கருத்துக்களும் சிவ சொரூப தரிசனத்தைக் கொடுக்க மாட்டா. நான்காவது பரிமாணமாகிய துரியாதீதம் அல்லது மோனசமாதியே சத்திய தரிசனத்தை நல்குவதாகும். கருத்துக் கொள்கை வாதிகளால் இன்று மறைஞானம் இருட்டடிக்கப்பட்டு வருகின்றது. சைவசமயப் பாடநூல்களில் கொள்கை விளக்கமே ஆட்சி செலுத்துகிறது. இந்நிலை மாறுதல் வேண்டும். பத்திரிகைகள்கூட கொள்கை விளக்கத்திற்கே ஆதரவு கூடுதலாகக் கொடுக்கின்றன. றேடியோ, வீடியோ, தொலைக்காட்சி யாவும் கொள்கை விளக்கத்திலே கூடிய கவனம் செலுத்துகின்றன. இதனால் மெய்யுணர்தல் பெறும் மக்கள் தொகை அருகி வருகின்றது.

## குருமட தரிசனம்.

இது முதல் அதிகாரமாக அமைந்துள்ளது. இதில் உள்ள முதற் பாடலில் வரும் காட்சியைக் கவனியுங்கள்.

பலியும் அவியும் பரந்த புகையும்
ஒலியும்எம் ஈசன் தனக்கென்றே உள்திக்
குவியுங் குருமடங் கண்டவர் தாம்போய்த்
தளிரு மலரடி சார்ந்து நின்றாரே!

இப் பாடலின் ஆரம்பத்தில் இந்திரியக் காட்சி புலப்படுகின்றது. பலிக்குரிய பொருட்களும் சிவனுக்குரிய பொருளாகி அவிசும், நெருப்பும், புகையும் தெரிகிறது. ஓதப்படும் மந்திரஒலி செவிக்கு எட்டுகிறது. இப் பாடல் மூலம் இவற்றைக் கற்பனை செய்து பார்த்தல் மானதக் காட்சியாகும். ஈசனுக்குச் செய்யப்படும் யாக பூசை இருவகையானதாகும். ஒன்று பசு புண்ணியமானது. மற்றது பதி புண்ணியமானது. பலன் கருதிச் செய்யப்படுவது பசு புண்ணியமாகும். பலன் கருதாது அன்பின் பொருட்டு அன்பிற்காகவே செய்யப்படுவது பதி புண்ணியமாகும். சிவதரிசனத்திற்கு வேண்டிய பதி புண்ணியமாகவே இங்கு வரும் குருமடத்தில் யாக பூசை நடத்துகிறது என்பதைக் கிரகிக்க முடிகிறது. இது போலவே சிவாலயங்களில் செய்யப்படும் யாக பூசைகளையும் கொள்ளுதல் வேண்டும். பலன் கருதி யாக பூசையில் கொடுக்கப்படும் அவிசைச் சிவன் ஏற்பதில்லை. வேறு தெய்வங்களே இத்தகைய அவிசை ஏற்கின்றனர்.

இங்கே செய்யப்படும் யாக பூசை இறைவனுடைய மென்மையான மலர்த் திருவடிக்கே செய்யப்படுவதாகத் திருமூலர் விளக்குகிறார். இறைவனின் திருவடிகள் திரோதான சக்தியையும் சுத்த சக்தியையும் குறிப்பனவாகும். சுத்தசக்தியாகிய திருவருளே சிவதரிசனத்தைக் கொடுக்க வல்லதாகும். எனவே சுத்த சக்தியை வேண்டியே குருமடத்தில் யாக பூசை நடைபெறுவதாகப் புலப்படுகின்றது. இதிலிருந்து நாம் அனுமானிக்க வேண்டியது யாதெனின் லௌகீக விடயங்களில் பலன் அடைய விரும்புவோர் திரோதானசக்தி வளிபாடும் ஆன்மீகத் துறையில் சிவபேறு அடையச் சிரத்தை கொள்வோர் சுத்தசக்தி வழிபாடும் செய்தல் வேண்டும் என்பதாகும். ஆனந்த நடராஜனின் ஊன்றிய திருவடியும் தூக்கிய திருவடியும் எடுத்துக் காட்டும் உண்மை இதுவேயாகும்.

இங்கே செய்யப்படும் யாக பூசைகள் பெருந்துறையை இலட்சியமாகக்கொண்டு செய்யப்படுகின்றதென்பதைத் திருமூலர் மூன்றாவது பாடலில் விளக்குகின்றார். பெருந்துறையைப் பற்றிய சரியான விளக்கம் இல்லாது சாதனை செய்ய முற்படுதல் வீணாகும். சமுத்திரத்தில் பிரயாணம் செய்யும் எந்தவொரு கப்பலும் ஏதாகினும் ஒரு துறைமுகத்தை நோக்கியே செல்லும். இவ்வாறே சம்சார சாகரத்தில் பிரயாணம் செய்யும் ஆத்மாவானது மோட்சமாகிய பெருந்துறையை அடையும் இலட்சியத்தைக் கொண்டு வாழ்தல் அவசியம். மோட்சமென விசேடமாகக் கருதப்படுவது பந்த பாசங்களில் இருந்து விடுதலை பெறுதலையாகும். பெருந்துறை அடைதலின் மறைபொருள் ஆத்மீக விடுதலையாகும். குருமடத்தில் நாம் காணும் மன இந்திரியக் காட்சி எமக்குப் பெருந்துறை அடைவதற்கு ஒரு வழிகாட்டியாக அமைகிறது. உண்மையில் இக் காட்சி நேரடியாகச் சிவபுண்ணியச் சாதனையின்றி ஆத்மீக விடுதலை கொடுக்கமாட்டாது.

## ஞானகுரு தரிசனம்.

ஞானகுரு தரிசனமும் ஆத்மீக விடுதலைக்கு நல்லதொரு வழிகாட்டியாகவே அமைகிறது. இந்த வழிகாட்டி மிகவும் நுட்பமாக நான்கு சாதனா முறைகளைச் சாதகர்களுக்குச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றது. அவையாவன :

1. முப்பத்தாறு தத்துவங்களையும் கடத்தல். இதைத் தத்துவ தரிசனங்களை நீக்குதல் எனவும் கூறலாம்.

11. மூன்று துரிய நிலைகளாகிய – விழிப்பு – உறக்கம் – கனவு ஆகியவற்றைக் கடந்து, துரியாதீத நிலை எனும் சமாதி அடைதல்.

111. சிவனும் சீவனும் அந்நியமின்றி அத்துவிதமாக உள்ளன என்பதைத் தெளிவுபடுத்தும் சிவோகம் பாவனை செய்தல்.

11/. அறநெறியை இயற்கையாகவும் சுயமாகவும் நல்கக்கூடிய நினைப்பற நினைக்கும் தியானநெறியை அனுசரித்தல் என்பனவாகும்.

இந் நான்கு சாதனைகளையும் சரியான முறைப்படி எங்ஙனம் செய்தல் வேண்டும் என்பதை ஞானகுருவினுடைய நேரடியான வழி காட்டுதல் இன்றி நன்கு தெளிந்து உரிய சாதனைகள் செய்தல் சாதகர்களுக்குச் சாதாரணமாக இயலாததாகும். வழி காட்டல் முறைகளை ஞானகுரு தரிசனம் மூலமே பெற்று அனுசரித்தல் வேண்டும் என்பது இந்த அதிகாரத்தில் வலியுறுத்தப்படுகிறது.

## திருக்கூத்துத் தரிசனம்.

இந்த அதிகாரம் மற்றும் இருபத்தொன்றையும்விட மிகவும் விரிவாக 82 பாடல்களால் விளக்கம் பெறுகின்றது. திருப்பெருந்துறை அடையாதவர்கள் திருக்கூத்துத் தரிசனம் பெறுதல் அரிதாகும். இக் காட்சியானது மன இந்திரியக் காட்சிகளுக்கு அப்பாற்பட்ட மாசறு காட்சி மூலமே பெறக்கூடியதாகும். எனினும் ஆத்மாவினால் மானதக் காட்சியைச் சார்ந்து திருக்கூத்தின் ஒர் அம்சமாகிய திரோதன சக்தி நடனத்தைத் தரிசிக்க இயலும். திருக்கூத்தானது ஓம்கார பஞ்சாட்சர மந்திரங்களின் வியாக்கியானமாக உள்ளது. அது ஓம்காரத்துடனும் பஞ்சாட்சரத்துடனும் அந்நியமின்றி நிற்பதாகும். ஓம்கார மந்திரம் படைத்தல், காத்தல், அழித்தலாகிய முத்தொழில்களையும் குறிக்கும் நடனமாக உள்ளது. பஞ்சாட்சர மந்திரம் திரோதன சக்தி, மலம், ஆன்மா, சுத்த அருட்சக்தி, சிவம் ஆகிய ஐந்தின் இயக்கங்களையும் குறிக்கும் கூத்தாக உள்ளது. திருக்கூத்தைப் புறமாகிய ஆனந்தி என்றும், அகமாகிய நானந்தி என்றும் பகுத்துள்ளனர். சிவாகமங்களில் எல்லாமாக 108 திருக்கூத்துக்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது. அவற்றுள் சிவன் தாமாக ஆடுவன 48 என்றும், உமையோடு ஆடுவன 36 என்றும், மாயனுடன் ஆடுபவை 09 என்றும், முருகன் பொருட்டு ஆடுபவை 03 என்றும், வானவருக்கும் மானிடருக்குமாக ஆடுபவை 12 என்றும் காட்டப்பட்டுள்ளன. இவற்றை எல்லாம் திருமூலர் தொகுத்துச் சுருக்கமாக 05 என விளக்கியுள்ளார். இவ் விளக்கம் பஞ்சாட்சர மந்திரத் திற்கு அமையச் சிறப்பாக உள்ளது.

இந்த ஐவகைத் திருக்கூத்துக்களையும் சிவானந்தக் கூத்து – சுந்தரக் கூத்து – பொற்பதிக் கூத்து – பொற்றில்லைக் கூத்து – அற்புதக் கூத்து என விளக்கும் பாடல் இதோ :–

சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனை
சொற்பத மாமந்தச் சுந்தரக் கூத்தனை
பொற்பதிக் கூத்தனைப் பொற்றில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யாரறி வாரே!

திருக்கூத்தின் மறைஞான விளக்கத்தை முழுமையாக அறிந்தவரில்லையாதலின் அதனை விரிவாகத் திருமூலர் 80 பாடல்கள் மூலம் விளக்குகிறார். திருக்கூத்தின் மறைபொருளை வழுவறத் தெளிய வேண்டுமாயின் சாதகர்கள் பக்குவநிலை அடைதல் அவசியமாகும். பக்குவநிலை அடையாதோரால் காண ஒல்லாதென்பதை வலியுறுத்தும் பாடல் ஒன்று கூறிய சம்பாஷணையில் வருகிறது. அதை இவண் தருகிறோம்.

மொட்டித் தெழுந்ததோர் மொட்டுண்டு மொட்டினைக்
கட்டிவிட் டோடின் மலர்தலுங் காணலாம்.
பற்றுவிட் டம்மனை பாழ்பட நோக்கினாற்
கட்டுவிட் டார்க்கன்றிக் காணவொண்ணாதே!

தாமரைத் தடாகத்திலே பலதரமான மொட்டுக்கள் உள்ளன. சூரிய ஒளி அவைமீது சமமாகவே பிரகாசிக்கின்றது. எனினும் அவற்றுள் முதிர்ச்சி அடைந்து இதழ்களின் கட்டுவிடக்கூடிய பக்குவம் பெற்ற சில மொட்டுக்கள் மட்டுமே சூரிய ஒளியால் மலர்ந்து சூரிய தரிசனம் பெறுகின்றன. திருவருள் எல்லோரிடமும் சமமாகவே பொலிகிறது. எனினும் பந்தபாசமாகிய கட்டுவிட்டுப் பக்குவநிலையடைந்த ஒரு சிலருடைய இதயத்தாமரை மொட்டை மட்டுமே மலரச் செய்கிறது. பக்குவமடையாதவர் திருவருட் கூத்தின் மறை பொருளைக் காண மாட்டார்கள். எனவே ஆனந்தத் திருக்கூத்தைக் கண்டுகளிக்கச் சிரத்தை கொள்வோர் பாசநீக்கத்து வேண்டிய சாதனைகளைச் செய்து தம்மைப் பக்குவப்படுத்திக்கொள்ளுதல் அவசியமாகும்.

## சிவானந்தக் கூத்து.

கூத்துக்களுக்கெல்லாம் தலைமைக் கூத்தன் சிவன். அவனே நடராஜன், நிருத்தியாதிபன், தாண்டவக்கோன், விஸ்வன், ஏகன், சர்வேஸ்வரன் நடனத்திற்குத் தலைவனென விசேடமாகக் கருதப்படும் நடராஜன் ஆடும் கூத்தே சிவானந்தக் கூத்தாகும். சிவனல்லாத மற்றும் தெய்வங்கள் சந்தர்ப்பம்நோக்கி சிலவேளைகளில் மட்டும் ஆடுவனவாகும். சிவானந்தக் கூத்து எக்காலத்தும் ஓயாது நிகழ்வதாகும். சிவானந்தக் கூத்து இல்லாவிட்டால் உலகமே ஆடாது, அசையாது

எத்தொழிலும் நடக்காது. உலகில் எதுவுமே அசையாது இருப்பதில்லை. கல்லுக்கூட தன்னகத்தே உள்ள அணுசக்தியின் இயக்கத்தால் அசையத்தான் செய்கிறது. இவ்வுண்மையை,

வேதங்க ளாட மிகுஆ கமமாடக்
கீதங்க ளாடக் கிளரண்டம் ஏழாடப்
பூதங்க ளாடப் புவன முழுதாட
நாதங்கொண் டாடினான் ஞானந்தக் கூத்தே.

என்னும் பாடல் நன்கு விளக்குகின்றது.

இத்தகைய ஆடல் நாதத்துடன் நிகழ்கிறதென்பது ஆய்வுக்கு உரியதாகும். அந்த நாதமே ஓங்காரமாகும். இயற்கையின் இயக்கங்கள் யாவும் ஓங்கார ஓசையை எழுப்புவதை அவதானித்தால் நன்கு தெளிந்து கொள்ளலாம். கடல் அலை மோதும் ஓசையைக் கவனியுங்கள், ஆலயத்திலே ஊதப்படும் சங்க நாதத்தைக் கவனமாக செவிமடுத்துப் பாருங்கள். ஓங்கார ஒலி இசைந்து வருவதைத் தெளிவீர்கள். இங்ஙனம் இசையுடன் கலந்துவரும் ஆட்டத்தைத் திருமூலர் "பல்லியம்" என்னும் பதத்தால் தனித் தமிழில் அற்புதமாக விளக்குகிறார். இதனை மேலும் ஆய்ந்து உண்மை விளக்கம் பெற விரும்புவோர் 2725 ஆம் பாடலைப் பார்க்கவும். அபிநயம் இல்லாது இசையுடன் கூடிய ஆடலே பல்லியமாகும். இந்தப் பல்லியம் மெய்ப்பாடுகளுடன் கலந்து அபிநயமும் கூடும்போது வாச்சிய ஆனந்த நடனமாக மலர்கிறது. தமிழில் பரதநாட்டியப் பதங்கள் இல்லையென்போர் திருமூலர் கூறிய பல்லியம், வாச்சியம் முதலிய பதங்களை ஆயக்கடவர். மேலும் பொதிய மலையில் சிவனும் சக்தியும் சேர்ந்து ஆடிய பல்லிய, வாச்சிய நடனங்களை அகத்திய முனிவர் கண்டுகளித்து அதைத் தமிழ் உலகும் உணர்ந்து பின்பற்றுதல் வேண்டுமென நினைந்து இந்த நடனக்கலையை காப்பிய உருவாக்கினார். வாக்குமூலம் வழங்கிவந்த கூத்துப் பாடல்களைப் பின்பு கூத்தனூரைச் சேர்ந்த சாத்தனார் என்னும் சித்தர் தொகுத்துக் கூத்தநூல் வடிவில் ஆக்கியுள்ளார். சாத்தனார் திருமூலர் காலத்தில் வாழ்ந்தார் எனப் புலப்படுகிறது. திருக்கூத்தைப் பற்றிய மேலும் பல உண்மைகளையும் தமிழில் உள்ள நாட்டியப் பதங்களின் விளக்கங்களையும் கூத்தநூலிற் காணலாம்.

இனி ஓங்கார நாத இசையுடன் கூடிய சிவானந்தக் கூத்தின் மறைஞான உட்பொருளைப் பற்றிச் சொற்பம் அவதானிப்போம். ஓம் எனும் நாதம் அ+உ+ம் ஆகிய மூன்று எழுத்துக்களின் ஓசைகளால் ஆக்கப்பட்டதாகும். இதன் விரிவே பஞ்சாட்சரமாகும். எனவே சிவநடனம் ,ஓங்கார பஞ்சாட்சர மந்திரங்களின் வியாக்கியானமாகும். அதுவே சிவநடனக் கலையின் மறைஞானமாகும். இதைத் திருமூலரைப் போல வேறு எவரும் சைவ சித்தாந்த மரபு தவறாது மிகவும் சிறப்பாக விளக்கியிருப்பதாகப் புலப்படவில்லை. நாதத்தின் வடிவத்தை ஓங்காரமாகவும் ஒளியின் வடிவத்தை பஞ்சாட்சரமாகவும் காட்டுவதே மறைஞானமாகும். ஒளிமூலம் வரும் நால்வகைக் காட்சிகளையும் ஆய்ந்து தெளிந்தோம்.

நாதபிந்து வடிவாக அமைந்துள்ள பரம்பொருளின் பிந்துதத்துவத்தை மட்டும் அறிதல் முழுமையாகாது. எனவே பிரமத்தின் மறைபொருளை நாதத்தின் மூலம் எங்ஙனம் அவதானித்து உணரலாம் என்பதை விசாரணை செய்து பார்ப்போம். நாதத்தை வேதாகமங்கள் வாக்கு என வர்ணிக்கும் நால்வகைக் காட்சியைப் போல நால்வகை வாக்கு உள்ளது. இந்த நால்வகை வாக்குகளுள் எந்த வாக்கு மூலம் சிவநடனத்தின் பூரணமான மெய்ப்பொருளை நாம் சரிவர உணரலாம் என்பதே ஆய்வுக்குரிய விடயமாகும். இதன் பொருட்டு முதலாவதாக இந்த நால்வகை வாக்குகளும் யாவை என்பதை அறிவோம். அவையாவன சிவாகமங்களில் கூறப்பட்டபடி வைகரி, மத்திமை, பைசந்தி, சூக்குமை ஆகும். இப் பதங்கள் சமஸ்கிருதத்தில் உள்ளபடியால் இவற்றை யாதெனத் தமிழ் மூலம் தெளிந்து கொள்ளுதல் முடியாததாகும். இவற்றைத் தமிழ் மொழியாக்கம் செய்யும்போது, — விரி, இடை, பிண்டம், மூலம் என வருகின்றன.

இத் தமிழ்ச் சொற்களைக்கூட நன்கு விளங்கிக் கொள்ளுதல் கடினமாக உள்ளதெனவே இவற்றிற்குப் பொருளுரை கூறுதல் அவசியமாகிறது. வைகரி அல்லது விரி என்பது எல்லோருடைய செவிக்கும் எட்டக்கூடிய பலத்த சத்தமாகும் மத்திமை அல்லது இடை என்பது தன் செவிக்கு மட்டும் கேட்கக்கூடிய மெல்லிய சத்தமாகும். பிண்டம் அல்லது பைசந்தி என்பது செவிக்கு எட்டாத மனத்தால் உணரக்கூடிய நுண்ணிய சத்தமாகும். மூலம் அல்லது சூக்குமை என்பது மன இந்திரியங்களுக்கும் எட்டாத அதிநுண்ணிய சத்தம் அல்லது நாதமாகும். இதனைச் சுத்த நாதமென வழங்குவர். ஓங்காரத்தின் மறைபொருளை வழுவற விளக்கவேண்டின் சாதகர்கள் முதல் மூன்று வாக்கு நிலையையும் கடந்து நான்காவதாகிய சூக்குமை அல்லது மூலவாக்கை உணரும் நிலை அடைதல் அவசியமாகும். திருமூலர் மாசறு காட்சி மூலமும், சூக்குமை வாக்கு மூலமும் நாதபிந்து கலா தத்துவங்களையும் சிவசொரூப உண்மை விளக்கத்தையும் அநுபூதி நிலை அடைந்து பெற்றதன் பேறாகவே சைவ சித்தாந்தத் தமிழ் முதல் நூலாகிய திருமந்திரத்தை ஆக்கி எமக்கு வழிகாட்ட முடிந்தது. சாதகர்களாகிய நாம் அவர் காட்டிய வழியில் மாசறு காட்சியும், நாதாந்த சூக்குமை ஓங்கார விளக்கமும் பெற்றுத் திருக்கூத்துத் தரிசனம் காணுவதல் முறையாகும். இதற்கு வேண்டிய சாதனா முறைகளைத் திருமூலரே திருக்கூத்துத் தரிசனத்துமுன்பு வரும், பிரணவ சமாதி, ஒளி, ஞான பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம் அதி சூக்கும பஞ்சாட்சரம் ஆகிய ஐந்து அதிகாரங்களில் எடுத்துக் காட்டியுள்ளார். திருமந்திரத் திற்கு விளக்கம் திருமந்திரமேயாகும். வேறு மேற்கோற்பாடல்கள் தேவையில்லை என இக் கட்டுரையை எழுதப்பணித்த மௌனாச்சிரம ஸ்தாபக சுவாமிகள் ஸ்ரீஉமாசங்கர் கூறிய ஆலோசனையை வரவேற்றே இதை வரைகிறோம். உண்மையாகவே மேற்கூறிய ஐந்து அதிகாரங்களையும் சரிவரப் பயின்று தெளிந்து அவற்றின் பிரகாரம் சாதனை செய்தால், தத்துவ சுத்தி, தத்துவ தரிசனம் ஆன்மசுத்தி, ஆன்ம தரிசனம், ஆன்மலாபம், சிவ தரிசனம் யாவையும் படி முறைக் கிரமப்படி நிச்சயமாகப் பெறலாம்.

மாசறு காட்சியையும் நுக்குவாக்கையும் சாதகர்கள் எப்படிப் பெறலாம்? என்பதே பிரச்சனையாகும். பிரச்சனைக்கு முகங்கொடுத்து விழிப்புணர்ச்சியுடன் நடுநிலையிருந்து பிரச்சனையைச் சரிவர ஆய்ந்து தெளிந்து சாதனை செய்யாது பாட்டுக்குப் பாட்டுப் பாடும் (இமிற்றேசன்) பிறரைப் பின்பற்றும் போலிக் கலையை வளர்ப்பதில் யாது பிரயோசனம்? எனவே "சிவதரிசனம், சிவசொரூப தரிசனம்" ஆகிய இரு அதிகாரங்களுக்கும் சாதனை அற்ற மனவாசக விளக்கம் கொடுக்காது விடுகிறோம். இதற்கு மேற்கோள் சிவதரிசனத்தில் வரும்,

வாக்கு மனமும் இறந்த மறைப்பொருள்
நோக்குமின் நோக்கப் படும்பொருள் நல்லது
போக்கொன்றும் இல்லை வரவில்லை கேடில்லை
ஆக்கமும் அத்தனை ஆய்ந்துகொள் வார்க்கே!

எனும் பாடலாகும். மேலும் சிவசொரூப தரிசனத்தில் கடைசியாக வரும்,

துரிய அதீதஞ் சொல்லறும் பாழாம்
அரிய துரியம் அதீதம் புரியில்
விரியுங் குவியும் விள்ளா மலிருந்தன்
உருவுந் திரியும் உரைப்பதெவ் வாறே!

என்பதும் உகந்த மேற்கோளாகும். இதில் வரும் சொல்லறும் பாழ்நிலை அடைதலும் துரியத்தை நீக்குதலும் சாதகர்கள் சிவதரிசனம் பெறுவதற்குச் செய்ய வேண்டிய சாதனைகளாகும். ஓங்காரம் காட்டும் மறைஞான நெறியும் இதுவே யாகும். ஓங்கார மந்திரத்தில் வரும் 'அ' எனும் அட்சரம் பதியையும், 'உ' என்பது பசுவையும் 'ம்' என்பது பாசத்தையும் சுட்டிக்காட்டுவனவாகும். பசு ஆகிய ஆன்மா பாசத்தைச் சார்ந்து பதியை மறந்து இரு வினைகளுக்கு உட்பட்டு அவஸ்த்தைப் படுகிறது. ஆன்மாவின் அவஸ்த்தைகள் மூன்றாகும். அவற்றையே துரியம் எனத் திருமூலர் குறிப்பிடுகிறார். ஓங்கார மந்திரமானது புறப் பொருளைச் சுட்டி விளக்கும்போது, 'அ' - விழிப்பு அவஸ்த்தையையும், 'உ' உறக்கத்தையும் 'ம்' கனவுநிலையையும் குறிக்கிறது. துரியாதீதம் என்பது ஆன்மா இந்த மூன்று நிலைகளையும் கடந்து நான்காவது பரிமாணநிய நிட்டை அல்லது சமாதி நிலையடைதலாகும். இதைப் பற்றிய விளக்கம் இரண்டு அதிகாரங்களில் - பிரணவசமாதி- மோனசமாதி என்னும் தலைப்புக்களில் நன்கு கூறப்பட்டுள்ளது. அவற்றையெல்லாம் ஆய்ந்து விசேட உரை எழுதுவது இக் கட்டுரையில் அடங்காது. எனவே ஒரு சிறந்த பாடலை மட்டும் மோன சமாதியிலிருந்து எடுத்து இவண் தருகிறோம்.

தானும் அழிந்து தனமும் அழிந்துநீ
டூனும் அழிந்து உயிரும் அழிந்துடன்
வானும் அழிந்து மனமும் அழிந்துபின்
நாளும் அழிந்தமை நானறி யேனே!

மனஇந்திரிய உணர்ச்சிகளினால் உண்டாகும் காட்சிகளும் கல்விகேள்வி அறிவுடைமையும் அழிந்தபோதுதான் அவையாவையும் கடந்த மெய்யுணர்தலைக் கொடுக்கும் மோனசமாதி சுயமாகவே உதயமாகும்.

மோன சமாதியில் ஏற்படும் ஆனந்தம் அற்புதமானதாகும். அது மானிடனுக்குப் பூவுலகிலேயே ஏற்படும் பேரின்பமாகும். அந்தப் பேரானந்தத்தை இன்னதென மனவாசகத்தால் விளக்குதல் இயலாது. மனிதன் பூவுலகில் அனுபவிக்கும் பால்உயர் சிற்றின்பத்தையே பேரின்பத்துக்கு ஒரு சிறு உதாரணமாக எடுத்துக்காட்டும் அற்புதம் போற்றுதற்குரியதாகும். சிற்றின்ப அனுபவத்திலும் பேரின்ப அனுபவத்திலும் உச்சக்கட்டம் அடையும்போது நான் எனது என்ற நினைவோ அல்லது உலகில் உள்ள எதையும் பற்றிய உணர்ச்சியோ உண்டாவதில்லை. இதை வார்த்தைகளால் வர்ணித்தல் இயலாது. இவ் உண்மையைத் திருமூலர் இலக்கியச் சுவையுடன் விளக்கும் இயல்பைப் பாருங்கள். ஒரு கன்னிப் பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயமாகிவிட்டது. புருஷன் தன்னைக் கொடுமைப்படுத்துவான் என நினைந்து அப்பெண் கல்யாணம் செய்யப் பயப்படுகிறாள். அப்பொழுது தாய், "மணவாழ்க்கை மிகவும் இன்பமானது. அதைப்போல் வேறு இன்பம் கிடையாது." என்கிறாள். இதைக்கேட்ட மகள் "அப்படியாயின் நீங்கள் அப்பாவுடன் களித்த முதலிரவு இன்பம் எப்படியிருந்தது எனச் சொல்லுங்கள். நான் அறிய ஆசைப்படுகிறேன்." என வினவுகிறாள். மகளுக்குத் தாய் தன் புருஷனோடு அனுபவித்த சுகத்தை இன்னதென வர்ணிக்க முடியாது திண்டாடுகிறாள். இதனை அவர் கூறும் பாணியைக் கவனியுங்கள்.

"மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே?"

மகளுடைய ஆவல் தீரவில்லை. மேலும் தொளைத்துச் சில கேள்விகளைக் கேட்கிறாள். "அம்மா! அது தேனைப்போல இனிக்குமா? கரும்பைப் போலச் சுவைக்குமா? என்கிறாள். இதற்கு நேரடியான பதில் கூறுதல் சங்கடமாக இருந்தது. சேர்க்கை உறவு இன்பத்திற்கு எந்த உவமையும் பொருந்தாது. அதை எதிர்மறை நிலையிற்றான் விளக்க இயலும். அந்தச் சுவையோடு மகள் ஒப்பிட்டுக் கேட்டதற்குப் பதிலாக திருமூலர் கூறும் எதிர்மறை விளக்கத்தையும் படித்துச் சுவையுங்கள்.

"கரும்பு கைத்தது தேனும் புளித்ததே!"

என்பதுதான் அவருடைய எதிர்மறை வர்ணனையாகும். திருமூலர் மற்றும் சில சமயக் குரவர்களைப் போல இறையின்பத்தை உடன்பாட்டுநிலையில் "தித்திக்கும் தேனே! ஆனந்தக் கனியே!" என வர்ணிப்பதில்லை. "கண்டவர் விண்டிலர்" என்பதே அவருடைய சித்தாந்தத் தெளிவாகும். சிற்றின்பச் சிகரத்தையே வர்ணிக்க இயலாதிருக்கும்போது பேரின்ப மகுடத்தை மகுடாகமமாகிய திருமந்திர ஒன்பதாம் தந்திரம் வருணித்தல் எங்ஙனம்?

ஊழ்

"நாம் எந்தனை பாடுபட்டாலென்ன? திருமந்திரத்திலுள் மூவாயிரம் பாடல்களைப் பாடி கருத்து ஓதினாலென்ன? ஊழ் வினைப்படிதான் எல்லாம் நடக்கும். அன்று எம் தலையில் இன்னபடியாகும் என்று எழுதிவைத்த இறைவன் அதை அழித்து எழுதப்போவதில்லை. நாம் வீண் முயற்சி எடுத்து என்ன பயன்? விதிப்படி நடக்க வேண்டியது நடக்கட்டும்.", என விதியை நம்பி எவ்வித சாதனையும் செய்யாது பலர் இருப்பதைக் காணலாம். இவர்களுக்குத் திருமூலர் உபதேசிப்பது யாது? ஊழை முழுக்கமுழுக்க நம்பலாமா? என்பதைச் சமன் செய்து சீர்தூக்கி விசாரணை செய்து உண்மை விளக்கம் பெறுதல் அவசியமாகும். அன்றேல் விடுதலை பெறுதல் அரிதாகும். இயற்கை நியதியே இறைவன் நியதியாகும். இன்னது செய்தால் இன்னது விளையும் என்பதே பொதுவான விதியாகும். இதன் பிரகாரம் தீமை செய்தவன் தீமை அனுபவிப்பான். நன்மை செய்தவன் நன்மையான பலனை அனுபவிப்பான். முற்பிறப்பில் செய்த வினை பிராரப்தமாகும். அதைப் பிறவியில் அனுபவிக்க வேண்டியுள்ளது. பிராரத்த வினைப் பலனை எவராலும் தடுத்தல் இயலாதென்பது உண்மையாகும். ஆனால் பிராரப்த வினைப் பலனை எவராலும் தடுத்தல் இயலாதென்பது உண்மையாகும். ஆனால் பிராரப்த வினைக்கு நாம் இன்னதை இப்போது செய்தல் வேண்டுமென நியமிக்கும் ஆற்றல் எதுவுமில்லை. பிராரப்த பலன் நமக்குக் கூடிய துன்பத்தைக் கொடுக்கலாம். ஆனால் அது எம்மைப் புதிய நல்வினை செய்யாதிருக்கும்படி ஒருபோதும் தூண்டுவதில்லை. அனுபவிக்க வேண்டிய கர்ம பலனை அனுபவித்தே ஆகும்போது புதிய நல்ல சாதனைகளை எந்த வகையிலும் செய்யத் தவற வேண்டாம் என்பதே திருமூலர் காட்டும் வழியாகும். தவிர்க்க முடியாததை அனுபவித்தே ஆகுதல் வேண்டும். செய்ய வேண்டியதை என்ன இடர் வந்தாலும் செய்தே தீர வேண்டும் என்பதே திருமந்திரத்தின் தாரகமாகும்.

இறைவனை நாடுபவர்கள் வீண் கற்பனை செய்து வினைக்குப் பயந்து சாதனை செய்யாதிருக்க வேண்டியதில்லை என்பதை மிகவும் ஆழமாக விளக்கும் ஒரு திருமந்திரம் இதோ :-

வானின் றிடிக்கிலென்? மாகடல் பொங்கிலென்?
கானின்ற செந்தீக் கலந்துடன் வேகிலென்?
தானொன்றி மாருதஞ் சண்டம் அடிக்கிலென்?
நானொன்றி நாதனை நாடுவன் நானே!

வினைக்கு அஞ்சித் தொடைநடுங்கும் பயமைத் தன்மை அடியார்களுக்கு வேண்டியதில்லை. இயமனைக்கூட எதிர்க்கும் சக்தியை மெய்ஞானிகள் பெறுதல் வேண்டும்.

எமன்வரின் ஞானவாள் கொண்டே எறிவன்
சிவன் வரின் நானுடன் போவது திண்ணம்

பவம்வரும் வல்வினை பய்டே யறுத்தேன்
தவம்வருஞ் சிந்தனைக்குத் தானெதி ராரே.

இறைவனுடைய திருவருளை முழுமையாகப் பெறும் தவமுடையோர் வல்வினையை அறுத்திடுவர். அவரிடம் ஞானவாள் இருப்பதனால் இயமனைக்கூட அஞ்சவேண்டியதில்லை. இறைவழிபாடு செம்மையாகச் செய்யும் அடியார்கள், சனி போன்ற கோள்களைக்கூட அஞ்சவேண்டியதில்லை. சனிக் கிரகத்தை பகவான் எனக் கற்பனை செய்து வணங்க வேண்டியதும், இல்லை. மலர்ப்பாதம் தரும் கடவுளை மட்டும் திரிகரண சுத்தியுடன் வழிபட்டால் போதும். கோளும் வினையும் கொடுக்கும் பலன்களை அறுத்தெறிந்து விடலாம், எனத் திருமூலர் தெளிவு படுத்துவதைப் பயின்றுணருங்கள்.

ஆளும் மலர்பதந் தந்த கடவுளை
நாளும் வழிபட்டு நன்மையுள் நின்றவர்
கோளும் வினையும் அறுக்குங் குரிசிலின்
வாளு மனத்தொடும் வைத்தொழிந் தேனே!

ஊழுக்கும் கோளுக்கும் அஞ்சாத ஆத்ம வீரர்களே மெய்யடியார்கள். அவர்களையே போற்றி அவர்களுடைய வழிகாட்டுதலின்படியே நாம் நடக்கக் கடவோம். மேற்குறித்த திருமந்திரம் தோத்திரமாக உள்ளது. இறை வழிபாடு செய்யும் போதெல்லாம் இதை அடியார்கள் தினமும் பாராயணம் செய்தல் நன்றாகும். பாராயணம் செய்தால் மட்டும் போதாது. அதற்குத்தக நிற்கவும் பயிலுதல் வேண்டும்.

## சூனிய சம்பாஷணை.

திருக்கூத்துத் தரிசனத்திற்கு அடுத்தபடியான தொகையுள்ள பாடல்களைக் கொண்ட அத்தியாயம் சூனிய சம்பாஷணையாகும். இதில் 70 பாடல்கள் உள்ளன. திருமந்திரம் முழுவதிலும் உள்ள பாடல்களைவிட இவ் அதிகாரத்தில் வரும் செய்யுள்கள் மிகவும் கடினமானவையாகும். மறைபொருள் இவற்றுள் அநேகமாகப் பொதிந்துள்ளமையால் சிறந்த ஆசிரிய குழுவின் உதவியின்றி அவற்றின் உண்மை விளக்கம் பெறுதல் அரிதாகும். நாம் இதுகாறும் படித்த பாடல்களில் இருந்து என்ன சாதனைகளை நிச்சயமாக எப்படிச் செய்தால் சிவதரிசனம் சிவப்பேறு ஆன்ம விடுதலை உண்மை விளக்கம் முதலியவற்றைச் சரிவரப் பெறலாம் என்பது நன்கு தெளிவில்லை. இதற்கு வேண்டிய சாதனா முறைகளும், விளக்கங்களும் சூனிய சம்பாஷணையில் மறைபொருளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. சூனிய சம்பாஷணையில் வரும் சூனியம் என்னும் பதமே விளங்காத புதிராக உள்ளது. சாதாரண வழக்கில் பில்லிசூனியம் என்ற பதங்கள் மாந்திரீகம் சம்பந்தமாக உபயோகிக்கப்படுகின்றது. சில மாந்திரீகர்கள் சூனியம் செய்வதில்

ஈடுபடுவதாக அறிகிறோம். இந்தச் சூனியம் செய்வதற்கு உதவியாக உள்ளது பேய் பசாசுகள் என அறிகிறோம். கடவுருக்கும் மாந்திரீக சூனியத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை. இது அனேகமாகத் தீய வழிகளிலேதான் ஒருவரைக் கெடுக்கும் பொருட்டு உபயோகிக்கப்படுகிறது. தூய நன்மையே உருவான சிவசக்தி எவருக்கும் எவ்வித கெடுதலும் செய்யக்கூடியதன்று.

சூனியம் என்பது உள்ள பொருளா? இல்லாத பொருளா? அல்லது இவை இரண்டும் அல்லாத பொருளா? பதி, பசு, பாசம் என்பன என்றும் உள்ள பொருள்கள் ஆகும். கானல்நீர், வானவில் போன்றன இல்லாத பொருள் களாகும். இந்த இரண்டிலும் சூனியமானது எந்த வகையைச் சார்ந்தது? என விசாரணை செய்யும்போது அது இவை இரண்டும் அல்லாத பொருள் எனப் புலப் படுகிறது. உதாரணமாக கணக்கு எண் இயலை எடுத்துக் கொள்வோம். இலக்கங்கள் ஒன்றில் இருந்து ஒன்பது வரையும் உள்ளன. பத்தாவது இலக்கத்தை ஆக்கும் பொழுது ஒன்று என்னும் இலக்கத்துடன் சைபர் அல்லது பூச்சியத்தைச் சேர்த்து 10 என வழங்கிறோம். பத்தில் வரும் பூச்சியத்தை ஓர் எண் எனக் கொள்வாரில்லை. அது எண் அல்லாத ஒரு பொருளாகும். அதற்குத் தனி மதிப்பு ஒன்றும் இல்லை. இவ் உண்மையை திருமூலரே நான்காவது தந்திரத்தில் திருவம்பல சக்கரம் என்னும் அதிகாரத்தில் நயம்பட விளக்கியுள்ளார். எனவே சூனிய சம்பாஷணையில் சூனியத்திற்கு விசேடமான விளக்கம் கொடுக்க வில்லை. நான்காவது தந்திரத்தைப் படிக்கும்போது சூனியத்திற் கவனம் செலுத் தாது மேலெழுந்தவாரியாக அதைப் படித்த வாசகர்களுக்கு விசேடமாக அதில் இருந்து சூனிய விளக்கம் கொடுக்கும் ஒரு செய்யுளை இவண் தருகிறோம். சக்கரம், பூச்சியம், சூனியம் என்னும் பதங்கள் ஒரே பொருளைச் சைவசித்தாந்த தத்துவம் குறிப்பதாகும்.

எட்டும் இரண்டும் இனிதறி கின்றிலர்
எட்டும் இரண்டும் அறியாத ஏழையர்
எட்டும் இரண்டும் இருமூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே.

திருமூலர் இங்கு குறிப்பிடும் சித்தாந்த சன்மார்க்க பாதம் சிதம்பர சக்கரமாகவும் திகள்கிறது. புனிதத்திற் புனிதமான சிதம்பர ஆலயத்திலே இது சிதாகாசமாகப் பொலிவுறுகிறது. சிதம்பர தரிசனம் செய்வோர்களிற் பெரும் பான்மையோருக்குச் சிதாகாசம் சிதம்பர சக்கரமாக—புரியாத புதிராக உள்ளது. சிதம்பரத்தில் உள்ள சிலையைத் தரிசிப்போர் அங்குள்ள சிதாகாசத் தைச் சரிவரத் தெளிந்து தரிசித்தல் அரிதாகும். உண்மை யாதெனின் சிதம்பரத் தில் சிதாகாச தரிசனம் பெறாதோர் சிவ சொரூப தரிசனம் பெறாதவராவர் எட்டும் இரண்டும் கூட்டப்பட்டால் பத்தாகும். சைவ சித்தாந்தம் எட்டையும் இரண்டையும் வேறொரு விதமாகக் கூறுகிறது. அதை இருமூன்றும் நான்கும் 6+ என விளக்குகின்றது. எட்டும் இரண்டும் தமிழ் எண்ணில் அ உ ஆக உள்ளது.

அ – பரம்பொருள், உ – உயிரென்பதாகும். இந்த இரண்டும் ஒன்று கலக்கும்போது உயிர் புச்சியமாகிய சூனியமாகிறது.

இந்த சூனிய நிலையை நாம் அடைய வேண்டுமாயின் செய்யவேண்டிய சாதனையைக் குறிப்பதே ஆறும் நான்கும் ஆகும். ஆறும் நான்கும் சேர்ந்து உருவாகுவது சிவலிங்கமாகும். சிவலிங்கத்தைப் பற்றிய விளக்கம் மிகவும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. சிவலிங்க வழிபாடுதான் சைவர்களுக்கு முக்கியமானதாகும். சிவலிங்க வழிபாட்டின் மறை பொருளும் சிதாகாச தரிசனத்தின் உட்பொருளும் தொகுத்து ஓதப்பட்டதே சூனிய சம்பாஷணையின் சாரமாகும். சிவலிங்கத் தத்துவ விளக்கத்தில் வரும் சாதனைக்குரிய ஆறையும் நான்கையும் பற்றித் திருமந்திரத்தையே மேற்கோளாகக் கொண்டு சற்று ஆய்வோம். ஆறு என்பது ஆத்மா ஈடேறுவதற்கு வேண்டிய சாதனை செய்வதற்கு உதவியாக உள்ள ஆறு ஆதாரங்களுமாகும். இந்த ஆறு ஆதாரங்களையும் நன்நெறிப்படுத்துவதே ஆறு அத்துவாக்களின் சுத்தியாகும். இதைச் சிவயோகம் என்பர். பதஞ்சலி முனிவர் ஆக்கிய தவயோகத்திற்கும் சிவயோகத்திற்கும் வேறுபாடு உண்டு. சிவயோகிகள் கடும் தவம் எதுவும் செயற்கையாகச் செய்ய வேண்டியதில்லை. அவர்கள் செய்யவேண்டியதெல்லாம் ஆறு அத்துவாக்களின் சுத்தியும், நான்கு கரணங்களின் சுத்தியுமேயாகும். ஆறும் நான்கும் குறிக்கும் மறைபொருள் இதுவாகும். இச் சிறு ஆய்வுரையில் இவற்றைப் பற்றிய பேருரை கொடுத்தல் இயலாது. எனவே ஆறு அத்துவாக்களும் நான்கு கரணங்களும் யாவை? என்பதைச் சுருக்கமாக முதலில் அறிந்துகொண்டு அவற்றைச் சுத்தி செய்ய வேண்டிய சாதனைகளைப் பற்றிப் பின்பு கவனிப்போம்.

இரு வினைகளினாலேதான் இறப்புப் பிறப்பும், இன்ப துன்பமும் பாவ புண்ணியமும் ஏற்படுகின்றன. இரு வினை நீக்கமே அத்துவாசுத்தியமாகும். இரு வினை ஆற்றுவதற்கு ஆதாரமாக ஆறு வாயில்கள் உள்ளன. அவற்றை முறையே எழுத்து, சொல், மந்திரம் (அல்லது சொற்றொடர்), கலை, தத்துவம், புவனம் என்னும் ஆறு எனக் கூறுவர். இவற்றை இருமைவகையாகிய அசுத்த நிலையில் மனதில் சிந்தனைகளாகப் பதிவு செய்து செயற்படும்போதுதான் இருவினை உருவாகின்றது. இவற்றை இங்ஙனம் அசுத்தமாக்கிச் சிந்தனைக்கும் செயலுக்கும் செலுத்துவது அந்தக் கரணங்களாகும். அந்தக் கரணங்கள் நான்கு ஆகும். அவையாவன மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பனவாகும். இவை உளவியற் தத்துவங்களாகும். இவை பொதுவாக தம்முள்ளே எதிர்ப்புச் சக்தினை இருமைவகையிற் கொண்டுள்ளனவாகும். இவற்றில் உள்ள இருமைவகைப் பிரிவினைச் சக்தியே இவற்றின் அசுத்தமாகும். இதை நீக்கி ஒருமைப்பாடுள்ள அத்துவித தியான ஜெப சாதனையில் வெற்றி காண்பதே கரணசுத்தியாகும்.

சூனிய சம்பாஷணையில் வரும் மகுடம் போன்ற மறைபொருள் பொதிந்த சாதனை வழி காட்டும் ஓர் அற்புதமான பாடலை இங்கு தருகிறோம்.

வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது,
புழுதியைத் தோண்டியேன் பூசனி பூத்தது,
தொழுதுகொண் டோடினார் தோட்டக் குடிகள்,
முழுதும் பழுத்தது வாழைக் கனியே.

சித்தர்கள் தமக்கே உரிய பாஷையில் சித்தாந்தத் தத்துவக் கருத்துக்களை பிறர் இலகுவில் விளங்க முடியாத சங்கேத பதங்கள் மூலம் எடுத்துச் சில வேளைகளில் உரைப்பதுண்டு. சித்தர்களுக்குத் தலைவராகிய திருமூலர் இப் பாடலில் உபயோகித்துள்ள சங்கேத பதங்கள் மூலம் மறைபொருளை விளக்குவதாகும். இந்தச் சங்கேத பதங்களுக்குரிய சாதாரண சொற்களை இத்தன்மையென அறிந்து கொண்டு பாடலின் முழுமறை பொருளையும் சாதனைகளையும் கவனிப்போம்.

1. வழுதலைவித்து :- கத்தரிவிதை - இது சிவயோகப் பயிற்சி ஆகிய அத்துவா - கரண சுத்தியைக் கொடுக்கும் பஞ்சாட்சர செப தியானத்தை மறைபொருளாகக் குறிப்பதாகும்.

2. பாகல் முளைத்தல் :- விருப்பு வெறுப்பற்ற வைராக்கிய பக்தி உதயமாகுதல். இது மனச்சார்பற்ற நிலை உருவாகுதலைக் குறிக்கின்றது.

3. புழுதியைத் தோண்டுதல் :- தத்துவ ஆய்வு செய்து 36 தத்துவங்களையும் கடந்து நிற்பதே சிவம் எனத் தெளிதல்.

4. பூசனி பூத்தல் :- ஒளிமயமான சிவசொரூபம் ஞானக் கண்ணுக்கு மாசறு காட்சியாகப் புலப்படுதல்.

5. தோட்டக் குடிகள் :- மனஇந்திரிய விடயங்களும் அவற்றால் ஏற்படும் சுட்டறிவும்.

6. வாழைக்கனி :- சைவ சித்தாந்த தசகாரியசாதனையின் பயனாய் இயற்கையாகவே முதிர்ந்து கனியும் வாழைப்பழம் போன்ற ஆத்மலாபத்தையும் சிவப்பேறாகிய பேரின்பத்தையும் எடுத்துக் காட்டுவதாகும்.

இனி இதை நன்கு தெளிந்து விளங்கிக் கொண்டு இதன் அகப்பொருளை விசாரணை செய்தல் விசேடமாகும். விதை ஒன்று போட முளைவேறென்று வருதல் உலகியலில் காணமுடியாததாகும். ஆனால் ஆத்மீக உலகில் இந்த அற்புதம் நிகழ்கிறது. கத்தரி விதையிடல் பாகல் செடி முளைக்கும் மர்மத்தை இங்கே காண்கிறோம். இருமை வகையுள்ள உள்ளத்தில் ஓங்கார பஞ்சாட்சர செப தியானம் வழுவற ஒழுங்காகச் செய்யும் சாதகர்களுக்கு மனத்தில் எழும் எதிர்ப்புச் சக்திகள் நீங்கி நடுவு நிலை உள்ள வைராக்கிய பக்தி முறைக்கும் வைராக்கிய பக்தியினால் வளர்வதே இருவினை ஒப்பாகும். இருவினை ஒப்பில்லாது இருவினை

நீங்குவதில்லை. மனம் பக்கச்சார்பற்ற சமநிலை அடையும் பொருட்டுச் சாதகர்கள் ஓங்கார பஞ்சாட்சர செபதியானம் செய்தல் வேண்டும். இதன் விபரங்களை ஒன்பதாம் தந்திரத்தில் வரும் தூலபஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம், அதி சூக்கும பஞ்சாட்சரம் ஆகிய அதிகாரங்களிற் காண்க. தத்துவ ஆய்வு செய்யும் சாதனைக்கு மனம் நடுவு நிலையில் நிற்றல் அவசியமாகும். தத்துவ ஆய்வு உண்மையான தத்துவ விசாரணையாக இருத்தல் வேண்டும். அது எவ்வித கருத்துக்களையோ அல்லது கொள்கைகளையோ சார்ந்து நடத்தப்படும் விவாதம் அன்று. உண்மை விளக்கம் வேறு, கொள்கை விளக்கம் வேறு. கொள்கை விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு விவாதம் செய்பவர்களாலேயே சொற்போர், சண்டை சச்சரவுகள் உண்டாகின்றன. 36 தத்துவங்களையும் கடந்தி பிரணவ சமாதி அடைதலே தத்துவ விசாரணையின் நோக்கமாகும். மனஇந்திரியத்திற்குப் புலப்படும் பஞ்ச பூதங்களான பிரகிருத்தி மாயையானது படிப்படியாக உரு விழந்து அசுத்த மாயையாகவும், சுத்த மாயையாகவும் நுண்ணிதாக மாறுவதைப் புலப்படுத்துவதே தத்துவமாகும். 36 தத்துவங்களுள் பிரகிருத்தி மாயா தத்துவம் 24 அசுத்த மாயா அல்லது ஆத்ம தத்துவம் 07, சுத்தமாயா அல்லது சிவ தத்துவம் 05 ஆகும். இவற்றுள் சுத்த மாயா தத்துவ சக்தி ஒருகை விளக்குப் போன்றதாகும். இதைக் கொண்டே தத்துவ உண்மை பெற்று தத்துவங்களை நீக்க லாம். தத்துவங்கள் யாவும் நீங்கிய போதுதான் மாசறு காட்சி புலப்படும். அதுவே சிவதரிசனமாகும். இதை மதச்சார்பற்றவர்கள் தத்துவ தரிசனம் அல்லது மெய்யுணர்தல் என வழங்குவர்.

இதற்கு அடுத்ததாக வரும் தோட்டக் குடிகள் என்னும் சொற்றொடர் சரீரமாகிய தோட்டத்தில் வாழும் மனஇந்திரியங்களாகிய குடிகளைக் குறிப்பனவாகும். தோட்டக் குடிகளின் விசேடமான மறைபொருள் மனதில் பதிய வைத்திருக்கும் சுட்டறிவாகும். மாசறு காட்சியாகிய மெய்யுணர்தல் மலரும்போது சுட்டறிவுக்கு அங்கே இடமேது? சூரியன் உதயமாகும்போது இருள் சுயமாகவே நீங்கிவிடும். சிவஞானபோத ஒளி பிரகாசிக்கும் போது அறியாமையாகிய இருளும் சுட்டறிவாகிய மருளும் சுயமாக தொழுதுகொண்டோடிவிடும். அவற்றை ஓடச் செய்யும் செயற்கையான முயற்சி எதுவும் எடுக்கவேண்டியதில்லை.

முக்கனிகளாகிய பலா, மா, வாழைகளில், வாழைக் கனியே சிறந்ததாகும். இக் கனியில் மற்றைய பழங்களைப் போல முளைக்கும் வித்துக்கிடையாது. சிற்றின்பமானது இறப்புப் பிறப்புக்கு வித்தாகிறது, அது பலாப்பழம், மாம்பழம் போன்றதாகும். பேரின்பம் இறப்புப் பிறப்பில்லாததாகும். அதை வித்தில்லாத வாழைக் கனிக்கு உவமை கூறிய கவிநயம் இப்பாடல் முடிவில் தெவிட்டாது சுவைக்கிறது. இச் சுவை சாதகர்களுக்குச் சிவதரிசனமும், சிவப்பேறும் ஆத்மலாபமாகப் பெறுதற்குச் சிறந்த தூண்டுகோலாக அமைகிறது.

பேராப் பெருவாழ்வு கொடுத்து எம்மை இரட்சிக்கும் ஆரா அமுதாகிய பரம்பொருளைத் தோத்தரிக்கும் ஒரு திருமந்திரத்துடன் இந்த ஆய்வு உரையை முடிவு செய்வோம். இச் சிறப்பு ஆய்வைப் படிப்பதன் மூலம் எவரும் நேரடி

யாகச் சிவப்பேறு பெறுதல் அரிதாகும். ஒன்பதாம் தந்திரம் வெறும் போதனைக்குரியதன்று. இதில் கூறப்பட்டுள்ள வழிகாட்டல் முறைகளை நன்கு சாதனை செய்தாற்றான் பேராப் பெருவாழ்வு வாழலாம். பேராப் பெரு வாழ்வு அமரத்துவமாகிய மரணமிலாப் பெருவாழ்வாகும். அதன் திருவருளின்றி இவை கை கூடாது. எனவே அவன் திருவருள் வேண்டி அல்லும் பகலும் தூய சிந்தையுடன் ஒன்பதாம் தந்திர முடிவில் வரும் இத் திருத்தோத்திரத்தைக் கசிந் துருகி ஓதிவருவோம்.

விண்ணிலும் வந்த வெளியிலன் மேனியன்
கண்ணிலும் வந்த புலனல்லன் காட்சியன்
பண்ணிலும் வந்த பயனல்லன் பான்மையன்
எண்ணிலா னந்தமும் எங்கள் பிரானே!

## வாழ்த்து

வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே!
வருகவே வருக பேராப்பெரு வாழ்வே!
நிலவவே நிலவுக மோன சமாதியே!
ஓதவே ஓதுக திருமந் திரமே!

**திரு. நா. செல்லப்பா**

# திருமந்திரம்

# சிறப்பு நிகழ்ச்சி

இடம் : 'சிவானந்த நிலையம்' - சைவமங்கையர் கழகம்
உருத்திரா மாவத்தை, வெள்ளவத்தை — கொழும்பு - 6.

காலம் : **09 - 11 - 1992** திங்கட்கிழமை (நிறைமதி நாள்)

நேரம் : **4-00 பி-ப — 8-00 பி-ப**

## நிகழ்ச்சி நிரல்

**4-00 பி-ப** வேதபாராயணம் — திருமந்திரம் ஓதுதல்

**4-05 பி-ப** வரவேற்புரை
( திரு கு. குருசுவாமி அவர்கள் )

**4-15 பி-ப** தலைமையுரை
( திரு வே. ந. சிவராஜா அவர்கள் )

**4-45 பி-ப** திருமந்திரத்தில் அறவாழ்க்கை
( வித்துவான் க. ந. வேலன் அவர்கள் )

**5-15 பி-ப** திருமந்திரத்தில் யோகப் பழக்கம்
( திரு பெ. கணநாதப்பிள்ளை அவர்கள் )

**5-45 பி-ப** திருமந்திரத்தில் சமய ஒழுக்கம்
( திரு வ. சிவராஜசிங்கம் அவர்கள் )

**6-15 பி-ப** திருமந்திரத்தில் குருநெறி நிற்றல்
( திரு ஆ. குணநாயகம் அவர்கள் )

**6-45 பி-ப** திருமந்திரத்தில் பேராப் பெருவாழ்வு
( திரு நா. செல்லப்பா அவர்கள் )

**7-15 பி-ப** நிறைவுரை
( சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி ஷிஓம்ஷா் )

**7-25 பி-ப** 'திருமந்திரம் சிறப்பு நிகழ்ச்சி மலர்'
'**Flower of Silence**' நூல்கள் வெளியீடு
( வெளியீடு செய்பவர் : இந்துகலாச்சார இராஜாங்க அமைச்சர்
மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்கள் )

**7-40 பி-ப** நன்றியுரை
( டாக்டர் இரா. மகாலிங்கசிவம் அவர்கள் )

**7-55 பி-ப** வேதபாராயணம் — திருமந்திரம் ஓதுதல்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
வரை நிலைச் சுவ.
78
பதிவு இல. 10. 5 1986
அறக்கட்டளை நிலையம்
14 5
கடிசட இல 7 68



Publication & Copyright: Mounashram Trust. Wellawatte, Colombo, Sri Lanka.

OSKHA ENTERPRISES 98 B, RATNAM ROAD, COLOMBO 13